UNIVERSAL LIBRARY
OU_208187
UNIVERSAL LIBRARY

OUP—552—7-7-66—10,000

OSMANIA UNIVERSITY LIBRARY

Call No. Tm 894.8113 R178I.. Accession No. Tm 4

Author Ramasami Pulaver.

Title Ilakkya Siru kalttai koti 4. Part. 19

This book should be returned on or before the date last marked below.

௧ வெளியீடு - ௬௭௨

இலக்கியச்

# சிறு கதைக் கொத்து

(நான்காம் பாகம்)

[ ௮௬. இன்சுவைக் கதைகள் ]

இயற்றியவர் :
சு. அ. இராமசாமிப் புலவர்

:: திருநெல்வேலித் தென்னிந்திய ::
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
திருநெல்வேலி & சென்னை 1

[ALL RIGHTS RESERVED]

PUBLISHED BY
THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
THIRUNELVELY & MADRAS.
OCT. 1948

# பதிப்புரை

‘ சீரார் கதைகற்பார் செம்மை அறிவினராய்ப்
பேரார் புகழ் செல்வம் பெற்றுயர்வர் ’

சின்னஞ் சிறு கதைகளால் அரும்பெரும் உண்மைகள் அழகாகவும், எளிதாகவும், இனிதாகவும் விளங்குகின்றன.

தமிழ் இலக்கியங்களிடையே காணபபடுங் கதைக் குறிப்புகளைக்கொண்டு இலக்கியச் சிறு கதைகள் என்ற வரிசையில் எட்டு நூற்கள் வெளியிட்டுள்ளோம். விளக்கமான கதைகளுடன், அக்கதையை அடக்கிநிற்கும் பாடல்களும் உரைக் குறிப்புக்களோடு கொடுக்கபபெற்றிருக்கின்றன

இப்பொழுது அழகிய மேலுறையுடன் பரிசளிபபுக்கும் நூல்நிலையங்கட்கும் ஏற்றனவாக நான்கு தொகுதிகளாக அவற்றை வெளியிடுகின்றோம்

அறிஞரும் மாணவரும் அனைவரும் வாங்கிக் கற்று இத்தகைய வெளியீட்டுமுயற்சிக்கு ஆதரவளிபபார்களாக.

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்

# பொருளடக்கம்

க. இலக்கியச் சிறு கதைகள் பகுதி எ
உ. இலக்கியச் சிறு கதைகள் பகுதி அ

கழக வெளியீடு ,—௬௫௬

# இலக்கியச் சிறுகதைகள்

## ஏழாம் பகுதி

※

ஆக்கியோன் :
புலவர் சு. அ. இராமசாமி

※

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்
திருநெல்வேலி, :: சென்னை.

பதிப்புரிமை] [அணா 12

**First Edition: March 1948.**

*[All Rights Reserved]*

Published by
THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
PUBLISHING SOCIETY, TINNEVELLY LTD.
TIRUNELVELY : . & MADRAS.

P. I. C. Ms. 95-B

---

**The Royal Printing Works, Mount Road, Madras.**
M S. 175 C. 500.

# முகவுரை

குறளைச் செய்யுட்களில் அமைந்துள்ள பொருள் களைச் சிறு சிறு கதை வடிவாக அமைப்பின் இலக்கியப் பயிற்சி பெறுபவர்களுக்குப் பேருதவியாக இருக்கு மென்று திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் ஆட்சிப் பொறுப்பாளரும், அக்கழகத்தை அது தொடக்ககாலத்திலிருந்தே நன் முறையில் இயக்கிவருபவரும் நுண்ணறிவுமிக்காருமாகிய திருமிகு. வ. சுப்பையா பிள்ளையவர்கள் எண்ணினார்கள். அக்கருத்தைப் பண்டித வித்துவான் திருமிகு. பொன். இராமநாதன் செட்டியாரவர்களிடமும் என்னிடமும் அறி வித்தார்கள். அக்கருத்து மிகச் சிறந்ததென்று எங் கட்குந் தோற்றியது. நாங்கள் உடனே அவ்வேலையில் ஈடுபட்டோம். முதல் நான்கு பகுதிகள் வெளிவந்தன. அவைகளைக் கண்ணுற்றோர், இஃது இலக்கியப் பயிற்சிக் குப் புதிய முறையாக விருக்கிறதென்று தங்கள் நல் லெண்ணத்தைப் புலப்படுத்தினார்கள்.

பல காரணங்களால் இராமநாதன் செட்டியாரவர்கள் இவ்வேலையில் ஈடுபட முடியாதவர்களானார்கள். பின்னர் நான் ரு, சா-ஆம் பகுதிகளை எழுதி முடித்தேன். அவை முன்னரே வெளிவந்தன. இப்போது, எ, அ-ஆம் பகுதிகள் வெளிவருகின்றன. இவ்வரிசைக்கு இவை களே இறுதிப் பகுதிகளாம்.

இந்த எட்டுப் பகுதிகளிலும்,

| | |
|---|---|
| காஞ்சிப் புராணம் | விவேக சிந்தாமணி |
| திருவிளையாடற் புராணம் | தேவாரம் |
| கந்த புராணம் | திருவேங்கோய்மலை எழுபது |
| கம்ப ராமாயணம் | நக்கீரர் பாடல் |

| | |
|---|---|
| நைடதம் | நரி விருத்தம் |
| கலிங்கத்துப்பரணி | வேதநாயகம் பிள்ளை நீதி நூல் |
| சூளாமணி | திருமந்திரம் |
| தேம்பாவணி | கைவல்லிய நவநீதம் |
| தனிப்பாடல் திரட்டு | தண்டலையார் சதகம் |
| தனிச்செய்யுட் சிந்தாமணி | நன்னெறி |
| பெருந்தொகை | அருணைக் கலம்பகம் |
| பன்னூற்றிரட்டு | மீனாட்சிசுந்தரம் பிள்ளை பாடல் |
| நாலடியார் | நீதிவெண்பா |
| திருக்குறள் | நீதிநெறி விளக்கம் |
| குசேலோபாக்கியானம் | பழம் பாடல் |
| திருவாரூர் நான்மணிமாலை | தரும தீபிகை |
| பெரியபுராணம் | கொலை மறுத்தல் |
| சோண சைலமாலை | புறநானூறு |

முதலிய பல நூல்கள் எடுத்தாளப் பெற்றுள்ளன. பெரும்பாலும் தனிப்பாடல் திரட்டு, தனிச் செய்யுட் சிந்தாமணி ஆகியவற்றின் பாடல்களே அமைந்துள்ளன. கதைகளின் இறுதியிற் பாடலும் அரும்பதவுரையும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

இந்த இலக்கியச் சிறுகதைவரிசைகளைப் படிப்பவர்கள் பல இலக்கியங்களையும் படிக்கும் ஆற்றல் பெறுவார்களென்பது திண்ணம். ஆகவே, அன்பர்கள் இவ்விலக்கியச் சிறுகதைவரிசைகளுக்குத் தக்க ஆதரவு தந்து இத்தகைய நூல்கள் பல தோன்றுமாறு செய்வார்களென்று நம்புகிறேன்.

பைந்தமிழ்ப் பண்ணை,
கருப்பக்கிளர்.
1-12-1947

**சு. அ. இராமசாமி.**

# பொருளடக்கம்


| எண் | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | இறைவன் பிறையணிவது ஏன்? | ... | 1 |
| 2. | முத்தப்ப செட்டியார் | ... | 3 |
| 3. | குதிரைக் கதை | ... | 6 |
| 4. | பொய்க்குப் பொய் | ... | 8 |
| 5. | அரசனுக்கு இயற்கை வரவேற்பு | ... | 10 |
| 6. | புகழ்ச்சியைக் கேட்டால் இகழ்ச்சியா வரும்? | ... | 12 |
| 7. | இருளும் ஒளியும் இகலுதல் | ... | 14 |
| 8. | ஊழின் உறுதி | ... | 16 |
| 9. | எந்த வினை தீர்ப்பார் இவர்? | ... | 19 |
| 10. | தீயவர் சேர்க்கை தீமை பயக்கும்? | ... | 21 |
| 11. | திருமாலும் கடிகாரமும் | ... | 23 |
| 12. | விடுகவி | ... | 25 |
| 13. | அறிஞரும் அறிவிலாச் செல்வனும் | ... | 26 |
| 14. | வரால் கூட்டங்களின் மருட்சி | ... | 30 |
| 15. | கடன் வாங்கிய கனவான் | ... | 31 |
| 16. | புகழுவதாற் பயனேது? | ... | 34 |
| 17. | குறும்புக்குப் பரிசு | ... | 36 |
| 18. | பேதையின் பெருங்கொடை | ... | 38 |
| 19. | செய்யுட்குரியவரிடஞ் செல்லுங்கள் | ... | 39 |
| 20. | சொல்லேருழவர் பகை | ... | 41 |
| 21. | பாவாணர்க் கஞ்சும் பதடி | ... | 44 |
| 22. | பெற்றோர் பெருமை | ... | 47 |
| 23. | நெற்பயிரும் நேரிழையாரும் | ... | 50 |

| | | |
|---|---|---|
| 24. | வறுமையிலுஞ் செம்மை ... | 51 |
| 25. | கன்றின் குற்றத்திற்குக் கழுதைக்குத் தண்டனை ... | 53 |
| 26. | இன்பதுன்பப் பற்று ... | 56 |
| 27. | பிணங்கிடந்தால் உனக்கென்ன ? ... | 57 |
| 28. | கணிகையர் கடவுளரைப் போன்றவர் ... | 59 |
| 29. | கோழிகள் மாநாடு ... | 60 |
| 30. | இழிந்தோர்பாற் செல்லும் உயர்ந்தோர் ... | 64 |
| 31. | துன்பமும் இன்பமும் தொடர்ந்துவரும் ... | 65 |
| 32. | புகழ்தலில் வைதல் நன்று ... | 67 |
| 33. | ஆயத்தைப் போன்ற அணிநிப் பொய்யைக | 68 |
| 34. | விலைமகளே தரு ... | 70 |
| 35. | கற்புடைக் காரிகை .. | 72 |
| 36. | இடங்கொடுத்தால் மடம் பிடுங்குவார் ... | 73 |
| 37. | அப்பாசாமியின் அறியாமை ... | 75 |
| 38. | தாழ்ந்தோர் உயர்வர் ... | 77 |
| 39. | இனிய மொழி .. | 79 |
| 40. | பாவலர்க்குச் சோறளித்த பாமரன் ... | 81 |
| 41. | மாடு தின்பான் பார்ப்பான் .. | 83 |
| 42. | ‘ என்னையிடுக்கடி பாயைச் சுருட்டடி ’ ... | 85 |
| 43. | பாட்டாக வந்த பதில் ... | 87 |
| 44. | புலவர் தம் மனைவிக்குப் பகன்றது ... | 89 |

# இலக்கியச் சிறுகதைகள்

## (ஏழாம் பகுதி)

---

## 1. இறைவன் பிறை யணிவது ஏன்?

இராமநாதபுரம் அரசராகவிருந்த முத்து ராமலிங்க சேதுபதியும் சரவணப் பெருமாள் கவி ராயர் என்பவரும், ஒருநாள் இன்னுரையாடி இனிது மகிழ்ந்துகொண்டிருந்தனர். இருவரும் நல்ல அறி வாளிகள். அறிவாளிகள் தம்மைப்போன்ற அறி வாளிகளுடன் உரையாடி மகிழ்தலைப்போன்ற இன்பம் இவ்வுலகில் வேறியாதுளது?

ஒருவர் யாதேனும் ஒரு பொருளைப்பற்றி ஐயப் பட்டவர்போல ஒரு வினவை யெழுப்புவார். மற்ற வர் அதற்குத் தம் திறமைக்குத் தக்கபடி விடை யிறுப்பர். முத்துராமலிங்க சேதுபதி ஒருநாள் உரையாடிக் கொண்டிருக்கும்போது புலவரை நோக்கி, 'இறைவன் தன்னுடைய முடிமீது பிறைத் திங்களை ஏன் அணிந்திருக்கின்றான்?' என்று ஒரு கேள்வியைக் கேட்டார்.

இறைவன் பிறைத் திங்களைத் தன் முடிமீது தாங்கியிருப்பதன் காரணம் அரசருக்கோ புலவ ருக்கோ தெரியாததன்று. அச்செய்தி எல்லோரும் நன்குணர்ந்ததே. ஆயினும் அரசர் ஏன் அவ்வாறு

கேட்டாரென்றால், 'புலவர் புதுக் காரணம் யாதே னுங் கற்பித்து வேடிக்கையாகப் பதில் கூறுவார்; அதனைக் கேட்டு மகிழலாம்' என்றே அவ்வாறு கேட்டார். அரசருடைய எண்ணம் வீண்போகவில்லை. ஒரு காலத்தில்—அஃதாவது வியாச முனிவர் பாரதக் கதையைக் கூறிய காலத்தில்—ஆனைமுகக் கடவுள் அக்கதையை மாமேரு மலையில் எழுதுவதற்குத் தம்முடைய இரண்டு கொம்புகளில் ஒன்றை ஒடித்துவிட்டார். ஆகலால் அவருக்கு ஒரு கொம்பு அரை குறையாகவே யிருந்தது. ஆனைமுகக் கடவுள் என்றாவது அக்கொம்பைப்பற்றி நினைத்துக் கொண்டு தன்னிடம் கேட்டுத் தொல்லை செய்தால் யானைக்கொம்பு போன்று விளங்கும் திங்கட் பிறையைக் கொடுத்துத் தேற்றலாம் என்றே பிறைத் திங்களை யணிந்துகொண்டிருப்பதாக விடை யளித்தார். புலவர் விடை அரசருக்கு மகிழ்ச்சியை யளித்தது.

நஞ்சுடைய கண்டத்து நாதன் முடிமீ து
குஞ்சு மதியணிந்து கொள்வானேன்—அஞ்சாமல்
மூத்தபிள்ளை அன்று முறித்தகொம்பைக் கேட்குமென்று
சேர்த்துவைத்துக் கொண்ட திறம்.

(அ - ரை) குஞ்சு மதி - பிறைத்திங்கள்.

## 2. முத்தப்ப செட்டியார்

செட்டிமார் நாட்டிலே ஓர் ஊரில் இரண்டு செட்டியார்கள் இருந்தார்கள். 'இரண்டு செட்டியார்கள் மட்டுந்தான் ஒரூரில் இருந்தார்களோ?' என்று ஐயப்படாதீர்கள். எத்தனையோ செட்டியார்கள் இருந்தார்கள். அவர்களுள் இரண்டு பேரைப்பற்றிமட்டுந்தான் இங்குப் பேச்சுவருகிறது. இருவருடைய பேரும் 'முத்தப்ப செட்டியார்' என்பதுதான். இருவரில் ஒருவர் வீடு தெருவின் மேல் பக்கமாகவும் ஒருவர் வீடு கீழ்ப்பக்கமாகவும் அமைந்திருந்தது. இருவரும் செல்வ நிலைமையில் பெருஞ் செல்வர்களும் அல்லர்; வறியவர்களும் அல்லர்; நடுத்தரமான நிலைமையில் இருந்தனர்.

செல்வம் ஒரே அளவாக இருந்ததாயினும் பண்புநலம் இருவருக்கும் வேறுபட்டிருந்தது. கீழ வீட்டு முத்தப்ப செட்டியார் பிசின குணம் படைத்தவர்; எச்சிற் கையாற்கூடக் காக்கையை விரட்டமாட்டார். எந்த வழியிலாவது மேன் மேலுஞ் செல்வந்தேடவேண்டு மென்பதே அவருடைய நோக்கம். பித்துக்கொள்ளியைப் போலப் பேசுவார். திருட்டெண்ணமும் உண்டு. பிறருக்குத் தீங்கு செய்வதற்கும் அஞ்சமாட்டார். மேல வீட்டு முத்தப்ப செட்டியாரோ கீழ வீட்டு முத்தப்ப செட்டியாருக்கு எதிர்மாறனவர். வறியவர்களுக்கும் புலவர்களுக்கும் தாராளமாகப் பொருள் வழங்குவார். நேர்மையான வழியிலேயே பொருள் தேடுவார்.

ஒருநாள் ஒரு புலவர், இரண்டு முத்தப்ப செட்டியார்கள் மேலும் பல் புகழ்ப் பாடல்கள் பாடிக் கொண்டு சென்ருர். முதலில் கீழ வீட்டு முத்தப்ப செட்டியாரைப் போய்ப் பார்த்துத் தம்முடைய பாடல்களைப் படித்துக்காட்டினர். அறிவு சிறிதும் இல்லாத கீழ வீட்டு முத்தப்ப செட்டியார் புலவரைப் பெரிதும் நையாண்டி செய்து இகழ்ந்ததுடன், ஒன்றுங் கொடுக்காமல் போகச் சொன்னர். பிறகு புலவர் மேல வீட்டிற்குச் சென்று அந்த முத்தப்ப செட்டியாரிடம் தம்முடைய பாடல்களைப் படித்துக் காட்டினர்.

மேல வீட்டு முத்தப்ப செட்டியார் புலவர் பாடலைக் கேட்டு மகிழ்ந்தார். புலவர் உள்ளங் களிக்குமாறு பலவகை நன்கொடைகள் வழங்கினர். விருந்தளித்துப் பெரிதும் போற்றினர். இரண்டு முத்தப்ப செட்டியார்களுடைய தன்மையையும் புலவர் நன்கு எண்ணிப்பார்த்தார். கீழ வீட்டு முத்தப்ப செட்டியாருடைய கீழ்மைக் குணமும், மேல வீட்டு முத்தப்ப செட்டியாருடைய மேன்மைக் குணமும் புலவர் உள்ளத்தில் மாறி மாறித் தோன்றின.

முத்தப்ப செட்டியார் என்னும் பெயருக்குப் பொருள் யாதென்று ஆராய்ந்தார். அவருள்ளத்தில் புதிய பொருள் ஒன்று தோன்றிற்று. மூன்று தப்பி (தவற்றினை-பிழையி)னை யுடையவன் முத்தப்பன் (மும்மை+தப்பன்=மு த் த ப் ப ன்) என்று பொருள் செய்தார். உடனே அவர் மேல வீட்டு முத்தப்ப செட்டியாரைப் பார்த்து, ‘சித்தப்பிரமை,

திருட்டு எண்ணம்; 'தீங்கு ஆகிய மூன்று தப்பினையு முடையவனுக்கு 'முத்தப்பன்' என்று பெயர் வைத்திருக்கிறார்கள்; ஆனல் எத்தப்புமே யில்லாமல் மிகவும் நல்லவராக விளங்குகிற நீவிர் எப்படி அப் பெயரைப் பெற்றீர்? அதனை எனக்குக் கூறுவீராக' என்று கேட்டார். புலவர் கூற்றைக் கேட்ட மேல வீட்டு முத்தப்ப செட்டியார் மகிழ்ச்சியடைந்தார். கீழ வீட்டு முத்தப்ப செட்டியாரோ சோம்பேறிப் புலவர்களுக்குப் பொருள் கொடுக்காவிட்டால் இப்படித்தான் ஏதாவது வைவார்கள் என்று முணுமுணுத்துக்கொண்டார்.

சித்தப் பிரமை திருட்டெண்ணந் தீங்குடனே
முத்தப்பும் உள்ளானை முத்தப்பன் என்றுரைத்தார்
எத்தப்பும் இல்லாநீர் எப்படியோ கைக்கொண்டீர்
மெத்தப் புகழ்படைத்த மேலவீட் டுள்ளாரே.

(அ - ரை.) சித்தப்பிரமை - மனக்கலக்கம். மெத்த - மிகவும்.

# 3. குதிரைக் கதை

ஒரு பெண் தன்னுடைய தோழி ஒருத்தியைப் பார்த்துக் கூறுகிறாள்:

"சுந்தரி! ஒருநாள் என்னுடைய கணவர் ஒரு செல்வர்மீது பாட்டுக்கள் பாடிக்கொண்டு சென்றார். அவர் அவ்வாறு சென்றால் பெரும் பரிசு பெற்றுக் கொண்டு வருவது வழக்கமாகையால் நான் அவருடைய வருகையை ஆவலாக எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். அவரும் வந்துசேர்ந்தார். நான் அவரைப் பார்த்து, 'என்ன சுபம் (நன்மை)?' என்று கேட்டேன். அதற்கு அவர், 'அசுவம்' என்றார். அசுவம் என்றதை அசுபம் என்று நான் நினைத்துக் கலங்கினேன். என் கலக்கத்தைக் கண்ட அவர், மீண்டும் 'கோரம்' என்றார். அப்பொழுதும் எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. மேலும் அவர், "மாமா" என்றார். மாமா என்றவுடன் எனக்கு மிகவும் நடுக்கமாகி விட்டது. நம்முடைய மாமனுக்குத்தான் ஏதோ கோரமான அசுபம் வந்திருக்கிறது என்று நான் குருட்டுத்தனமாக முடிவுசெய்துகொண்டு மிகவும் வருந்தி அழுதேன். நான் அழுதலைக் கண்டதும் அவ்விடத்திற் பலபேர் வந்து சூழ்ந்துவிட்டார்கள். என் கணவர், 'வாசி' என்றார். வாசி என்பதற்கு நலம் என்று நான் பொருள்கொண்டு, நம் மாமனுக்கு வந்த அசுபமானது வாசியாகிவிட்டது போலும் என்று தேறித் தெளிவடைந்தேன்.

என் கணவர் என்னைப் பார்த்து, 'நான் சொல்லியது உனக்கு விளங்கிற்று இல்லையா? சென்ற விடத்தில் ஒரு குதிரை கிடைத்தது. குதிரைக்குத்தான், அசுவம் என்றும், கோரம் என்றும், மா என்றும், வாசி என்றும் பெயர்; உனக்குச் சிறிதும் அறிவில்லையா? சிறிது நேரத்திற்குள் வீண் புரளி பண்ணிவிட்டாயே' என்று கூறிச் சினந்தார். நான் மிகவும் நாணி என்னுடைய அறிவின்மைக்காக வருந்தினேன்."

இவ்வாறு தன் தோழி கூறியதைக் கேட்டுக் கொண்டிருந்த சுந்தரியானவள், 'உன் கணவன் போல் நீயும் அறிவாளியாக இருந்திருந்தால் இவ்வளவு புரளி நேர்ந்திருக்காதல்லவா? ஆகையால் தான் 'ஆண்களைப்போல் பெண்களுக்குங் கல்வியறிவு வேண்டும் என்றும், கணவன் மனைவி இருவரும் ஒத்த அறிவாளிகளாக இருக்கவேண்டும் என்றும் கூறுகிறார்கள்' என்றாள்.

சுந்தரியே புறமேகி யந்ததுணை
வரைநோக்கிச் சுபம்என் என்றேன்,
வந்தோர் அசுவமென்றார் கோரமென்றார்
மயங்கிநின்றேன் மாமா என்றார்,
கொந்தழுதேன் பலர்மொய்த்தார் வாசியெனத்
தேறினேன் நுவன்ற யாவும்
அந்தமுறாங் [illegible] று சொலிச்சினந்தார்
நாணமிகுந் தஞ்சினேனே.

(அ - ரை.) கோரம் - குதிரை, கொடுமை. மாமா - குதிரை மாமன். வாசி - குதிரை, நன்மை. அந்தம் - அழகு.

# 4. பொய்க்குப் பொய்

தேவபுரம் என்னும் ஊரிலே செல்வநாதன் என்று பெயருடைய ஒரு பெருஞ் செல்வன் இருந்தான். அவன் தன்னுடைய பெயருக் கேற்பப் பெருஞ் செல்வனேயாயினும் யாருக்கும் எதையும் கொடுக்க மனம் ஒருப்படமாட்டான். ஆனால் காதுக் கினிமையாகப் பேசுவதில் மிகவுங் கெட்டிக்காரன். இச் செல்வநாதனுடைய செய்தியறியாமல் ஒரு புலவர் அவன்மீது பல அருமையான பாடல்கள் இயற்றிக்கொண்டு சென்றார்.

பாடல்களின் அருமை பெருமையைக் கண்ட செல்வநாதன் புலவரை மகிழ்ச்சியடையச் செய்ய வேண்டுமென்று எண்ணினான். புலவர் ஒரு பாட்டைப் படித்து நிறுத்தினார். செல்வநாதன் உடனே தன் மகனைப் பார்த்து, ‘தம்பீ! புலவருக்கு இரண்டு மூட்டை நெல் எடுத்து வை’ என்றான். செல்வநாதனுடைய மகனும் உள்ளே போய் வந்தான். புலவர் மற்றொரு பாட்டைப் படித்துப் பொருள் விரித்தார். செல்வன் தன் மகனைப் பார்த்து, ‘ஒரு தட்டிலே நூறு ரூபாக்கள் எடுத்து வை’ என்றான். மற்றொரு பாட்டுப் படித்து முடிந்தது. செல்வன் தன் மகனைப் பார்த்து, ‘நல்ல வேட்டியாக இரண்டு எடுத்து வை’ என்றான். மேலும் ஒரு பாட்டு முடிந்தது. செல்வன் தன் மகனைப் பார்த்துப், ‘புலவருக்கு முத்துமாலை ஒன்று எடுத்து வை’ என்றான். பாடல்களெல்லாம் படித்து முடிந்தன. ஒவ்வொரு பாட்டிலும் அச் செல்வனைக் குபேரன் என்றும்,

வள்ளல் என்றும் கர்ணன் என்றும் பாரி என்றும் கண்டபடி புகழ்ந்திருந்தார்.

பாடல்களெல்லாம் படித்து முடிந்த பின், செல்வநாதன் புலவருக்கு ஒன்றுங் கொடாமலே 'போய்வாரும்' என்று சொல்லிப் புறப்படச் சொன்னன். புலவர் செல்வனைப் பார்த்து, 'எனக்குக் கொடுப்பதற்காக எடுத்துவைத்த பரிசுப் பொருள்களெல்லாம் எங்கே?' என்று கேட்டார். அதற்குச் செல்வநாதன், 'அவைகளெல்லாம் உமக்குக் கொடுப்பதற்காக எடுத்து வைக்கச் சொன்னவைகளல்ல; நீர் என் காதுக்கு இனிமையாகச் சில பாடல்களைச் சொன்னீர். நானும் அதைப்போலவே உம்முடைய காதுக்கும் இனிமையாக விருக்கட்டுமென்று சில மொழிகளைச் சொன்னேனே யல்லாமல் உண்மையாகக் கொடுப்பதற்காக எடுத்து வைக்கச் சொல்லவில்லை' என்றன். செல்வநாதன் கூறியதைக் கேட்ட புலவர், 'அப்படியானல் நீர் பொய் சொல்லியிருக்கிறீர்; இவ்வாறு பொய் சொன்னது ஒழுங்காகுமா?' என்று கேட்டார். அதற்குச் செல்வன் நான் மட்டுந்தான பொய் சொன்னேன்? நீவிர் என்னைக் குபேரன் என்றும் கர்ணன் என்றும் புளுகிப் பாடவில்லையா? உம்முடைய பாட்டுப் படி நான் குபேரனு? அப் பாட்டிற் கூறப்பட்டுள்ளவைகளுக் கெல்லாம் நான் உரியவனு?' என்று கேட்டான். புலவருக்கு அப்பொழுதுதான் அப்புல்லனைப் புகழ்ந்து தாம் பேசியது தெரிந்தது. வேறொன்றும் பேசாமல் தம் வழிமேற் சென்றார்.

தனதன்நீ வள்ளல்நீ எனப்பாடும் புலவனுக்குத் தநயா ! நெல்லி
கனதனம்சே கலைமணிசே என்றப்பால் நிறுத்தினம்போ கவிஞர் என்றோம்
தினதுபரி செங்கென்றான் எனைத்தனதன் வள்ளல்நீ எனப்பொய்
சொன்னாய்
மனதறிய நாமும்பொய் பகர்ந்தனமென் றேஞ்சென்றான் மதிவல்
லோனே

(அ - ரை.) தநயன் - மகன். தனதன் - செல்வன்.

---

## 5. அரசனுக்கு இயற்கை வரவேற்பு

ஓர் அரசன் பொழில் வளங் காண்பதற்காகத் தன்னுடைய மலர்ப்பொழிலை நோக்கிப் புறப்பட்டான். அப்பொழிலிலே பலவகை மரங்களும் அமைந்திருந்தன. கனிகள் மிகவும் பொருந்தி இனிது திகழ்ந்த அப்பொழிலிலே பலவகைப் பறவைக் கூட்டங்களும் அக்கனி வகைகளை உண்டு களித்திருந்தன. அப்பொழிலிலே அரசனுடைய உறுதிச் சுற்றத்தினரையும் ஏவலரையும் தவிர வேறு எவரும் செல்லுதல் இயலாது. பொழிலை நோக்கிப் புறப்பட்ட அரசன் அரசனுக்குரிய சிறப்புக்களுடன் பொழிலை நெருங்கினான். தேமா மரங்கள் மணம் மிகுந்த சிறு பூக்களைத் தூவி நின்ற காட்சி பொழிலாகிய மங்கை மாமரமாகிய தன்னுடைய கையினால் மலர் தூவி வரவேற்பதைப் போன்றிருந்தது. சிறிய குயில்கள் கூவிய தோற்றம் பொழில் மங்கை தன்னுடைய வாயினால் அரசனுக்கு நல்வரவேற்புக் கூறுவதுபோன்றிருந்தது.

இளங் கொடிகள் அசைந்தாடிய காட்சி பொழிலின் மாது கொடிகளாகிய கைகளால் அரசனைத் தொழுவதுபோன் றிருந்தது. அழகிய வண்டுகள் பாடியொலித்தது அரசனுடைய புகழைப் பாடிப் பரவியதுபோன் றிருந்தது. வளைந்த வாயையுடைய கிளிகள் மலர்களைக் கிண்டி உதிர்த்தது பெரிய மலர்களைச் சொரிகின்றாற்போ லிருந்தது. அரசன் அவ்வியற்கைக் காட்சிகளை யெல்லாம் கண்டு மகிழ்ந்து நமக்கு இங்கு இயற்கை வரவேற்பு நிகழ்கின்றதென்று களித்துச் சென்றான்.

கோமான்சென் றணைதலுமே கொங்கணிந்த மயர்தூவித்
தேமாநின் றெதிர்கொள்ளச் சிறுகுயில்போற் றிசைத்தனவே
வாமான்தேர் மன்னற்கு மங்கலஞ்சொன் மகளிரைப்போல்
தூமாண்ட இளங்கொடிதம் தளிர்க்கையால் தொழுதனவே (1)

கொடியாடு நெடுநகரக் கோமான்றன் குணம்பரவி
அடிபாடும் அவர்களென அணிவண்டு முரன்றனவே
வடிவாய வேலவற்கு மலர்ச்சின்னம் சொரிவனபோல்
கொடுவாய கிளிகோதிக் குளிர்நறும்போ துதிர்த்தனவே (2)

(1) (அ - ரை.) கோமான் - அரசன். கொங்கு - மணம். தேமா - இனிய மாமரம். வாமான் தேர் - தாவுகிற குதிரைகளையுடைய தேர். தூமாண்ட - அழகு நலம் சிறந்த.

(2) (அ - ரை.) அணி - அழகிய. முரன்றன - ஒலித்தன. மலர்ச்சின்னம் - மலர்க்குறி. கொடு வாய் - வளைந்த வாய். கோதி - கிண்டி. உதிர்த்தன - உதிர்த்தன.

# 6. புகழ்ச்சியைக் கேட்டால் இகழ்ச்சியா வரும்?

சண்டியூர் என்னும் பெயருடைய ஊரிலே ஒரு பெருஞ் செல்வன் இருந்தான். அவன் செல்வன் என்பதை யுணர்ந்த ஒரு புலவர் அவன்மீது சில செய்யுட்களைப் பாடிக்கொண்டு சென்றார். அச் செல்வன் அறிவு சிறிதும் இல்லாத முழுமகன். யாரேனும் பொருளுதவி கருதி அவ்வறிவிலாச் செல்வனிடஞ் சென்றால், ஏதேனும் சாக்குப் போக்குக்கூறி யனுப்பிவிடுவான். அவனுடைய செய்தியை உணராதபடியினால்தான் புலவர் அவன் மீது பாட்டியற்றிக்கொண்டு சென்றார். இருவருக்கும் பேச்சு நிகழ்ந்தது.

செல்வன் :—நீவிர் யார்?

புலவர் :—நான் ஒரு பாவாணன்.

செல்வன் :—எந்த ஊர்.

புலவர் :—வட காசி.

செல்வன் :—எங்கு வந்தீர்?

புலவர் :—வேறெங்கு மன்று; தங்களுடைய இடத்திற்குத்தான்.

செல்வன் :—என்னுடைய இடத்திற்கு எதற்காக?

புலவர் :—நீ ஒரு சிறந்த அரசனைப் போன்றவன் என்று உனது பெருமையைப் பலருஞ் சொல்லக் கேட்டேன். அதனால் உன் மேலே இனிமையான செய்யுட்கள் பல செய்துகொண்டு

வந்திருக்கிறேன். நீ அதனை மனமகிழ்ந்து கேட்டுப் பரிசு வழங்குதல் வேண்டும்.

செல்வன் :—நீர் தகுந்த வித்துவான் என்று எனக்குத் தெரியவில்லை. என்னுடைய தாதை மூதாதை வழியிலே தமிழ் கேட்டவர்களே ஒருவரும் இலர். எங்கள் தலைமுறையில் இல்லாத இத் தாழ்வை நீர் செய்துகொண்டு வந்திருக்கிறீர். இந்த மொழியை நீர் இன்னும் ஒரு தரம் சொல்வீரானால் இந்த இடம் பெரிய இரணகளம் ஆகிவிடும்; உடனே அப்பாலே போம்.

புலவர் அறிவிலாச் செல்வனின் கூற்றைக் கேட்டு இவனுடைய தலைமுறையினர் தமிழ் கேட்டதில்லையாமே; பிறகு என்ன கேட்டார்களாம்! ஆங்கிலம் தெலுங்கு முதலியவைகளைக் கேட்டார்கள் போலும். எங்கள் தலைமுறையில் இல்லாத தாழ்வைச் செய்துவிட்டீர் என்கிறானே! புகழ்ச்சியைக் கேட்டால் இகழ்ச்சியா வரும்? என்னே இம் மூடன் கூத்து! இங்கு நின்றிருப்போமானால் அவன் கூறியபடி பெருஞ் சண்டை நேர்ந்து அடிபிடியில் வந்து முடிந்தாலும் முடியலாம். அவனுக்கோ ஆட்கள் பலர் இருக்கிறார்கள்; நாமோ தனியாக இருக்கிறோம் என்று நினைத்துக்கொண்டு விரைந்து அந்த இடத்தை விட்டு அகன்றார்.

வந்தவர் யாவர்காண்? கவிராசர் எந்தவூர்?
வடகாசி எங்கு வந்தீர்?
மகராசன் என்றுனது கீர்த்தியைக் கேட்டுன்மேல்
மதுரகவி பாடி வந்தோம்

சந்ததமும் வித்துவான் அல்லநீர் என்னுடைய
தாதைதமு தாதை வழியில்
தமிழ்கேட்ட(து) யாவர்காண் தலைமுறையில் இல்லாத
தாழ்விதைச் செய்து வந்தீர்,
இந்தமொழி மற்றுமொரு தரம்நீர் உரைக்கிலோ
இரணகளம் ஆகும் அப்பால்
ஏகும்என்(று) ஓதிடும் புல்லர்தம் பாற்செலா(து)
எனையாள இதுதருண மே
சிந்திக்கும் அன்பருக் கருண்மழை சொரிந்ததிரு
செல்வம் கொடுக்கும் முதலே
தேசிகம் பூத்தவுமை நேசபொன் னம்பலவ
தேசிகசி ரோரத்ந மே.

(அ - ரை.) சந்ததமும் - எப்பொழுதும். ஏகும் - போம். புல்லர் - அற்பர். தேசிகம் - அழகு. சிரோரத்நம் - முடிமணி.

---

## 7. இருளும் ஒளியும் இகலுதல்

ஒரு பெரிய நாட்டைப் பயாபதி என்னும் பெயருடைய அரசன் அரசாட்சி செய்துகொண்டிருந்தான். அவ்வரசனுக்கு இரண்டு மைந்தர்கள் இருந்தனர். அவர்களுடைய பெயர் விசயன் திவிட்டன் என்று வழங்கும். திவிட்டன் என்பவனுக்குத் திருமணம் நிகழ்ந்தது. திருமணம் நகரத்தை யடுத்து விளங்கிய திருநிலையகம் என்னும் அழகிய பொழிலில் நிகழ்ந்தது. அத் திருமணத்தின் பொருட்டு நகர மக்களும் மற்றுமுள்ளவர்களும் அப் பொழிலை நோக்கிப் புறப்பட்டனர். மன்னன் மைந்தர்களுடைய திருமணம் அல்லவா? கூட்டம் பலமாக இருந்தது. யானை குதிரை தேர் முதலியவைகளும்

கணக்கின்றிப் புறப்பட்டன. நகரத் தெருக்களில் அமைந்துள்ள வீடுகளோ விண்ணில் மிக வுயர்ந்து விளங்கிநின்றது. ஞாயிறு திங்கள்கள் உச்சிக்கு வரும்போதுதான் அவைகளின் ஒளி தெருவிற் பரவும். இத்தகைய தெருவிலே கணக்கற்ற கொடிகளும் குடைகளும் மிகவும் நெருங்கியபடியால் தெருவில் இருந்த ஒளி அடியோடு மறைந்து இருளாகி விட்டது. அந்த இருளின் தோற்றம் பார்ப்பவர்களுக்கு இராக் காலம் போலவே இருந்தது. ஆனால் அந்த இருள் அப்படியே இருந்து விடவில்லை. அரசர்களுடைய முடியிற் பதிந்துள்ள மணிகளின் ஒளி, காதிலணிந்துள்ள குண்டலங்களின் ஒளி, மற்றும் ஆடவரும் பெண்டிரும் அணிந்துள்ள பல வகையான அணிகலன்களின் ஒளி, ஆகியவைகளெல்லாம் ஒன்றுசேர்ந்து பேரொளியைச் செய்யலாயின. அந்த மணிகளின் ஒளி இல்லாத சில இடங்களில்தான் இருளும் ஒளியும் தெருவிலே கலந்து விளங்கிய காட்சி இரவும் பகலும் (இருளும் ஒளியும்) தம்மிற் போர் செய்வதைப்போல் இருந்தது. ஒரே வேளையில் இருளையும் ஒளியையும் பார்ப்பது அருமையாகையால் அக் காட்சி பார்ப்பவர்களுக்கு வியப்பைத் தந்தது.

கொடியொடு குடையிடை மிடைவன இருள்செய
முடியொடு சுடர்குழை முளைவெயில் ஒளிசெய
அடியொடு புனைகழல் அரசிறை படையெழ
இடையிடை இரவொடு பகலிசை வனவே.

(அ - ரை.) இடை - இடையே. மிடைவன - நெருங்குவன. சுடர் - ஒளி. குழை - குண்டலம். முளை வெயில் - சூரிய ஒளி. இசைவன - பொருந்துவன.

# 8. ஊழின் உறுதி

நெல்லூர் என்னும் ஊரிலே ஏறக்குறைய இரு நூறு யாண்டுகளுக்கு முன்னர் ஒரு பெரும் புலவர் வாழ்ந்திருந்தார். அவர் நால்வகைப் பாக்களையும் இனிமையாகவும் விரைவாகவும் பாடுவார். அவரைப் போன்ற புலவர்கள் அக்காலத்திலே அவரைத் தவிர வேறொருவரும் இலர். ஆயினும் அறிஞர்களை யெல்லாம் பிடித்து வாட்டும் வறுமை அவரையும் வாட்டிக்கொண்டுதான் இருந்தது. புலவர் பல வகைத் தொல்லைகளுக்கிடையே குடும்பச்சுமையை இடும்பையுடன் தாங்கிக்கொண்டிருந்தார். அவருக்கு ஓர் ஆண்மகவு தோன்றியது. அம்மகவிற்கு **ஞாயிற்றுருவினன்** என்று பெயர் வைத்து அருமையாக வளர்த்துவந்தார்.

ஞாயிற்றுருவினன் தன் பெயருக்கேற்ப மிகுந்த பேரழகோடு விளங்கினான். புலவர் தம் அரும்பெறற் செல்வனுக்குக் கலைகள் பலவற்றையும் நிலைபெறக் கற்பித்தார். பல மொழிகளைக் கற்பித்துப் பன்மொழிப் புலவனாகவுஞ் செய்தார். மைந்தன் தந்தையைவிடச் சிறந்த பேரறிவாளனாகத் திகழ்ந்தான். புலவரைப் பிடித்தாட்டும் வறுமைப் பேய் ஞாயிற்றுருவினனையும் நன்கு பற்றியது. அவனுக்குத் திருமணமும் ஆகிவிட்டபடியால் வறுமைப் பேயின் கொடுமை மிகுதியாக விருந்தது: இளமையில் வறுமை எண்ணிலாக் கொடுமையைப் புரியு மென்பது நுண்ணறிவாளர் திண்ணமாகக் கண்ட முடிபல்லவா?

ஞாயிற்றுருவினன் வாழ்க்கைத்தேரை வகை பெற நடத்த வழிதேடினன். நெல்லூருக்கருகில் எள்ளூர் என்றெரு சிற்றூர் இருந்தது. அவ்வூரில் குடுமியாண்டி நாயக்கர் என்றெருரு செல்வர் இருந்தார். செல்வர்கட்கு இருக்கும் இயல்பான அறிவு தான் அவருக்கும் இருந்ததே தவிரச், சிறப்பான அறிவு (போற்றத்தக்க அறிவு) ஒன்றும் அவரிடமில்லை. அவருக்கு நாலைந்து பிள்ளைகள் இருந்தனர். அப்பிள்ளைகளுக்குக் கல்விப்பயிற்சி செய்விப்பதற்குக் குடுமியாண்டி நாயக்கர் தகுந்த ஆசிரியரைத் தேடினர். ஞாயிற்றுருவினனுடைய அறிவு விளக்கம் அவருக்குத் தெரியவந்தது. ஓராளை யனுப்பி ஞாயிற்றுருவினனை யழைத்தார். ஞாயிற்றுருவினனும் நாயக்கரைக் கண்டான். தம் மக்கட்குக் கல்விப் பயிற்சி செய்வித்தல் வேண்டுமென்று நாயக்கர் ஞாயிற்றுருவினனைக்கேட்டுக்கொண்டார். வறுமைப்பேயால் பற்றப்பட்டிருந்த ஞாயிற்றுருவினன் அவ்வாறே செய்வதாக ஒப்புக்கொண்டான். நாயக்கர் கொடுப்பதாகக் கூறிய ஊதியம் ஞாயிற்றுருவினன் எதிர்பார்த்ததற்கு மேலாகவிருந்தது. அவ்வருவாயைக் கொண்டே குடும்ப வாழ்க்கையை இனிமைபெறச் செய்யலாமென்று முடிவுசெய்த ஞாயிற்றுருவினன், நன்னுள் ஒன்றில் நாயககர் மக்கட்குக் கல்விப்பயிற்சியைத் தொடங்கினன்.

நாயக்கர் மக்களின் அறிவுத் திறம், ஞாயிற்றுருவினனுக்கு இரண்டொரு தினங்களில் தெரிந்துவிட்டது. நான்முகன், அச்சிறுவர்களின் தலையில்

மூளை வைப்பதற்குப் பதிலாகக் களிமண்ணை எடுத்து வைத்திருக்கிறான் என்று முடிவுகட்டினான். மாதங்கள் பல ஆகியும் நாயக்கர் மக்களுக்கு ஒன்றும் பிடிபட வில்லை. ஞாயிற்றுருவினான் கரடியாகக் கத்தியதெல்லாம் விழலுக்கிறைத்த நீராக முடிந்தது.

பிள்ளைகளுக்குப் படிப்பொன்றும் வரவில்லையென்பதை யறிந்த நாயக்கர், 'இன்ன இன்ன விதமாகச் சொல்லிக்கொடு' என்று ஞாயிற்றுருவினனுக்குத் தினந்தோறும் ஒவ்வொரு புது வழி சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார். பிள்ளைகளுக்குப் படிப்புச்சொல்லும் நேரம் போக ஒழிந்த சமயங்களில் மாட்டுக்கு வைக்கோல் எடுத்துப் போடுதல், ஆட்டுக்குத் தழையொடித்துப் போடுதல் முதலிய பிறவேலைகளையும் பார்க்கச் சொன்னார். நாயக்கர் போக்கைக் கண்ட ஞாயிற்றுருவினன் வேலையை விட்டு விட்டு நின்றுவிடலாம் என்று முதலில் எண்ணினான். அவ்வாறு செய்தால் மீண்டும் வறுமைப்பேய் வந்து பற்றிக்கொள்ளுமே; யாது செய்வதென்று ஏங்கினான்.

ஞாயிற்றுருவினன் எண்ணம் பல வழிகளிற் சுற்றியலைந்து, 'ஒருவன் நல்ல குடிப்பிறப்பு, அழகு, கல்வியறிவு, பெருமை முதலிய எல்லாவற்றையும் உடையவனாக விருப்பினும் அவன் இன்னொருவருக்குள் அடங்கி அவர் ஏவிய ஏவலின்வழி நின்று வாழுமாறு இறைவனாற் படைக்கப்படுகிறான். அவன் முற்பிறவியில் நல்வினையை மிகுதியாகச்

செய்யாதபடியினாலேயே எல்லாம் உடைய அவனுக்குப் பொருட்செல்வத்தைக் கொடுக்காது வறுமையாக்கி அல்லற்படச் செய்கிறார். இவ்வாறெல்லாம் நேர்வதற்கு ஊழின் உறுதியைத் தவிர வேறொன்றும் காரணம் 'அன்று' என்று முடிவுசெய்தான். பிறகு அவன் தன்னுடைய காரியங்களைப் பொறுமையுடன் பார்த்தான்.

கருத்தும்மாண் குலனும் தேசும் கல்வியும் வடிவுந் தம்மில்
பொருத்தினுற் பழிக்கலாகாப் புலமைமிக்(கு) உடைய ரேனும்
ஒருத்தனுக்(கு) ஒருபு தன் கூறநகேட்டுற்றுச் செய்தூ வாழுந
திருத்தினுன் இறைவ னேகாண் செய்வினைக் கிழவன் என்பான்.

(அ—ரை.) மாண்—மாட்சிமைப்பட்ட. தேசு—அழகு. திருத்தினான்—அமைத்தான்.

---

## 9. எந்த வினை தீர்ப்பார் இவர்?

இரண்டு அன்பர்கள் வைத்தீசுவரன் கோயிலில் எதிர்ப்பட்டுப் பேசிக்கொண்டிருந்தனர். ஒருவர் மற்றவரைப் பார்த்து, 'நீர் எந்த ஊர்? எதற்காக இங்கு வந்திருக்கின்றீர்?' என்று கேட்டார். அதற்கு மற்றவர், 'எனக்கு நீண்ட காலமாக வயிற்றுவலி, இருமல் முதலிய சில நோய்கள் இருக்கின்றன. அந்நோய் தீரும்பொருட்டு இச்சிவப்பதியில் திருக்கோயில்கொண் டெழுந்தருளியுள்ள வைத்தியநாதப் பெருமானைப் போற்றி வழிபடுதற்காக வந்துள்ளேன்' என்றார்.

மற்றவரும் தமக்குள்ள நோய் தீரும் பொருட்டே அங்கு வந்து வழிபாடியற்றிக்கொண்டிருந்தார். ஆயினும் அவருக்கிருந்த நோய்கள்

முற்றிலும் நீங்கி நலம் உண்டானபாடில்லை. நுகர வேண்டிய பழவினை எஞ்சியிருந்தபடியால், 'காசிக்குப் போயுங் கருமங் தொலையவில்லை' என்பதுபோல் அங்கு வந்தும் அவர் நோயின் கொடுமையால் வருந்திக் கொண்டிருந்தார். ஆகவே அவர் மற்றவரைப் பார்த்து மிகுந்த வெறுப்புடன், 'இந்த வைத்திய நாதப் பெருமானு நோய்களைத் தீர்த்து நம்மைக் காப்பாற்றப் போகிறார்? முன்னர் அவருக்கும் அவரைச் சேர்ந்தவர்களுக்கும் உள்ள நோயைப் போக்கிக்கொண்ட பிறகல்லவோ மற்றவர்களுடைய நோயைப் போக்கப்போகிறார்' என்றார். இவ்வாறு கூறியதைக் கேட்ட மற்றவர், 'நீவிர் கூறுவதைப் பார்த்தால் இறைவனும் அவனைச் சேர்ந்தவர்களுமே ஏதோ நோயால் வருந்துவதுபோன்றல்லவோ இருக்கிறது. அவர்கள் அப்படி எவ்வித நோயால் வருந்துகிறார்கள்; சொல்லும் பார்ப்போம்' என்றார். உடனே மற்றவர், 'அவ்விறைவனுக்கு முடக்குவாதம்; அதனால் கால்கைகள் இழுத்துக் கொண்டிருக்கின்றன. இறைவனுடைய மைத்துனனாகிய திருமாலுக்கோ நீரிழிவுநோய்; இறைவனுடைய மகனாகிய ஆனைமுகக்கடவுளுக்குப் பெருவயிறுநோய்; இறைவனால் தமக்கும் தம்மவர்களுக்கும் உள்ள இந்நோய்களையே போக்கிக்கொள்ள முடியவில்லையே' என்றார். 'ஆமாம், நீவிர் கூறுவது உண்மைதான். முன்னர் தம்மையும் தம்மைச் சேர்ந்தவர்களையும் குணப்படுத்திக் கொண்டால் தானே மற்றவர்களைப்பற்றிப் பார்க்கலாம்' என்று கூறி நகையாடிக்கொண்டு சென்றார்கள்.

வாதக்கா லார்தமக்கு மைத்துனர்க்கு நீரிழிவாம்
போதப் பெருவயிறும் புத்திரனுக்(கு)—ஓதக்கேள்
வந்தவினை தீர்க்க வகையறியார் வேளூரர்
எந்தவினை தீர்ப்பார் இவர்.

(அ—ரை.) தமக்கு - இறைவனாகிய நமக்கு; மைத்துனர் - திருமால். நீரிழிவு - நீரிழிவு என்பது எப்போதும் சிறுநீர் இறங்கிக் கொண்டிருக்கும் ஒரு நோய்; பாற்கடலாகிய நீரில் இனிது உறங்கிக் கிடத்தல்; போத - மிகுதியான; ஓத - கூற; வகை - வழி. வேளூரர்-வைத்தீசுவரன் கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவர்.

---

## 10. தீயவர் சேர்க்கை தீமை பயக்கும்.

ஒரு புலவரும் பெருநிலக் கிழவரும் (சமீன்தார்) அமர்ந்து இன்னுரையாடிக் கொண்டிருந்தார்கள். இரவில் பெருநிலக்கிழவரின் படுக்கையில் மூட்டைப் பூச்சியின் தொல்லை அதிகமாக விருந்தபடியால் படுக்கையை எடுத்து வெயிலில் போட்டுத் தட்டச் சொல்லியிருந்தார். அவருடைய ஆட்கள் படுக்கையைத் தூக்கி வெயிலில் காயப்போட்டுப் பஞ்சணையைத் தடியால் தட்டி மூட்டை எங்கேனும் மறைந்திருந்தால் இறந்தொழியும்படி நசுக்கினார்கள்.

புலவருடன் உரையாடிக்கொண்டிருந்த பெருநிலக்கிழவர் புலவரைப் பார்த்து, 'படுத்துத் தூங்குகிறவர்களை 'மூட்டைப்பூச்சியானது கடித்துத் தொளைத்துத் தொல்லை செய்ய, இன்பத்தை யளிக்கும் பஞ்சணையைப் போட்டு இந்த ஆட்கள் மோதுகிறார்களே! இஃதென்னவிந்தை! மூட்டைப்பூச்சியை அல்லவா தேடிப்பிடித்துக் கொல்லுதல் வேண்டும்?'

என்று கேட்டார். அதற்குப் புலவர், 'வஞ்சனை பொருந்திய நெஞ்சமுடையவர்களை ஒருவர் சேர்ந்தால் அந்த வஞ்சகர்களுக்கு நேரும் துன்பத்தை அவர்களுடன் சேர்ந்த நல்லவர்களும் அடையும்படி நேர்வதுதான் உலக வியற்கை. மூட்டைப் பூச்சிக்கு இடம் கொடுக்கிறபடியினுல்தான் இந்த நல்ல பஞ்சணையும் அடிபட வேண்டியதாக விருக்கிறது. தன் மீது படுப்பவர்களைக் கடித்துத் தொல்லை செய்து விட்டுத், தேடினுல் தன்னிடத்தில் ஒளிந்து கொள்ளும் வஞ்சகநெஞ்சமுடையது மூட்டைப்பூச்சி என்று தெரிந்தும் அதற்கு இடம் கொடுக்கலாமா? 'தீயாரைக் காண்பதுவுந் தீதே' யல்லவா? ஆகையால் பஞ்சணையும் அடிபட்டுத் துன்பப் படுவது ஒழுங்கு தான்' என்றுரைத்தார்.

துஞ்சுவரை மூட்டை துளைக்கச் சுகங்கொடுக்கும்
பஞ்சணையை மோதுவதென் பாவலா—வஞ்சகரைச்
சேர்ந்தவரு மன்னவர் தந் தெண்டனைக்கு ளாவதுபோல்
சார்ந்ததனுல் வந்தவினை தான்.

(அ—ரை.) துஞ்சுவரை-உறங்குபவர்களை. மூட்டை-மூட்டைப் பூச்சி. சார்ந்ததனுல் - பொருந்தியதனுல். வந்த வினை - நேர்ந்த கெடுதி.

---

# 11. திருமாலும் கடிகாரமும்

பாலனும் வேலனும் பள்ளிக்கூடத்து நண்பர்கள். ஒருநாள் இருவரும் ஒரு கடிகாரத்தினிடம் அமர்ந்து கடிகாரத்தைப்பற்றிப் பல பேச்சுக்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது வேலன் பாலனைப் பார்த்துத், 'திருமாலையுங் கடிகாரத்தையும் பற்றிய கதை உனக்குத் தெரியுமா?' என்று கேட்டான். அதற்குப் பாலன், 'அதென்ன கதை? திருமால் கடிகாரம் வைத்திருந்தாரோ?' என்று கேட்டான். அதற்கு வேலன், 'திருமால் கடிகாரம் வைத்திருக்கவும் இல்லை; அது ஓடாமற் கெட்டுப் போய்ப் பழுதுபார்ப்பவனிடம் கொடுத்துவிட்டு அதனைத் திரும்பப் பெறுவதற்காகக் கருடன் மேலே ஏறிக்கொண்டு பழுதுபார்ப்பவன் வீட்டுக்கு அலையவும் இல்லை. பின்பு என்ன செய்தி என்றால் அத்திருமாலே கடிகாரத்தைப் போல் இருக்கிறாராம். ஒரு புலவர் திருமாலுக்குங் கைக்கடிகாரத்திற்கும் ஒப்புவைத்துப் பாடியிருக்கிறார்' என்றான். அதற்குப் பாலன், 'அதெப்படி முடியும்? திருமாலுக்கும் கடிகாரத்திற்கும் இயைபோ ஒப்போ இல்லையே' என்றான்.

'இருக்கிறது; அந்த ஒப்பைத்தான் அவர் சொல்லியிருக்கிறார். திருமாலிடம் சக்கரம் இருக்கிறது; கடிகாரத்திலும் சக்கரம் இருக்கிறது. திருமாலை அரவம் தாங்குகிறது. கடிகாரத்திலும் அரவம் (ஒலி) உண்டாகிறது. திருமாலுக்கு எட்டெழுத்தாகிய எழுத்துக்கள் இருக்கின்றன. கடிகாரத்தி

லும் பன்னிரண்டு வரை யெழுதப்பட்டுள்ள எண்ணாகிய எழுத்துக்கள் இருக்கின்றன. திருமால் வேலையிலே (பாற்கடலிலே) இருக்கிறார். கடிகாரமும் எப்பொழுதுஞ் சுற்றுதலாகிய வேலையிலேயே இருக்கிறது. பலரும் திருமாலை வழிபடு கடவுளாகக்கொண்டு மிகவும் போற்றுகிறார்கள். கடிகாரத்தையும் பல பேர் அருமையாகவும் பெருமையாகவும் போற்றிப் பாதுகாத்துத் தங்களுடைய இன்றியமையாப் பொருளாக வைத்திருக்கிறார்கள். இத்தகைய பல ஒப்புக்களும் நன்கு பொருந்தியிருக்கும்போது திருமாலையுங் கடிகாரத்தையும் ஏன் ஒப்பாகச் சொல்லக்கூடாது?' என்றான் வேலன்.

வேலன் இவ்வாறு கூறியதைக் கேட்ட பாலன், 'ஆ! ஆ!! புலவர் பலே கெட்டிக்காரர் போலும்! அதனால்தான் அவ்வாறு காத்தற் கடவுளாகிய திருமாலையும் ஒரு சிறு கடிகாரத்தையும் ஒரு பொருளாக அமைத்துப் பாடிவிட்டார். அறிவாளிகளுக்கு எதுவும் அருமையான காரியமன்றென்று நன்கு விளங்குகிறது' என்றான்.

சக்ரத்தி னாலரவந் தாங்குதலி னேடுமுள்ளோட்
டக்கரத்தி னால்வேலை யார்வதினான்—மிக்கவன்பர்
முக்கியமாய்க் கைக்கொளலான் முத்துச்சுவா மித்துரையே
கைக்கடியா ரந்திருமால் காண்.

(அ—ரை.) அரவம்—பாம்பு; ஒலி. வேலை—கடல்; காரியம்.

## 12. விடுகவி

இரண்டு புலவர்கள் அளவளாவிக் கொண்டிருந்தனர். ஒரு புலவர் மற்றொரு புலவரைப் பார்த்து 'நான்கு எழுத்துக்கள் கொண்ட ஒரு மொழி. அம் மொழியின் முற்பாதியாகிய முன் இரண்டெழுத்துக்களை எடுத்துவிட்டால் இருளைக் குறிக்கும் ஓர் இரண்டெழுத்து மொழியாகும். நான்கு எழுத்துக்களில் முதலில் உள்ள ஓர் எழுத்தை எடுத்துவிட்டால் பெண்ணைக் குறிக்கும் ஒரு மூன்றெழுத்து மொழியாகும். மொழியின் பிற்பாதியாகிய இரண்டெழுத்துக்களை எடுத்துவிட்டால் ஓர் ஏவற் சொல்லாகும். அதுவுமன்றி, அந்நான்கு எழுத்துக்களில் மொழியின் இரண்டாவது எழுத்தைமட்டும் நீக்கிவிட்டால் முகிலைக் குறிக்கும். மொழியின் நடுவிலுள்ள இரண்டெழுத்துக்களை நீக்கிவிட்டால் விலங்கினங்கள் சிலவற்றின் தீனியாகும். மொழியின் இரண்டாவது எழுத்து மட்டும் ஒரு திங்களைக் குறிக்கும். இவ்வாறு பல மொழிகளை யுண்டாக்கி நிற்கும் அந்த ஒரு மொழியைக் கண்டுபிடித்துச் சொல்லும் பார்க்கலாம்' என்றார். இரண்டாவது புலவர் நீண்ட நேரம் எண்ணமிட்டார். ஒன்றுந் தகுதியாக அமையவில்லை. 'நீவிரே சொல்லும்; எனக்கு ஒன்றும் பிடிபடவில்லை' என்றார். முதற் புலவர், 'ஒன்றும் கடினமான மொழியன்று; மிக எளிதானதுதான்; இதைக் கூற முடியவில்லையா? **புதையல்**' என்றார். இரண்டாவது புலவர் வியப்படைந்து, 'இதுதானா' என்றார்.

முற்பாதி போய்விட்டால் இருட்டே யாகும்
முன்னெழுத்தில் லாவிட்டால் பெண்ணே யாகும்
பிற்பாதி போய்விட்டால் எவற் சொல்லாம்
பிற்பாதி யுடன்முன்னெழுத் திருந்தால் மேகம்
சொற்பாகக் கடைதலைசின் மிருந்தினி
தொடர்இரண்டாம் எழுத்துமா றத்தில் ஒன்றும்
பொற்பார்திண் புயமுத்துச் சாமி மன்னா
புகலுவாய் இக்கவியின் புதையல் கண்டே.

(அ—ரை.) அல்—இருள். தையல்—பெண். புதை—புதை என்னும் ஏவல்சொல். புயல்—மேகம். சின்—சில. புல்—புல். தை—தைத் திங்கள்.

---

## 13. அறிஞரும் அறிவிலாச் செல்வனும்

அறிஞர் ஒருவர் ஒரு பெருஞ் செல்வன் மீது மிக அருமையான பல பாக்களைப் பாடிக்கொண்டு சென்றார். அச்செல்வன் நன்கு பருத்துக் கொழுத்துச் செழித்திருந்தான். வீண் செலவுகள் செய்வதில் விருப்பம் மிகவும் உடையவன். ஆனாலும் அறவழியில் அறவே செலவுசெய்யமாட்டான். அவன் புலவருடைய அருமையான பாடல்களைப் படிக்கச் சொல்லிக்கூடக் கேட்கவில்லை.

அச்செல்வன் புலவரைக் கண்டதும், 'புலவீர்! ஒன்றும் விளைவு தழைவு இல்லாத இந்தப் பஞ்ச காலத்திலே எம்முடைய பேரையும் ஊரையும் கேட்டுக்கொண்டு மிகுந்த தொல்லைப்பட்டு இவ்வளவு தொலை வந்தது என்ன காரியமோ?' என்று கேட்டான்.

உடனே புலவர், தம்முடைய பதினாறு பற்களும் அவனுக்குத் தெரியும்படி காட்டி இளித்து, இரண்டு கைகளையும் ஏந்திப் புன்னகைபுரிந்து, 'உம்முடைய மிகுந்த புகழைப் பலருங் கூறக் கேட்டோம். உம்மீது நமக்கு அளவு கடந்த அன்புண்டாகிவிட்டது. அதனாற் பல அரிய செய்யுட்களைச் செய்துகொண்டு வந்திருக்கின்றோம். அவைகளைக் கேட்டு மகிழ்ந்து தகுந்த பரிசளித்து அனுப்புதல்வேண்டும்' என்றார்.

அவ்வளவில், அச் செல்வனுக்கு மிகுந்த எரிச்சலுண்டாகியது. செம்மைக் காய்ச்சிக் காதில் ஊற்றினாற்போ லிருந்தது. புலவர் கூறிய மொழிகளைக் கலக்கத்துடன் கேட்ட அந்தச் செல்வன், 'ஐயா கவிராசரே! வீட்டுப் பெண்பிள்ளைக்கு ஒரு திங்களாக மிகுந்த நோய். அவள் பிழைப்பது மிக அருமையாக இருக்கிறது. அதனால் வீட்டிற்கு வரும் விருந்துகளுக்கோ கணக்குவழக்கு இல்லை. அந்த விருந்துகளாற் பெருஞ்செல வேற்பட்டுத் தொல்லைப்பட்டுக்கொண்டிருக்கிறேன். இந்த ஊரில் ஒரு பொல்லாத மருத்துவன் இருக்கிறான். அவன் மிகவுங் கொடியவன். அவன் நோயாளியினுடைய கைத்தாதைப் பார்க்கும் முன்பே என்னைப் பணத்தை யெல்லாம் உறிஞ்சத் தொடங்கிவிட்டான். அவன், 'பற்று பற்று' என்று கூறி என்னுடைய அடிவயிற்றைப் பற்றச் செய்துவிட்டான். அவன் மருத்துவஞ் செய்வதாகக் கூறி ஒரு காட்டுப் பனையோலைச் சுவடியில் எழுதப்பட்டிருந்த மருந்துகளை யெல்லாஞ் செய்து தீர்த்துவிட்டான்.

அதன் பொருட்டு அந்தப் பாவிப்பையல் என்னிடம் ஒரு காசுகூட வையாமல், ஈசல் வளையில் கரடி வாயைவைத்து உறிஞ்சினாற்போல என்னிடமிருந்த பொருள்கள் முழுவதையும் உறிஞ்சிவிட்டான். அதனால் நான் இப்போது வறுமையில் அகப்பட்டு வருந்திக்கொண்டிருக்கிறேன். இந்த வேளையில் நீர் பாட்டுப் பாடிக்கொண்டு வந்து என்னுடைய கழுத்தை யறுக்கிறீர். இஃது ஒழுங்கன்று; உடனே இவ்விடத்தை விட்டு நடையைக கட்டும்; இல்லாவிட்டால் வேலையாட்களைக் கூப்பிட்டு உம்மைப் பிடித்து வெளியே தள்ளச் சொல்லுவேன்' என்றான். முழுமகன் கூற்றைக் கேட்ட புலவர், 'நானுகப் போய்விடுகிறேன்; நீ ஆட்களைக் கூப்பிட்டு என்னைப் பிடித்துத் தள்ளி இழிவுபடுத்த வேண்டாம். இழிவு படுத்தாமல் அனுப்புவதே எனக்குச் சிறந்த பரிசளித்தமாதிரி யாகும்' என்று கூறிக்கொண்டே அவ்விடம் விட்டு விரைந்து அகன்றார்.

எதுபுல வீர்விளைவு தழைவிலாக் காலத்தில்
எமதுபேர் ஊர்வி சாரித்(து)
இவ்வளவு தொலைவந்த தொல்லையென அப்பொழுது
இரண்டுபதி ருறு பல்லில்—
எவ்வளவும் மறையாமல் அவ்வளவு மேதெரிய
இருகாமும் ஏந்தி வாய்விட்(டு)
இன்புறப் புன்சிரிப்(பு) உற்றுமது சந்கீர்த்தி
எல்லாம் தெரிந்து ளத்தில்,
காதல்வைத் துத்தமிழ் பாடிவந் தோமெனக்
கழறினல் செம்பிரு தலாம்

காய்ச்சியே யாதிவிட் டதுபோலும் இம்மொழி
கலக்கமாய்க் கேட்டும் ஐயா—
கவிராச ரேவீட்டில் ஒருமாத மாகநோய்
கண்டுபெண் பிணிபி ழைத்தல்
கடினம்வெகு கடினமத ஞல்வரும் விருந்துகள்
கணக்கில்லை இவ்வூரி லோர்,
பாதக வைத்தியன் நைத்தாது பற்றுமுன்
பைத்தாது பற்றி யின்னம்
பற்ருது பற்ரு(து) எனச்சொலியென் அடிவயிறு
பற்றநான் நூறு நொத்துப்—
பனையே டெலாம்வாரி வாரிமுன் வாகடப்
பாவினுள அவிழ்தம் எல்லாம்
பாவிமகன் எழுதியொரு காசும்மை யாமல்
பருங்காடி யீசல் வளையின்,
மோதியே வாய்வைத் துறிஞ்சியது போல்தடையம்
முழுவதும் உறிஞ்சி விட்டான்
மூத்தகுடி யாள்நமக் கேற்றகுடி அலவென்று
முறைமுறை யெடுத் துரைகளும்
முழுமூட ராங்கொடிய லோபியர்கள் மேல்தமிழ்
மொழிந்தவ ரிடஞ்செ லாமல்
முப்பொழுது போற்றுமெற் கருள்புரிவை எங்குநிறை
முதலான பரம சிவமே.

(அ—ரை.) இருகாம் - இருமை. சற்கீர்த்தி - நற்புகழ். கழறினல்- மொழிந்தால். நைத்தாது - நையிலுள்ள நாடி. பைத்தாது - பையிலுள்ள பொன்;பணம். வாகடப்பா - வைத்தியப்பாடல். அவிழ்தம்- மருந்து. ஈசல் வளையில் காடி வாய் வைத்திழுத்தால் எல்லா ஈசல் களும் வந்துவிடும். தடையம் - பொருள். மூத்தடியாள் - மூதேவி. லோபியர்கள் - பிசினர்கள்.

## 14. வரால் கூட்டங்களின் மருட்சி

ஒரு புலவரும் சிற்றரசரும் ஒரு குளக்கரையில் அமர்ந்து இன்னுரையாடிக் கொண்டிருந்தனர். மக்கள் இறங்கும் நீர்த்துறையில் கயற் கூட்டங்கள் மகிழ்ச்சியொடு உலாவிக் கொண்டிருந்தன. நீர் எடுக்கவரும் பெண்களின் கண்கள் கயல்களைப் போன்று தண்ணீரில் தெரிந்தன. புலவர் அரசரைப் பார்த்து, 'அரசே! குளத்தின் துறையில் வரால்களின் கூட்டம் சுழன்று கொண்டு திரிகின்றனவே; அதற்குக் காரணம் யாது?' என்று கேட்டார். அரசர் வெறும் அரசரல்லர்; அவரும் நல்ல அறிவாளி; பல நூல்களைக் கற்றுத் தெளிந்தவர்; வேளைக்குத் தகுந்தபடி பேசுவதில் வல்லவர். அவர் உடனே புலவரை நோக்கி, 'நீர் எடுத்தற்குத் தண்ணீரில் இறங்கும் பெண்களின் கண்களின் நிழல்கள் கயல்களைப் போன்று தெரிகின்றன. அவை கண்களின் நிழல்கள் என்று அறியாத கயற்கூட்டங்கள், சிறிய கயல்கள் என்று மாறுபட எண்ணிக் கொண்டன. சிறுகயல்கள் எல்லாம் பெரியயல்கட்கு இரை யல்லவா? அப்படியே அந்த மெய்க்கயல்கள் பொய்க் கயல்களை விழுங்கும் நோக்கத்துடன் துறையில் சுற்றிக்கொண்டு திரிகின்றன' என்று கூறினார். அரசருடைய விடை புலவருக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது. அவர் அரசருடைய அறிவுத்திறத்தை மிகவும் வியந்து கொண்டாடினார். அரசரும் புலவரைப் போன்று அறிவாளியாக வில்லாதிருப்பின் இத்தகைய அரிய

விடையை அளிக்க முடியுமா? ஆகலின் அரசராக விருப்பினும் அறிவாளியாக இருப்பதுதான் மிக வுஞ் சிறந்தது.

வாவிப் படித்துறையில் வாய்ந்த வராலினங்கள்
மேவிச் சுழல்வதென்ன வேல்வேந்தே—ராவுகயல்
கண்ணார் விழிநிழல்நீர் காட்ட வதனைவிரைந்
துண்ணுவான் கூட்ட மிட்டு

(அ—ரை.) வாவி – குளம். சுழல்வது – சுற்றுவது. கயல் கண்ணார்—பெண்கள்.

---

## 15. கடன்வாங்கிய கனவான்

பட்டியூர் என்னும் ஒரு சிற்றூரிலே நிம்மப்ப ராயன் என்று ஒரு செல்வன் இருந்தான். அவன் மிகுந்த செலவாளி. நூறு காசு வருவாய் வரும் போல் தெரிந்தால் இருநூறு காசுக்குச் செலவேற் படுத்திக்கொள்வான். பிறகு கொடுத்துவிடலாம் என்னுந் துணிவினால் மனம் போனபடி கடன் வாங்கிச் செலவுசெய்வான்.

நாளடைவில் நிம்மப்பராயனுடைய செலவுகள் அதிகரித்து வந்தன. கண்டவர்களிடத்தி லெல் லாங் கடன் வாங்கிச் செலவு செய்து கொண்டிருந் தான். அந்தப் பட்டியூரிலே காளியப்பன் என் றொரு கயவன் இருந்தான். அவன் குறும்பன். இழி குணம் மிகுந்தவன்; கீழ் மக்கள் பேசுகிற பேச்சுக்கள் முழுமையும் அவன் பேசுவான். ஒரு கால் நிம்மப்பராயனுக்குக் கடன் எவரிடமும்

கிடைக்கவில்லை. எல்லோரிடமும் வாங்கி விட்ட படியால், யாரும் திரும்பக் கொடுக்க விரும்பவில்லை. காளியப்பன் ஒருவன்தான் கடன் கொடாமல் பாக்கியாக விருந்தவன். அவனிடஞ் சிறிது பண மும் இருந்தது. வேறு வழியில்லாத திம்மப்பராயன் காளியப்பனிடம் மூந்நூறு வெண்பொற் காசுகள் கடன் கேட்டான். காளியப்பன் சீட்டெழுதி வாங் கிக்கொண்டு கடன் கொடுத்தான். ஒரு குறிப்பிட்ட காலத்தில் கடனைத் திரும்பக் கொடுத்து விடுவதா கப் பேச்சு.

திம்மப்பராயனால் குறிப்பிட்ட காலத்தில் கட னைத் திருப்பிக் கொடுக்க முடியவில்லை. காளியப் பன் நெருக்கத் தொடங்கிவிட்டான். கண்ட கண்ட விடங்களிலெல்லாம் மனம் போனவாறு வையலானான். காளியப்பனுடைய வசைமொழி காதினாற் கேட்கக்கூடாததாக விருந்தது. ஆகவே திம்மப்பராயன் காளியப்பனைக் கண்ட விடங்களி லெல்லாம் அஞ்சி நடுங்கினான். மறைந்துகொள்ள இடந்தேடினான். அவனுடைய பெருமித நடை யெல்லாம் போனவிடந் தெரியவில்லை. காளியப் பனே திம்மப்பராயனை ஓட ஓட விரட்டலானான். காளியப்பன் தீயவனாகையால் அவனை யெதிர்க்க வும் திம்மப்பராயனால் முடியவில்லை. ஆகவே காளி யப்பனைக் கண்டால் ஒளிந்து கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. காளியப்பனைக் கண்டு திம்மப்ப ராயன் அஞ்சி நடுங்குவதைக் கண்ட ஊரார் இறும்பூ தடைந்தனர். அந்தோ திம்மப்பராயனுடைய யானை போன்ற பெருமித நடை காளியப்பனுக்கு

மூன் இவ்வாறு பூனை நடையாக முடிந்ததே என்று வருந்தினர். அத்தோடு கடன் வாங்குதலின் இழிவும் அவர்களுக்கு நன்கு விளங்கியது. திம்மப்பராயன் தான் வாங்கியிருந்த கடன்களை யெல்லாம் ஒருவாறு கொடுத்துத் தீர்த்துவிட்டுப் பிறகு கடன் வாங்குவதே இல்லை யென்று உறுதிபூண்டு எளிய வாழ்க்கையை மேற்கொண்டான். மற்றவர்களும் கடன் வாங்காமல் எளிய வாழ்வை மேற்கொண்டு வரவுக்குத் தக்கபடியாகச் செலவு செய்யுமாறு அறிவுரை புகன்றான். 'கடன் பட்டார் நெஞ்சம் போலக் கலங்கினான் இலங்கை வேந்தன்' என்பது கம்பர் வாக்கல்லவா ?

யானைபோல் வாரும் அயலே கடன்கொண்டால்
பூனைபோல் ஒல்கிப் புகுவரே—மானம்
அழிய வருகின்ற அவ்வழியை யாண்டும்
ஒழிய விடுக வுணர்ந்து.

(அ—ரை.) அயலே - பக்கத்திலே ; ஒல்கி - நடுங்கி ; மானம் - பெருமை ; யாண்டும் - எப்பொழுதும்.

## 16. புகழ்வதாற் பயனேது?

ஒரு புலவர் ஒரு பிசினன்மேற் புகழ்ச்சியாகப் பல பாடல்கள் இயற்றிக்கொண்டு சென்றார். பிசினன் முன்னிலையில் அரங்கேற்றமுஞ் செய்தார். அப்பிசினன் பொருளுடையவ னென்றாலும் கொடுப்பதற்கு உள்ள மில்லாதவன். 'உள்ள மிலாதவ ரெய்தார் உலகத்து, வள்ளியம் என்னுஞ் செருக்கு' என்பது தெய்வப் புலவர் திருவாக்கு. காதவழி பேரில்லான் கழுதையோ டொக்குமெனக் கழறலாமே என்பதும் அப்புல்லனுக்குத் தெரியாது.

அப்புல்லன் புலவருடைய புகழ்ப் பாக்களைக் கேட்டுவிட்டு, 'ஓய் புலவரே! இந்த உலகில் உம்மைப் போன்ற புலவர் கூட்டத்திற்கு எதிர்ப்பட்டவன் நான் ஒருவன்தானா? உங்களுக்குப் பாடுகிற இந்த ஒரு வேலையைத்தவிர வேறுவேலை யில்லையா? பிடிவாதமாகத் தினந்தோறும் வந்து தொல்லை செய்கிறீர்களே; புலவர் என்றால் என்னிடஞ் செல்வத்தைக் கொண்டுவந்து கொட்டி வைத்திருக்கிறீர்களோ? அல்லது யான் புன்தயல் ஏதாவது எடுத்தேனே? நீங்கள் புளுகக் கற்றது போல் ஒரு தொழில் செய்யக் கற்றுக் கொண்டிருக்கக் கூடாதா? புகழ்வதால் எனக்கு என்ன பயன்? அதனைச் சொல்லுங்கள் பார்ப்போம்? நூல்களைப் படித்த புலவர்களைக் கண்டால் நெஞ்சம் மிகுதியாக வெரிகின்றது. கவிராயரே போய் வாரும்; என்னிடம் பொருள் ஒன்றும் இல்லை. நீர் என்மீது வசை பாடினாலும் பாடும்; நான் அதற்குச் சிறிதும் அஞ்சமாட்டேன்' என்று உறுதியாகக் கண்டித்

துச் சொல்லிவிட்டான். புலவர் அவன் கூறிய உரைகளைக் கேட்டு 'இத்தகைய இழிஞன்மேல் செய்யுள் செய்துகொண்டு வந்தோமே' என்று தம்மைத் தாமே நொந்துகொண்டு அவ்விடம் விட்டு அகன்றார். 'வில்லே ருழவர் பகைகொளி னுங் கொள்ளற்க, சொல்லேருழவர் பகை' என் னும் திருவள்ளுவர் மறைமொழியைக் கூடச் சிறி தும் பொருட்படுத்தாது 'நீர் வசைபாடினுலும் பாடும்; நான் அதற்குச் சிறிதும் அஞ்சமாட்டேன்' என் றுரைத்த அவனுடைய மடமை இருந்தவா றென்னே!

உலகில்எதிர்ப் பட்டவன் நான்தானே உங்களுக்(கு)
ஒருதொழில் தானும் இலேயோ?
ஒட்டாரம் காட்டியே நித்தம்நித்தம் வந்(து)
உபாதிக்கி றீர்களேயோ,
புலவரென் றால்தனம் கொட்டிவைத் தீர்களோ
புதையல்யான் எடுத்த(து) உண்டோ?
புளுகக் கற்றதுபோலொர் தொழில்கற்க ஒண்ணுதோ
புகழ்வதாற் பயனேது காண்,
கலேகற்ற வர்கள்என் னில்நெஞ்சம் எரிகின்றதே
கவிராச ரே செல்லுவீர்
காசென் னிடத்திலே சபிக்கிலஞ் சேனெனும்
கசடர் மேல் தமிழ்பாடியே,
செலும்வழி மறித்தென்னே யாளவிது தருணமே
சிற்சபை நடிக்கு முக்கண்
தேசிகம் பூத்தவுமை நேசபொன் னம்பலவ
தேசிக சிரோரத் நமே.

(அ - ரை.) ஒட்டாரம் - பிடிவாதம். உபாதிக்கிறீர் - தொல்லை செய்கிறீர். கசடர் - குற்றமுள்ளவர்.

# 17. குறும்புக்குப் பரிசு

சின்னக் காஞ்சிபுரத்திலே அம்மைச்சி என்று பெயருடைய ஒரு கணிகை இருந்தாள். அவள் புலமையும் உடையவள். செய்யுள் பாடுந் திறமும் நன்கு அமையப்பெற்றவள். அவளுடைய வீடு திருமாலுடைய தேரோடும் தெருவிலே அமைந்திருந்தது. அத் தெருவிலே வைணவப் பார்ப்பனராகிய ஐயங்கார்களுடைய இல்லங்களும் அமைந்திருந்தன. அக கணிகை அறிவாளியாக விருந்தது ஐயங்கார்களுக்கு மிகுந்த பொறாமையை உண்டாக்கியது. அவர்கள் அக்கணிகையிடம் பகைபாராட்டிக கொண்டே யிருந்தார்கள். அவளை எப்படியாயினும் அத்தெருவை விட்டுக் குடிக்கிளப்பிவிட வேண்டுமென்று முடிவு செய்து, அதற்குத் திட்டம் போட்டுக்கொண்டிருந்தார்கள்.

பெருமாளுடைய திருவிழா வந்தது. தேர்த் திருநாளன்று தேரை அம்மைச்சியினுடைய வீட்டில் ஏறும்படியான நிலைமையிற் செலுத்தி, அவளுடைய வீட்டை இடித்து விடுவதென்று முடிவுசெய்தார்கள். முன்னேற்பாட்டின்படி தேர் அம்மைச்சியின் வீட்டில் சென்று முட்டிக்கொண்டது. வீட்டை இடித்தால் அல்லாமல் தேரை இழுக்கமுடியாதென்னும் நிலைமை ஏற்பட்டுவிட்டது. 'வீட்டை இடிக்கவேண்டும்' என்றார்கள். வேறு சிலர், 'இடிக்கக் கூடாது' என்றார்கள். அப்பொழுது அங்கு பெரும்-புலவர் ஒருவர் வந்திருந்தார். அவர் அம்மைச்சியின் மீது மிகுந்த அன்புடையவர். வைணவர்களுடைய குறும்

புத்தனமான செய்கை அவருக்கு நன்கு விளங்கிற்று.

அப்புலவர் தேர்மீதிருந்த பெருமாளைப் பார்த்துத், 'தேரின் மீது எழுந்தருளியுள்ள பெருமாளே! கச்சியில் எழுந்தருளியவரே! அந்நாளில் இராவணன் இருந்து கொடுங்கோலாட்சி புரிந்த இலங்கையென்று நினைத்துக்கொண்டோ பார்ப்பார்களைக் குரங்காக்கிப் படையெடுத்துககொண்டு வந்தீர்? இது பலம் பொருந்திய இலங்கைக் கோட்டையன்று; அம்மைச்சியினுடைய வீடு தெரியவில்லையா ?' என்று பார்ப்பார்களைக குரங்கென்று தம்முடைய வாயினாலே பாடினார். பார்ப்பார்கள் தமது குறும்புக்குப் பரிசு கிடைத்த தென்று தேரை வேறு வகையாக நடத்திச்சென்றனர்.

பார்ப்பார் குரங்காய்ப் படையெடுத்து வந்தீரோ
தேர்ப்பெருமா ளேகச்சிச் செல்வரே—கோப்பாகக்
கொம்மைச்சிங் காரலங்கக் கோட்டையென்று கொண்டீரிஃ
தம்மைச்சி வாழும் அகம்.

(அ-ரை.) கோப்பு-தொடர்பு. கொம்மை-பருமை. அகம்-வீடு.

## 18. பேதையின் பெருங்கொடை

ஒரு புலவர் ஓர் அற்பச் செல்வனிடம் பாடல் பாடிக்கொண்டு சென்றார். அச்செல்வன் புலவரைப் பார்த்து, 'புலவரே! வந்த காரியம் யாதென்று கேட்டான். அதற்குப் புலவர், 'உம் மேல் செய்யுள் பாடிககொண்டு வந்திருக்கிறோம். மிகவும் அருமையான செய்யுள்கள். அவற்றைக் கேட்டுத் தகுந்த நன்கொடை வழங்கி என்னுடைய வறுமையைப் போக்கவேண்டும்' என்றார்.

புலவர் புகன்றதைக் கேட்ட செல்வன், 'மிக நேர்த்தியாக விருக்கிறது. முன்பு ஒரு வித்துவான், நானூறு பாடல் கொண்ட கோவை ஒன்றை என் மீது பாடிக்கொண்டு வந்தான். நான் அவன் பாடல் மீது மிகுந்த விருப்பம் வைத்து மூன்று படி பெரு வரகு கொடுத்தேன். அதற்கு என் மனையாள் என்னைப் படுத்திய தொல்லை சிறிதன்று. மூன்று தடவை தற்கொலை புரிந்துகொண் டிறக்கத் தொடங்கி உயிர் பிழைத்ததை இந்நாடெல்லாம் அறியும். இச்செய்திகளை யெல்லாம் நீர் அறிந்திருக்கலாம். அவ்வாறிருந்தும் நீர் செய்யுள் பாடும் புலவர் என்று இங்கு வந்தது மிகுந்த வியப்பாக விருக்கிறது. போம் போம்' என்றான்.

வெண்பாச்சொல் கவிஞரே வந்ததே தும்மீது
மெய்த் தமிழ் பாடிவந்தோம்
வெகுநேர்த்தி முன்னமே நானூறு கோவையொரு
வித்துவான் பாடிவந்தான்,

நண்பாக மனம் வைத்து மூன்றுபடி பெருவாகு
நான்கொடுத் தேன தற்கிந்
நாடெலாம் தெரியும்என் மனையாட்டி மூன்றுதாம்
நான்றுகொண் டுயிர்பி ழைத்தல்,
புண்பாடெ லாமறிந் தின்னநீர் கவிசொலும்
புலவரென் றிங்கு வந்தீர்
போம்போம் எனச்சொல்லிப் புலையாடு புலையரொடு
போராட வோப டைத்தாய்,
தெண்பா எனும்பொருட் பாமாலை பூண்டுபத
சேவைதந் தருள் புரிகுவாய்
தேசிகம் பூத்த உமை நேசபொன் னம்பலவ
தேசிகசி ரோரத் நமே.

(அ-ரை.) நான்று கொண்டு—தற்கொலை செய்து கொண்டு, புலையாடு-இழிசொற்பேசும், தெண்பா-தெளிந்த பா.

---

## 19. செய்யுட்குரியவரிடம் செல்லுங்கள்

ஒரு செல்வனை ஒரு புலவர், கொடையிற் கன்னன் என்றும், செல்வத்தில் குபேரன் என்றும், அழகிற் காமன் என்றும் கற்பித்துப் பாடிக்கொண்டு சென்றார். பாட்டுப் பலபடப் புனைதலாக விருந்தது. அச்செல்வன் இரவலர்க்கு உதவி செய்யும் இயல்புடையவன்தான். ஆயினும் தன்னை அளவு கடந்து புகழ்ந்திருந்தது அவனுக்குச் சற்றும் பிடிக்கவில்லை. புலவர்கள் புகழாமலே வந்து செல்வர்கள் கொடுப்பதை வாங்கிக்கொண்டு செல்லவேண்டு மென்பது அவனுடைய எண்ணம். ஒரு சிலருக்காயினும் புகழவேண்டாம் என்று

அறிவு புகட்ட அவன் எண்ணியிருந்தான். ஆகவே, அவன் புலவரைப் பார்த்து, கொடையில் நான் கன்னனும் அல்லன்; செல்வத்திற் குபேரனும் அல்லன்; அழகிற் காமனும் அல்லன்; ஒன்றும் இல்லாத என்னை நீர் ஏன் இவ்வாறு புகழ்ந்துகொண்டு வந்திருக்கிறீர்கள்? உம்முடைய புகழ்ச்சியை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. உம்முடைய பாட்டிற்கு நான் உரியவனும் அல்லன். பிறகு யார் உரியவர்கள் என்றால் இறந்து போன கன்னனும் தேவருலகில் உள்ள குபேரனும் காமனும்தான் உரியவர்கள்; அவர்களிடத்திலே சென்று அரங்கேற்றிப் பரிசிலைப் பெற்றுக்கொள்ளும்' என்று கூறிவிட்டான். புலவர், 'இந்தச் செல்வன் தற்புகழ்ச்சியை விரும்பாதவன் என்று நமக்குத் தெரியாது போயிற்றே' என்று எண்ணமிட்டுக் கொண்டே போய்விட்டார். எதிலும் அளவு வேண்டும். அளவிற்கு மீறினால் விருப்பிற்குப் பதில் வெறுப்புத்தான் ஏற்படும்.

> கன்னபொன் னெழிற் காமா வென் றேகவி கட்டி என்முன்,
> உன்னதிரக் குங்கவிப் புலவீர் உமக்கொன் றுங் கொடேன்
> முன்னாளும் பாடல் எனக்க லக்கன்னன் முதலியர்க்கே
> அன்னாரிடஞ் சென்(று) அரங்கேற்றிக் கொண்மின் அருகிதியே.

(அ-ரை) கன்ன-கன்னனே! பொன்ன-குபேரனே; காமா-காமனே! உன்னாது-ஒன்றும் எண்ணாமல். அன்னாரிடம் சென்று-அவர்களிடம்போய்.

*

## 20. சொல்லேருழவர் பகை

அவிநாசிப் புலவர் என்று புகழ் படைத்த புலவர் ஒருவர் இருந்தார். அவர் இசை பாடுவதிலும் வசை பாடுவதிலும் வகை மிக உடையவர். பெருஞ் செல்வர்கள் மீது அரிய பாடல்கள் செய்துகொண்டு செல்வார். புலவரைப் போற்றிப் பரிசளித்தவர்கள் பிழைத்தார்கள்; பரிசளியாது வெறுங்கையாக அனுப்புபவர்களுடைய கதி அதோகதிதான். அப் புலவரைக்கண்டால் செல்வர்கள் அனைவரும் அஞ்சி நடுங்குவார்கள். அவர் வாக்கால் புகழ்ந்து பாடினாலும் இகழ்ந்து பாடினாலும் அவை அப்படியே பலிக்கும். அவர் அறம்பாடிப் பலரைத் தொலைத்தும் இருந்தார்.

அந்நாளில் வேங்கட்ட ராமன் என்று பெயருடைய ஒரு பெருஞ் செல்வன் இருந்தான். அவன் மிகவும் பெரிய செல்வனாகையால் எதற்கும் அஞ்ச மாட்டான். அறிவும் நிரம்பப்பெற்றவனல்லன். ஆகையால், அஞ்ச வேண்டியவைகளுக்குக்கூட அஞ்ச மாட்டான். அவிநாசிப் புலவர் அந்த வேங்கட்ட ராமன்மீது புகழ்மாலை பாடிக்கொண்டு சென்றார். வேங்கட்டராமன் புகழ்மாலையைக் காது குளிரும்படி கேட்டான். இனிமையாக அளவளாவினான். சாப்பாட்டு வேளை வந்தது. 'புலவரே! இன்னொரு நாளைக்கு வாரும்; ஏதாவது தருகிறேன். இன்று நேரமாகி விட்டபடியால் சாப்பிடுதற்குச் செல்கிறேன்' என்று கூறிவிட்டுக் கதவைத் தாளிட்டுக்கொண்டு சென்றான். புலவருக்கோ வயிற்றுப்பசி பொறுக்க

முடியாமலிருந்தது. வெகுளியானது பசியுடையவர் கட்கு மிகுதியாக வுண்டாவது இயற்கை. வேங் கட்ட ராமன் செய்கை அவிநாசிப் புலவருக்கு அளவு கடந்த சீற்றத்தை உண்டாக்கியது.

சீற்றமடைந்த புலவர், 'சண்டித்தனம் செய்யும் கீழ் மகனாகிய வேங்கட்ட ராமனே! உன்னுடைய உயிருள்ள வரையில் உன்னை கட்டுவக்காலியுந் தேளும் மிகுந்த சினத்துடன் கொட்டவும், திறு திறு என்று விழிக்கிற விழியிலே குளவிகள் கொட்டவும், அதிலிருந்து குருதியானது ஆறாகப் பெருகவும் அத னாலே நீ இறந்தொழிக. பாவி மகனே! உன்னுடைய வீட்டு வாசலிலே சாப்பறைகள் மிகுதியாக வந்து அடிக்கவும் பந்தரிலே உறவினர்கள் மாரடித்துக் கொண்டு வாய்க்கரிசியாக படி நெல்லைக் கொணர் ந்து கொட்டவும் மிகுந்த ஆவலோடு உன்னுடைய கால்மாட்டிலே உட்கார்ந்துகொண்டு உன் மனைவி ஒப்பாரி வைத்துக் கண்களிலேயிருந்து தண்ணீ ரைக் கோட்டையாகக் கொட்டவும், "ஐயையோ, நான் இனிமேல் யாது செய்வேன்" என்று கூறிப் புலம்பி உன்னுடைய மகன் தாரைதாரையாகக் கண்ணீரைக் கொட்டவும், நீ செத்துக் கிடக்கும் இடத்திலே அறுத்த பெண்களெல்லாம் கூடியழவும், நீ இறந்து துணியினாலே கால் கைகளெல்லாம் கட் டப்பெற்றுச் சப்பாணி கொட்டுவாயாக' என்று கொடிய வசைகவி ஒன்றைப் பாடினார். பலரை ஒன்றுகூட்டினார். அவர்கள்முன் தாம் பாடியுள்ள வசைகவியை அரங்கேற்றஞ் செய்தார். புலவர்

வாக்குப் பலிதமுள்ளவராகையால் அவருடைய வாக்குப் பலித்துவிட்டது. மிகு விரைவிலே வேங்கட்ட ராமன் தீச்சாவை எய்தினன்.

சீவனுள் ளளவுமே நட்டுவக் காலியுந்
 தேளுஞ் சினந்து கொட்டத்
திறதிறெனும் முண்டவிழி யிற்குளவி கொட்டவது
 செங்குருதி யாறு கொட்டப்,
பாவிமகனேயுனது வாசலில் சாம்பிணப்
 பறைகள்மிக வந்து கொட்டப்
பந்தரடி மாரடித் துறவினர்கள் வாய்க்கரிசி
 படிநெற் கொணர்ந்து கொட்ட,
ஆவலொடு கால்மாட்டில் உனதுபெண் டாட்டிகள்
 அருவியொரு கோட்டை கொட்ட
ஐயையோ என்செய்வேன் என்றுமகன் நீர்மாலை
 அதனைக் கொணர்ந்து கொட்டச்
சாவடியில் அறுதலிகள் கூடியழ நீ வந்து
 சப்பாணி கொட்டி யருளே
சண்டிக் குலாமகனே வேங்கட்ட ராமனே
 சப்பாணி கொட்டி யருளே.

(அ-ரை.) குருதியாறு-இரத்த ஆறு. சாவடி-இறந்து கிடக்கும் இடம். அறுதலிகள்-முன்னரே தாலியறுத்தவர்கள். குலாமகன்-கீழ்மகன்.

---

# 21. பாவாணர்க் கஞ்சும் பதடி

ஒரு பெரும்-பணக்காரர் எப்பொழுதும் பாவா ணர்களுக் கஞ்சி நடுநடுங்கிக்கொண் டிருந்தார். அவருடைய வீட்டுத் தலைவாசற் கதவு எப்பொழு தும் தாழ்ப்பாள் போடப்பட்டே யிருக்கும். கையில் கடிதத்துடன் யாரையாவது கண்டுவிட்டாற் போதும். அவர் தம்மிடம் பரிசுக்காகத்தான் வரு கிறார் போலும் என்றெண்ணி வீட்டிற்குள் ஒளித் துக்கொள்ளுவார்.

ஒருநாள் தெருவாசல் கதவு திறந்திருந்தது. அதைக் கண்ட செல்வருக்கு அளவு கடந்த சினம் உண்டாகிவிட்டது. உடனே அவர் தம்முடைய மனைவியைப் பார்த்துத், 'தெருவாசற் கதவை யாரடி திறந்தது? இவ்வாறு திறந்துவைத்திருக் கிறதே. தமிழ்ப் புலவர்கள் வந்துவிட்டாற் சும்மா போய்விடுவார்களா? நீ எனக்குத் தகுந்த மனைவி யல்லள். வீட்டுப் பீடை (கிரகசாரம்)யோ அல்லது எட்டாமிடத்து (அட்டமத்து)ச் சனியனோ அல்லது வேறென்ன குறையோ தெரியவில்லை. ஆனந்த ஆண்டிலே நான் பாவாணர்களால் பட்ட துன்பம் யாருக்குத் தெரியும்? அந்த ஆதிபகவானல்லரோ அறிவார். உன் மனம் மட்டும் சிறிதும் இளகாமல் இருக்கக் காரணம் யாது? என் மனம் மிகவும் பதறுகிறதே' என்று சொல்லிக்கொண்டிருந்தார். அப்போது தெருவில் ஒருவர் ஓர் ஏட்டைக் கையில் வைத்துக்கொண்டு விரைவாக வந்துகொண் டிருந் தார். அவர் ஒரு புலவர்தாம். அந்தப் பேதைச்

செல்வனைத்தான் தேடிப் பாப் பாடிக்கொண்டு வந்துகொண்டிருந்தார். அந்தப் பேர்வழியைக கண்டதும் செல்வனுடைய உயிர் முக்கால் பங்கு போய்விட்டது.

உடனே தம் மனைவியைப் பார்த்து, 'அடி பெண்ணே! யாரோ ஒருவர் வீதியில் கையில் ஏட்டுடன் விரைவாக வருகிறார். ஐயையோ! அவரைப் பார்த்தால் புலவர்போல் இருக்கிறார். நீ அவர் யார் என்று மெள்ள எட்டிப்பார். தலையைக் காட்டிவிடாதே; தலை மறைவாகவே நின்றுகொள். அவர் பாதை வழியே போகிறாரா? அல்லது நம்முடைய வீட்டுக்கு வருகிறாரா என்று பார். எல்லாவற்றிற்கும் என்னைப் பரணிமீது தூக்கி விட்டுவிடு; நான் அங்கு ஒளித்துக்கொள்கிறேன். அடி பழிகாரி! விரைவாகக் கதவை மூடு; தாளைப் போடு. நாம் பேசுகிற சிறுமொழியையுங் கேட்டுவிட்டு மிக விரைவாக வந்துவிடுவார்கள். புலவர்கள் செய்தி உனக்குத் தெரியாது. நீயும் குதிருக்குள் ஒளிந்துகொள்' என்று கூறிவிட்டுப் பரணியில் ஏறி மறைந்துகொண்டார். வீடு தேடிவந்த புலவர் வீட்டில் சிறிது நேரம் காத்திருந்தார். வீட்டு வேலைக்காரன் ஒருவன், 'வீட்டில் யாரும் இல்லை' என்று கூறினான். சிறிது நேரங்கழித்து அந்த வேலையாளே வீட்டுக்காரன் புலவருக்கு அஞ்சி ஒளிந்துகொண்டதை மறைமுகமாகக கூறினான். புலவர் அவன் கூறியதைக் கேட்டு நகைத்து அந்தச் செல்வனுடைய தன்மையைப் பாட்டில் அமைத்துப் பாடிக்கொண்டு சென்றுவிட்டார். பிறகு அந்தப் புலவர் எவரிட

றும் புகழ்ப் பாக்கள் பாடிக்கொண்டு செல்வதில்லை யென்று உறுதி செய்து, இறைவனையே புகழ்ந்து பாடிக்கொண்டிருந்தார். அத்தகைய இழிகுணம் வாய்ந்த செல்வர்களும் இருந்திருப்பார்களா என்று யாரும் ஐயப்படாதீர்கள். அத்தகையோர் இக் காலத்திலும் எத்தனையோ பேர் இருக்கிறார்கள்.

*தலைவாசல் வின்கதவை யாரடி திறந்தவர்கள் தமிழ்வாணர்*
*வரில்விடுவரோ*
*தாமலர் நிகரக சாரமோ வட்டமச் சனியனோ எதுகுறையோ,*
*அலையா தலைந்துநான் கவிவாணர் தங்களால் ஆனந்த வருடத்திலே*
*யான்பட்ட பாட்டையோ யாரவறி வாரந்த ஆதிபக*
*வானறிகுவார்,*
*மலையாம லுன்மனம் இருப்பதேன் புலவன்மார் வரிற்சுமர போவ*
*ரோதான்*
*மனம்பதறு தேயெனப் புகல்பவ ரிடஞ்செலா மற்காக்க*
*வி துதருணமே,*
*சிலையாரு நுதல்விழிக் கௌரிகென மாரிசக தீஸ்வரி வராகி கிமலி*
*தேசிகம் பூத்தவுமை நேசபொன் னம்பலவ தேசிக சிரோரத்*
*கமே.*

(அ - ரை.) தமிழ்வாணர் - தமிழிலே வாழ்பவர். மலையாமல் - கலங்காமல்.

*ஆரடி வீதியிலோ ரேடுகொண் டோடியே அவசரம தாய்வருகிறார்*
*ஐயையோ புலவன்மார் போலே யிருக்கின்ற தியாரென்று*
*மெள்ள வெட்டிப்,*
*பாரடி தலைமறைய நின்றுகொண் டவர்நெடும் பாதைவழி*
*போகிறது தான்*
*பரண்மேல் எனைத்தூக்கி விட்டுவிடு தானையடை பழிகாரி*
*கதவு போடு*

கூர்மைமொழி கேட்டதிக சீக்கிரம் வந்திடுவர் குதிருக்குள்
ளேயொளித் துக்
கொள்ளடி யெனப்புகலும் லோபியர்கள் மேல்தமிழ்
கொண்டுபோ யலையாமலே,
சீரடி துதித்துநற் பாமாலை சாற்றியே தெரிசிக்க முத்தி தருவாய்
தேசிகம் பூத்தவுமை நேசபொன் னம்பலவ தேசிக சிரோரத்
நமே.

(அ - ரை.) கூர்மை மொழி - மெதுவான பேச்சு.

---

## 22. பெற்ருேர் பெருமை

காவிரித்துறை என்னும் ஊரிலே சேந்தன் என்னும் பெயருடைய சிறுவன் ஒருவன் இருந்தான். அவனுக்கு அகவை பதினெட்டு நிரம்பியது. அவன் நல்லாசிரியர் ஒருவரை யடுத்துப் பல கலைகளையும் வழுவற வுணர்ந்திருந்தான். அவனுடைய ஆசிரியர் கற்றுத் துறைபோகிய நற்றிறமுடையவராதலின் சேந்தனுக்குச் சீரிய முறையிலே கல்விப் பயிற்சியைச் செய்வித்திருந்தார்.

சேந்தன், 'ஏட்டுச் சுரைக்காய் கறிக் காகாது' என்று எண்ணுமல், 'கற்க கசடறக் கற்பவை கற்ற பின், நிற்க வதற்குத் தக' என்னும் திருவள்ளுவர் திருவாக்குப்படி கற்ருங் கொழுகுதலைக் கடனகக் கொண்டு நடந்துவந்தான். அவனுடைய தந்தை இறந்துபோகத், தாய் சேந்தனைக் கண்ணுங் கருத்துமாக வளர்த்துத் திருமணமுஞ் செய்து வைத்தாள். சேந்தன் இல்லற வாழ்க்கையை

மேற்கொண்ட சிலநாள்களிலே, காவிரித்துறையிலே அடிக்கடி கொள்ளைக்காரர்கள் அச்சம் மிகுதியாயிற்று. கொள்ளைக்காரர்கள் பெருங் கூட்டமாகப் பலவகை ஆயுதங்களுடன் இரவில் ஊருக்குள் புகுந்து கண்டபடி கொள்ளையடித்தும் அகப்பட்டவர்களைச் சிறிதும் இரக்கமில்லாமற் கொலை புரிந்தும் பெருந்தொல்லை விளைத்தனர்.

கொள்ளையர்க் கஞ்சிய ஊரினர் தம்முடைய அரும் பொருள்களை மட்டும் எடுத்துக்கொண்டு கொள்ளையர் தொல்லை யில்லாத மற்ற வூர்களுக்கு ஓடினர். அப்பொழுது சேந்தனுடைய தாய், அகவை முதிர்ந்து நடக்க வியலாதவளாகவும் கண் பார்வை முக்காலளவு தெரியாதவளாகவும் இருந்தாள். அருர்பொருள்கள் பலவற்றையும் எடுத்துக் கொண்டு ஊரைவிட்டு ஓடுகிறவர்களோடு சேந்தன் தன்னுடைய தாயை எடுத்துக்கொண்டு செல்வதென்று முடிவுசெய்தான். ஒரு புடவையினால் குழந்தைத் தொட்டிலைப்போல் ஒரு தொட்டில் கட்டினன். ஓர் உலக்கையைத் தொட்டிலில் மாட்டினன். தன் தாயைத் தொட்டிலில் போட்டுத் தான் ஒரு பக்கமும் தன் மனைவி ஒரு பக்கமுமாகத் தூக்கிக்கொண்டு ஊரைவிட்டுச் செல்பவர்களோடு சென்றான்.

மற்றவர்கள் சேந்தனுடைய செய்கையைக் கண்டு கையாண்டி செய்து நகைத்தனர். அவர்கள் சேந்தனைப் பார்த்து, 'ஓ சிறுவ! என்ன ஒன்றுந் தெரியாதவனாக விருக்கிறாய்; என்னவோ படித்த

தாகச் சொன்னுயே; அந்த அறிவெல்லாம் என்னுயிற்று? எல்லாப் பொருள்களேயும் போட்டுவிட்டு இறக்கப்போகிற கிழவியைத் தூக்கிக்கொண்டு வருகிருயே; இக்கிழவியினல் இனி என்ன பயன்? எங்கிருந்தாலும் இன்னும் சில நாளில் இறக்கப் போகிற இவளே என் வீணுகத் தூக்கிக்கொண்டு அலேகிருய்?' என்ருர்கள். அவர்கள் கூறியதைக் கேட்ட சேந்தன், "பெரியீர்! நீங்கள் கூறுவது நன்ருகவில்லே. 'தாயிற் சிறந்தொரு கோயிலும் இல்லே,' 'அன்னேயும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்பனவாய பழமொழிகளே யெல்லாம் நீவிர் அறியீர்களா? பெற்று வளர்த்த தாய்தந்தைக்குக் கைம்மாறு செய்ய எவரால் இயலும்? பிள்ளேயானவன் தாய் தந்தையர்க்குத் தான் நூறு ஆண்டு வரையிலும் அடிமைத்திறம் பூண்டு நடப்பதுடன் மூவுலகத்தினு முள்ள பொருள்கள் எல்லாவற்றையும் காணிக்கைப் பொருளாகக் கொடுத்து முறைமையாக வழிபாடு செய்தாலும் அவர்கள் நம்மை ஒருநாள் வளர்த்ததற்குக்கூடத் தகுந்த கைம்மாருகாதே" என்ருன். சேந்தன் அறிவுரையைக் கேட்டவர்கள், தங்கள் மடமைக்கு மிகவும் நாணிச், சேந்தன் அறிவையுஞ் செயலேயும வியந்து கொண்டாடினர்கள்.

ஈன்று வளர்த்த தாய்தந்தைக்(கு) எவரே கைம்மா(று) இயற்றிடுவார்
ஆன்ற மதலே நூறுவய(து) அளவும் அடிமைத் திறம்பூண்டு
மூன்றுபுவனத்(து) உள்ள பொருள் முற்றும் அளித்து முறை முறையே
ஏன்று வழிபா(டு) இயற்றிடினும் ஒருநாள் வளர்த்தற் கியையாதே.

(அ - ரை.) ஆன்ற மதலை - அறிவு முதலியவைகள் நிரம்பப் பெற்ற பிள்ளை. புவனம் - உலகம். என்று - ஏற்று. இயையாது - பொருந்தாது.

---

## 23. நெற்பயிரும் நேரிழையாரும்

ஒரு புலவர் ஓர் அவைக்கண்ணே சொற்பொழிவாற்றிக்கொண்டிருந்தார். அப்பொழுது, 'பெண்கள் நெற்கதிரைப் போன்றவர்கள்' என்றார். உடனே அவையிலிருந்த ஒருவர் எழுந்து, 'அஃதெவ்வாறு? விளக்கிக் கூறுங்கள்' என்றார்.

அதற்குப் புலவர், 'நெற்கதிர் முதலிற் சிறிதும் வளைவின்றி நிமிர்ந்து எழுகின்றது. பின்னர்ச் சிறிது வளைகிறது. கதிர் முற்றிப் பழுத்துவிட்டாலோ பயிராகிய தலைவன்முன் நன்றாகத் தலை சாய்ந்து நிற்பதுடன் நெல்லால் உலகிற்கு மிகவும் பயன்படுகிறது. பெண்களும் அந்த நெற்கதிரைப் போல முதலில் அதாவது பேதைக் காலத்தில் சிறிதும் வணக்கம் அடக்கம் ஒடுக்கம் இல்லாமல் நிமிர்ந்து திரிகிறார்கள். பிறகு பெதும்பைக் காலத்தில் சிறிது வணங்கிச் செல்கிறார்கள். அதன்பின் மங்கைக் காலத்திலோ மிகுந்த நாணத்தையடைந்து ஆடவர் முன் தலைகவிழ்ந்து நிற்கிறார்கள். பின் வாழ்க்கைத் துணைவியராகிப் பிள்ளைகளைப் பெற்று உலக வளர்ச்சிக்குப் பயன்படுகிறார்கள். இத் தன்மையினால் நெற்கதிரும் பெண்களும் ஒருவாறு ஒருதன்மை வாய்ந்தவர்களாக விருக்கிறார்கள்' என்றார். புலவர்

உரையைக் கேட்ட அவையோர், புலவர் கூற்றுத் 'தகும் தகும்' என்று உரைத்தார்கள்.

பேதைமையில் ஆடவர்முன் வளைவின்றிப் பெதும்பைமையின்
மேதகச்சற் றெனவணங்கி மங்கைமையின் மிகநாணும்
மாதரைப்போற் பைங்கூழின் மன்னனெதிர் கதித்தெழுந்த
ஏதமிலாக் கதிர்முதிர்ந்து வரவரக்கீழ் இறைஞ்சுமால்.

(அ - ரை.) மேதக - மேன்மை பொருந்த. ஏதம் - குற்றம். இறைஞ்சும் - வணங்கும்.

---

## 24. வறுமையிலுஞ் செம்மை

கோநகர் என்னும் ஊரிலே பழநியப்ப செட்டியார் என்றொரு செல்வர் இருந்தார். அவர் மிகப் பெருஞ் செல்வர். திருத்தொண்டர் புராணம் முதலிய நூல்களிலும் நல்ல தேர்ச்சியுள்ளவர். திருத்தொண்டர் புராணத்திலே கூறப்படுந் தொண்டர்களைப் போலத் தாமும் பலருக்கு விருந்து செய்து மகிழவேண்டும் என்று எண்ணினார். தம்முடைய செல்வத்தை யெல்லாம் விருந்தோம்புவதிலேயே செலவிட்டார். அவருடைய உறவினர்கள், 'இவ்வாறு விருந்தோம்புங் காரியத்தை மேற்கொண்டால் நமக்கு வறுமை வரும்' என்று தடுத்துப் பார்த்தனர். செட்டியார் அவர்கள் கூறியவற்றைக் கேளாது தமது காரியத்திலேயே கண்ணுங் கருத்துமாக இருந்தார்.

செட்டியார் பெருஞ் செல்வர் என்றுணர்ந்த கொள்ளைக்காரர்கள் சிலர் செட்டியாருடைய

பொருள்களை ஒருநாள் நள்ளிரவில் கொள்ளை யடித்துக்கொண்டு போய்விட்டனர். செட்டியார் தம் முடைய பொருள் கொள்ளைபோய்விட்டதைக் கண்டு மனஞ் சோர்வடையவில்லை. தமக்கு நேரிட்ட வறு மையை அவர் ஒரு பொருளாகவே மதிக்கவில்லை. எஞ்சியிருந்த பொருள்களைக்கொண்டு விருந்தோம் பும் வேள்வியை விடாப்பிடியாகச் செய்துவந்தார். செட்டியாருடைய பெருமை எட்டுத் திக்கும் எட்டி யது. செல்வர்கள் பலர் செட்டியாரின் விருந்தோம் புங் காரியத்திற்குப் பெரும்பொருள் வழங்கினர். அதைக்கொண்டு செட்டியார் சிவத்தொண்டர் களுக்கும் விருந்தினருக்கும் உணவளித்துப் போற்றி உள்ளம் மகிழ்வடைந்திருந்தார்.

ஒருநாள் ஒருவர் செட்டியாரைப் பார்த்து, 'உங்களுடைய பொருள்தான் கொள்ளைபோய் நீங் கள் வறியவர்களாகி விட்டீர்களே; இந்த விருந் தோம்பும் வேலையை விட்டுவிட்டு இருந்தால் என்ன? ஏன் தொல்லைப்படுகிறீர்கள்?' என்று கேட்டார். அதற்குச் செட்டியார், 'கொள்ளையிலே பொருள் களை யெல்லாம் இழந்துவிட்டு மிகுந்த வறுமையை அடைந்த காலத்திலும் வள்ளன்மைக் குணமுடைய வர்கள் தம்மை நோக்கி வந்த விருந்தினர் பசித் தீயால் வாடுவதைப் பார்த்துக்கொண் டிருப்பார் களா? ஓரறிவுமே யில்லாத நெல் வயலானது, தன்னுடைய மலர்வளம் நெல்வளம் முதலியவை களை அறுவடையாகிய கொள்ளையிலே கொடுத்து விட்ட போதுங்கூடத் தன்னிடத்திற்கு வரும் அன் னம் முதலிய பறவைகளுக்குக் காய்ந்துபோய் வய

லில் கிடக்கும் கயல் முதலியவைகளை அளித்து மகிழச் செய்ததை நீங்கள் பார்த்ததில்லையா ?' என்று கேட்டார். செட்டியார் கூறிய பதிலைக் கேட்ட முன்னவர், செட்டியாரின் நன்மனப்பண்பு தெரியாமல் பேசிவிட்டோம் என்று நினைத்துச், செட்டியாரின் அறச் செயலைப் பாராட்டியதுடன், செட்டியாருடைய விருந்தோம்பும் வேள்விக்குத் தாமும் தம்மால் இயன்ற பொருள் உதவி புரிந்தார்.

> தொள்ளைபோய் நனிவறங் கூர்ந்த காலையும்
> வள்ளியோர் விருந்தினர் வாடக் காண்பரோ
> கள்ளறு மலர்வளம் இழந்தும் கார்வயல்
> வெள்ளன மகிழமீன் விருந்து நல்குமால்

(அ - ரை) நனி வறம் - மிக வறுமை, வள்ளியோர் - வள்ளன்மையுடையவர்கள்.

---

## 25. கன்றின் குற்றத்திற்குக் கழுதைக்குத் தண்டனை

ஓர் ஊரில் வயலிலே ஒருவன் உளுந்து விதைத்திருந்தான். அந்த உளுந்து முளைத்துச் சிறு பயிராகி யிருந்தது. அப்போது காளைக்கன்று ஒன்று சுற்றித் திரிந்து புல் தேடிக்கொண்டு வந்தது. அதனுடைய கண்ணிலே உளுந்துப் பயிர் தோன்றிற்று. அதனுடைய நாக்கிலே நீர் ஊறியது. அந்த வயலிலே காவலாக யாரும் இல்லை. ஆயினும், தந்திரமுடைய அக்கன்று அப்பயிரை உடனே மேயவில்லை. மேய்ந்தால் யாராவது வந்து உடனே விரட்டி விடுவார்கள் என்று தெரியும். ஆகவே,

அக்கன்று இடத்தை நன்கு பார்த்துக்கொண்டு தன் இருப்பிடத்திற்குச் சென்றுவிட்டது.

மாடுகளிலே கொண்டிமாடுகள் என்று ஒரு வகை யுள்ளன. அதனைச் சண்டி மாடுகள் என்றுஞ் சொல்வார்கள். அவை பகற்போதிலே எல்லா விடங்களையுஞ் சுற்றிப் பார்த்து, எங்கே வைக்கோற்போர் நல்ல பயிர் முதலியன இருக்கின்றன என்று பார்த்து வைத்துக்கொண் டிருந்து, இரவிலே சென்று மேய்ந்துவிடுவது வழக்கம். மேற்கூறிய கன்றும் அந்தச் சண்டி மாட்டைச் சேர்ந்தது. அக்கன்று இரவிலே சென்று பகலில் பார்த்துவைத்த உளுந்துப் பயிர் முழுமையையுந் தின்று தீர்த்துவிட்டு ஒன்று மறியாததைப் போல இரவோடிரவாகவே தன் இருப்பிடத்திற்குச் சென்றுவிட்டது.

மறுநாட் காலையில் உளுந்து விதைத்த வயற் காரன் பயிரைப் பார்ப்பதற்கு வயலுக்கு வந்தான். வயலைப் பார்த்ததும் அவனுடைய வயிறு பற்றி யெரிந்தது. நாம் அரும்பாடு பட்டு விதைத்திருந்ததை எந்த விலங்கோ இவ்வாறு தின்று தீர்த்து அழித்துவிட்டதே என்று அவன் பெரிதும் ஏங்கினன். நான்கு பக்கங்களிலும் சுற்றிப் பார்த்தான். சிறிது தூரத்தில் ஒரு கழுதை மேய்ந்துகொண் டிருந்தது. தன் வயலில் உளுந்துப் பயிரையும் அதுதான் மேய்ந்திருக்கவேண்டுமென்று அவனாக முடிவுசெய்து கொண்டான். அவனுக்கு அளவு

கடந்த சின முண்டாயிற்று. விரைவாகச் சென்று அக் கழுதையைப் பிடித்தான்.

குற்றமற்ற அக்கழுதை தனக்கு நேரப்போகிற ஆபத்துத் தெரியாமல் விழித்துக்கொண்டு நின்றது. சின மடைந்திருந்த வயற்காரன் தன் மடியிலிருந்த கத்தியை எடுத்துக் கழுதையின் காதை ஒட்ட அரிந்துவிட்டான்.

கன்றுக் குரியவன் நடு இரவில் எழுந்து பார்த்த போது கன்று கொட்டிலில் இல்லை. அதனால் உள்ளுந்துப் பயிரை அதுதான் மேய்ந்திருக்க வேண்டு மென்று நினைத்தான். ஆயினும் அவன் அச் செய்தியை வெளியிடவில்லை. ஆராய்ந்து பாராமல் செய்கிற காரியங்கள் இவ்வாறுதான் பழியொரு பக்கமும் பாவம் ஒரு பக்கமுமாக முடியும்.

உழுத உழுத்தஞ்செய் ஊர்க்கன்று மேய
கழுதை செவியரிந் தற்றால்—வழுதியைக்
கண்ட கருங்கண் ணிருப்பப் பெரும்பனைத்தோள்
கொண்டான மன்னோ பசப்பு.

(அ - ரை.) செய் - வயல். செவி - காது. வழுதி - பாண்டியன். பனை - மூங்கில்.

# 26. இன்ப துன்பப் பற்று

ஒருநாள் செந்தமிழ்ப் புலவர் மயிலேறும் பெருமாளும், அவருடைய மாணவர் இருவரும் வயற்புறங்களைச் சுற்றிக்கொண்டு வந்தார்கள். அப்பொழுது அறுவடைக் காலம். எங்கும் நெற்கதிர் அறுவடையாகிக்கொண் டிருந்தது. முற்றிய நெற்கதிர்த் தாள்களோடு வயல்களிற் படர்ந்திருந்த பலவகைப் பூங்கொடிகளும் மலர்களும் அறுபட்டன. ஒரு மாணவன், தன் ஆசிரியரைப் பார்த்து, 'நெற்கதிர் முற்றியபடியால் அதனுடன் படர்ந்திருந்த பல வகைக்கொடிகளுக்கும் அழிவு நேரிட்டுவிட்டதே. வேண்டிய நெல்லின் தாளை அரிதலோடு நிறுத்திக கொண்டு, அந்தப் பூங்கொடிகளை யெல்லாம் அறுக்காமல் விட்டுவிடலாகாதா?' என்று கேட்டான்.

மாணவன் அவ்வாறு கேட்டதும் ஆசிரியர் அவனைப் பார்த்து, 'அஃதெப்படி முடியும்? பூங் கொடிகளை ஒதுக்கிவிட்டு அறுவடை செய்வதென் பது இயலுமா? அப்படி எவ்வளவு கொடிகளை நீக்கி யறுக்கமுடியும்? இக் கொடிகள் நெல் பயி ரோடு தோன்றி வளர்ந்தன. அதன் அழிவோடு இவைகளும் அழிய வேண்டியதுதானே முறைமை. ஒருவருக்கு இன்பமோ துன்பமோ ஏற்பட்டால், அஃது அருகில் உள்ளவர்களையும் பற்றுவது உலக வழக்கம்தானே; இதில் ஒன்றும் மாறுபாடில்லையே. இன்ப துன்பங்கள் வரின் பக்கத்தில் உள்ளவர் களையுந்தான் பற்றும். அடுத்த வீட்டுக்காரனுடைய

இன்ப துன்பங்கள் நமக்கும் வரவில்லையா?' என்றார். கேள்வி கேட்ட மாணவன் உள்ளதுதான் என்று ஒப்புக்கொண்டான்.

ஒருவ ருக்கொரு செல்லல்உற் றாலஃ(து)
அருகு ளார்க்கும் அடுப்பது திண்ணமே
கருவி மள்ளர் கதிர்க்குலை தன்னொடும்
பருமென் பூக்களும் பற்றி அரிகுவார்.

(அ - ரை.) செல்லல் - துன்பம். திண்ணம் - உறுதி. கருவி மள்ளர் - அரிவாளையுடைய பள்ளர். பரு - பருத்த.

---

## 27. பிணங்கிடந்தால் உனக்கென்ன?

பட்டினத்துத் தெரு ஒன்றிலே நோயாகக் கிடந்த ஒரு மனிதன் இறந்துபோனான். ஒரு தெருவிற் பிணங்கிடந்தால் அத்தெருவில் இருப்போர் பிணத்தையெடுத்த பிறகே உண்ணுதல் வேண்டுமென்பது நூன்முடிபு. இறந்துபோய்ப் பிணங் கிடந்த தெருவிலே புலால் உண்ணும் அசைவரும் புலால் உண்ணாத சைவரும் கலந்து குடியிருந்தனர். முதனாள் மாலையிலே இறந்துபோன பிணத்தை, மறுநாள் மாலைவரை பல காரணங்களை முன்னிட்டுச் சுடலைக்கு எடுக்கவில்லை.

ஒரு சைவன் அசைவன் ஒருவனைப் பார்த்து, 'நீ சாப்பிட்டு விட்டாயா?' என்று கேட்டான். 'என்ன இப்படிப் பேசுகிறாய்? பிணங்கிடக்கும் போது சாப்பிடக்கூடாது; பிணம் எடுக்கப்பட்ட பின்னர்தான் சாப்பிடவேண்டும் என்பது உனக்

குத் தெரியாதா?' என்றான் அசைவன். அசைவன் கூறியதைக் கேட்ட சைவன் நகைத்துப், பிணங் கிடக்கும்போது சாப்பிடக் கூடாது என்னும் விலக்குச் சைவர்களுக்கு ஏற்பட்டதே தவிர அசைவர்களுக்கு ஏற்பட்ட தன்று' என்றான்.

சைவன் கூறியதைக் கேட்ட அசைவன் சைவர்கள் அசைவர்கள் எல்லோருக்கும் ஏற்பட்டதுதான். நீங்கள் மாத்திரந்தானா மனிதர்கள்? நாங்கள் அசைவர்களென்றால் மனிதர்கள் அல்லரோ? நீ கூறுவது வியப்பாக விருக்கிறதே' என்றான். அதற்குச் சைவன், சைவர்களும் அசைவர்களும் எப்படிச் சமமாவர்? பசுவும் பன்றியும் சமமாகுமா? பிணங்கிடக்க நான் உண்ணமாட்டேன் என்று நீ பேசுவதால் உனக்கு என்ன உயர்வு வந்துவிடும்? ஆட்டுப் பிணம், கோழிப் பிணம், மீன் பிணம் முதலிய பலவகைப் பிணங்களை வீட்டிற்குக் கொண்டுவந்து சமைத்துக் கலத்திலே வைத்துக்கொண்டு, நாக்கினாலே சுவைபார்த்து நீ உண்ணும்போது வெளியே கிடக்கும் ஒரு பிணத்தைப் பற்றித்தானா உனக்குக் கவலை வந்துவிட்டது. நீ பேசுவது வேடிக்கையாக விருக்கிறதே' என்றான். சைவன் கூறியதைக் கேட்ட அசைவன் தனது அறியாமையை நினைந்து மிகவும் நாணமடைந்தான்.

பிணங்கிடக்க நான்நுகரேன் என்றுநீ பேசும்
குணங்கிடக்க வேண்டியதென் கூறாய்—பிணத்தைக்
கலத்திலே யிட்டுக் கலந்து நாவாரப்
புலத்தினால் தின்றாய் புகல்!

(அ-ரை.) பிணம்-உயிர்நீங்கிய வுடல். நுகரேன்-உண்ணேன். கலம்-ஏனம். நாவார-நாக்குப் பொருந்த. புலம்-வாய்.

---

## 28. கணிகையர் கடவுளரைப் போன்றவர்

அறுமுகப் பெருமானாகிய திருமுருகன் எழுந்தருளியுள்ள திருத்தணிகையிலே கந்தப்ப ஐயர் என்று பெயருடைய ஓர் அந்தணர் இருந்தார். அவர் சிறந்த புலவர். பல நூல்களை இயற்றியவர். அவர் ஒருநாள் தம்முடைய நண்பர் ஒருவருடன் உரையாடிக்கொண்டு ஒரு தெருவிற் சென்றார். அத்தெரு கணிகையர் தெரு. அவருடைய நண்பர் அவ்வூருக்குப் புதியவராகையால் அவரைப் பார்த்துப் புலவராகிய ஐயர், 'இத்தெரு சிவபெருமானைப் போன்ற சிறப்புடைய விலைமாதர் வாழும் இடம்' என்றார்.

புலவர் கூறியதைக் கேட்டதும் அவருடைய நண்பர் நகைத்து, 'கணிகையர் கடவுளரைப் போன்றவர்கள் என்கிறீர்களே; இது நான் இது வரை கேள்விப்படாத புதுமையாக வன்றோ இருக்கிறது. கடவுளர்களெங்கே? தீயொழுக்கம் மிகுந்த விலைமாதர்கள் எங்கே? நீங்கள் என்ன இப்படிச் சொன்னீர்களே?' என்றார்.

அதற்குப் புலவராகிய ஐயர், 'நான் எல்லாச் செய்கைகளிலும் கணிகையர்கள் இறைவனைப் போன்றவர்கள் என்று கூறவில்லை. காமுகர்கள் அளிக்கும் பொருளுக்குத் தக்கபடி அவர்களுடன்

விளையாடி இன்பத்தைக் கொடுப்பதில், அடியார்களுடைய அன்புக்குத் தக்கபடி அவர்களுக்கு அருள் வழங்கும் கடவுளரைப் போன்றவர்கள்' என்றுதான் கூறுகிறேன். கடவுளர்கள் அடியார்களுடைய அன்புக்கு அதிகமாக அருள் செய்யமாட்டார்கள். விலைமகளிரும் எள்ளுக்கு எண்ணெய் அளப்பதுபோல் இன்பத்தை அளந்துதான் வழங்குவார்களே தவிர அதிகமாகச் சிறிதும் வழங்கமாட்டார்கள். இந்த ஒரே ஒரு செயலைக் கொண்டுதான் கணிகையரும் கடவுளரைப் போன்றவர்கள் என்று கூறினேன்" என்றார். புலவர் கூற்றை நண்பர் ஒப்புக்கொண்டார்.

நன்பொருளி னுக்கியைய நன்றுவிளை யாடி
இன்புதவும் வேசையர் இறைஞ்சுமடி யாருக்(கு)
அன்பினள வைக்கியைய வாரருள் சுரக்கும்
மின்புரை நதிச்சடில வித்தகன் நிகர்த்தார்.

(அ-ரை.) இயைய - பொருந்த. இறைஞ்சும் - வணங்கும். ஆர் அருள்—நிறைந்த அருள். மின்புரை - மின்னலை நிகர்த்த. நதிச் சடில-ஆறு பொருந்திய சடையையுடைய, வித்தகன்-சிவன்.

## 29. கோழிகள் மாநாடு

உறையூர் என்னும் ஊரிலே முன்னாளிலே கோழிகள் மிகுதியாக இருந்தன. அவைகள் மிகவும் பலம்பொருந்தியவை. யானையைக்கூட வெற்றிகொள்ளும் ஆற்றல் அக் கோழிகளுக்கு அமைந்திருந்தன. கோழிகள் தம்முடைய காலையே

கூரிய கருவியாகக் கொண்டு, தம்மை யெதிர்க்கும் மற்றைய பறவைகளையும் விலங்குகளையும் மனிதர்களையும் கீறித் தொல்லை விளைத்து வெற்றிகொள்ளும் இயல்பு வாய்ந்தவை. அதனால் அவைகளுக்குக் காலாயுதம் என்னும் வேறு பெயரும் உண்டு.

இந்த காலத்திலே மக்கள் எதற்கெடுத்தாலும் மாநாடு கூட்டிச் சொற்பொழி வாற்றி முடிவுகள் செய்கிறார்களல்லவா? அதைப்போல அக்காலத்திலே உறையூர்க் கோழிகள் ஒரு மாநாடு கூட்டின. எதற்காக வென்றால், தம்மை மனிதர்கள், 'சாமிக்கென்று சொல்லியும், சொல்லாமலும் கழுத்தை யறுத்துக் கொலைபுரிந்து அவித்துத் தின்பதைக் கண்டித்தற் காகவேயாம்.

ஒரு பெருஞ் சேவல் மாநாட்டிற்குத் தலைமை தாங்கிச் சொற்பொழி வாற்றியது. அச் சேவல் தன்னுடைய தலைமை யுரையிலே, "பறையர்களைப் பறையர்களென்று பறையறைகின்ற மனிதர்கள் பறையர்களுடைய மலத்தைத் தின்ற பன்றியைத் தின்பது என்ன காரணம்? மிக இழிவுபொருந்திய அந்தக் கறியை கலத்தில் வைத்து மூடித் தின்னும் அந்த மனிதர்களல்லரோ பறையர்கள்? தீமையாகிய இழிவானது தீரும்படி நல்ல நன்மையானது அமைந்த தெய்வ நீரிலே மூழ்கி ஊர் ஊராக அலைகின்ற முழுமூடர்களுடைய அறிவை என்னவென்று சொல்வது? புலையர்களுடைய மலத்தை யெல்லாம் உண்ணும் நம்மையும் பிடித்து அறுத்துத் தின்னும் புலையர்களுக்கு நல்ல உயர்ந்த குல

மென்ன ? நன்மையென்ன ? ஒன்றுமே இடையாதன்றே ?' என்று பேசியது. அப்போது கோழிகளிடையே மிகுந்த மகிழ்ச்சி யுண்டாயிற்று. கோழிகள் எல்லாம் பெருங்குரல் எடுத்துக், 'கொக்கறு கோ' என்று கூவி ஆரவாரம் செய்தன.

பின்னர் மற்றொரு கோழி எழுந்து சொற்பொழிவாற்றத் தொடங்கியது. அக்கோழி, "மனிதனைவன் தான் உண்ணும் சோற்றின்கண்ணே ஒரு மயிர், ஓர் எறும்பு அல்லது வேறு எவற்றையேனுங் கண்டானாயின் மிக வெறுப்படைந்து சாப்பிடுவதை நிறுத்திவிடுவதுடன், முன் சாப்பிட்டதையும் கக்கிவிடுகிறான். அத்தகையவன் மலமுண்ணும் பன்றிகோழிகளைப் பழக்கத்தினால் உண்ண விரும்புவது அறிவின்மை அல்லவா? ஊறுகாய் முதலானவைகளில் தோன்றிய ஒரு புழுவைக் கண்டானாயின் உடனே உண்ணும் உணவைத் தூர வீசிவிடுகிறான். அத்தகையோன் நாற்றம்பொருந்திய ஊனையும் மீனையும். மிகவும் மனம் விரும்பிப் புசிப்பது எக்காரணத்தினால் ? இவற்றை யெல்லாம் பார்க்கும் பொழுது மனிதர்கட்கு அறிவிருப்பதாக நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். அந்த மனிதர்களைவிடப் புலால் தின்னாத ஆடுமாடு முதலிய விலங்குகளே உயர்ந்தவைகள். மனிதன் சிங்கம் புலி கரடி முதலியவைகளைக் கொடியன் என்கிறான். நமக்கு அந்த மனிதன் சிங்கம் புலி கரடி முதலியவைகளைப் போன்றவன் என்பதற்கு யாது தடையுள்ளது ?' என்று பேசிற்று. பலமான பேராரவாரத்தோடு கோழிகள் கூவி, இனி நாம் நம்மைக்

கொல்லவரும் மனிதனை எதிர்க்கவேண்டுமென்று முடிவுசெய்தனை.

பறையரைப் பறையர்என்று பறைந்திடு மனிதர் கேளீர்
பறையர்தம் மலத்தைத் தின்ற பன்றியைப் புசிப்பதென்னோ
கறையதே யாகுமந்தக் கறிதனைக் கலத்தில் இட்டு
மறையவே வைத்துத் தின்னும் மனிதரே பறையர் கண்டீர்.

(அ-ரை.) பறைந்திடு - பறையறைந்து சொல்லும். கறை-அழுக்கு.

புலையென்னும் புலைதீரப் புனல்என்னும் புனல்மூழ்கி
அலைகின்ற முழுமூடர் அறிவென்ன அறிவென்ன
புலையன்தன் மலம்உண்ணும் எமைஉண்ணும் புலையர்க்குக்
குலம்என்ன நலம்என்ன கூகூஎன் றனகோழி.

(அ-ரை.) புலை-இழிவு. புனல்-நீர்.

உண்டிடுஞ் சோற்றினூடே ஓர்மயிர் எறும்பியாதும்
கண்டுமுன் பருந்திலாய் முன்(பு)அயின்றதும் கான்றிட்டாயான்
மண்தனிற் பன்றியாதி மலத்தைமுன் பழக்கத்தாலுட்
கொண்டிட விரும்புமாறென் கூறுதி அறிவிலாதோய்

(அ-ரை.) முன்பு அருந்திலாய் - பிறகு உண்ணமாட்டாய். அயின்றதும் - உண்டதும். கான்றிட்டாய் - கக்கிவிட்டாய்.

## 30. இழிந்தோர்பாற் செல்லும் உயர்ந்தோர்

இரண்டுபேர் வழிப்பயணம் சென்றுகொண்டிருந்தனர். காட்டைக் கடந்து சென்றனர். பிறகு பாலை நிலம் ஒன்று எதிர்ப்பட்டது. பாலை நிலத்தில் மரஞ் செடி கொடிகள் வளரமாட்டா. எப்பொழுதும் அங்கு வெப்பமே மிகுதியாக இருக்கும். அந்நிலத்தில் பாற்கள்ளிதான் இங்கொன்று அங்கொன்று காணப்பெறும். பாலைநில மரங்களான இருப்பை முதலியவைகள் கூட நன்கு வளரா.

அத்தகைய நிலத்திலே வழிப்பயணஞ் செய்தோர் நண்பகலிற் சிக்கிக்கொண்டனர். வேறு நிழல் அகப்படாமையால் ஓரிடத்தில் கள்ளிச்செடியின் நிழலில் ஒதுங்கினர். அவ்வழியில் அவர்களைப் போல் அகப்பட்டுக்கொண்ட யானை ஒன்றும் ஒரு கள்ளிச்செடியின் நிழலில் ஒதுங்கியிருந்தது. கள்ளிச்செடியின் நிழல் அடர்த்தியாகவோ குளிர்ச்சியாகவோ தங்குவதற்கு ஏற்றதாகவோ இராது.

யானைகூடக் கள்ளிச்செடி நிழலில் தங்கியிருப்பதைக் கண்ட நண்பர்களில் ஒருவர் மற்றவரைப் பார்த்து, 'யானைகூட இந்தச் சிறிய கள்ளிநிழலில் தங்கியிருக்கிறதே; நம்முடைய சிறிய உடலுக்கே போதாத கள்ளிச்செடியின் நிழல் பெருத்த உடலினையுடைய யானைக்கு எவ்வாறு போதும்?' என்றார். அதற்கு மற்றவர், 'என் செய்வது? உலக நிலைமை அவ்வாறுள்ளது. உயர்ந்த குடியிற் பிறந்தவர்கள் கூட வறுமையின் கொடுமையால் இழி

குணமுடைய தாழ்ந்த செல்வரிடம் சென்று இரந்து நிற்கவேண்டியதாகிறது. அதைப்போன்றே இவ்விடத்திலும் உயர்ந்த யானை தாழ்ந்த கள்ளிச் செடியினிடத்தில் வந்து நிற்கவேண்டியதாயிற்று' என்றார்.

ஒள்ளி தாகிய தலைமையிற் பிறந்துளோர் உலகம்
எள்ளும் நல்குர(வு) எய்தலால் இழிந்தவர் கண்ணும்
கொள்ளு மாறொரு பயன்குறித் தேகல்போற் கொடிய
கள்ளி தன்புடை நீழலுக்(கு) ஒதுங்குவ கரிகள்.

(அ-ரை.) ஒள்ளிதாகிய - விளக்கம் பொருந்திய தாகிய. தலைமையில் - தலைமைபொருந்திய, குடியில் எள்ளும் - இகழும். நல்குரவு - வறுமை. புடை-பக்கம். கரிகள் - யானைகள்.

---

## 31. துன்பமும் இன்பமுந் தொடர்ந்து வரும்

ஒருவருக்கு இன்பம் மட்டுமோ அல்லது துன்பம் மட்டுமோ தொடர்ந்து வந்துகொண்டிருக்காது. இரண்டும் கலந்துதான் வந்துகொண்டிருக்கும். ஒரேபடியாக இன்பத்தையோ அல்லது துன்பத்தையோ நுகருபவர்களை நாம் இவ்வுலகில் பார்ப்பது மிகவும் அருமை.

சூரபதுமனுக்கும் முருகக் கடவுளுக்கும் போர் மூண்டது. தேவர் படையும் அசுரர் படையும் இரு பக்கங்களினும் அளவிடப்படாத அளவு போருக்குத் தகுதியாக நின்றன. அப்பொழுது தேவர் படையில் தலைவராக நின்ற வீரவாகு தேவர் தம்முடைய தோளைக் கொட்டிப் பேராரவாரஞ் செய்

தார். அவ் வாரவாரத்தைக் கேட்ட தேவர்கள் அளவுகடந்த மகிழ்ச்சியை அடைந்தார்கள். நம்முடைய துன்பங்களெல்லாம் இன்ரோடு தொலைந்தனவென்று இன்பக் கூத்தாடிக்கொண்டிருந்தார்கள். அப்போது சூரபதுமனுடைய மகன் யானுகோபன் போருக்கு வந்துசேர்ந்தான். தன்னுடைய வில்லை வளைத்து நாணையேற்றினன். அவன் சிலையொலியைக் கேட்ட தேவர்படை அஞ்சி நடுங்கித் தியங்கியது. தேவர்களுடைய இன்பக் கூத்துப் போனவிடந் தெரியவில்லை. இக்கொடியோன் நம்மை யாது செய்வானே என்று கலங்கினர்கள். அனைவரும் அறுமுகப்பெருமானே அடைக்கலமென்று கதறவுந் தொடங்கினர்கள். சிறிது நேரத்திற்குள் இன்பமும் துன்பமும் ஓரிடத்திலேயே நிகழ்ந்ததைக் கண்ட அவர்கள் உலக இயற்கை இதுதான் என்று தெளிந்தார்கள். பின்னர்ப் போரிலே அசுரர் படையாவும் தோற்றுத் தேவர்படை வெற்றியடைந்தது. தேவர்களும் அசுரர் தொல்லை நீங்கினர்கள்.

> முன்பு திண்திறல் வாகுவின் வாகுவின் முழக்கத்தை
> அன்பில் நாடிய அமரர்கள் அளவைதீர் மகிழ்(வு) எய்திப்
> பின்புசூர்மகன் சிலையொலி கேட்டலும் பேதுற்றே
> இன்ப துன்பங்கள் ஒருவழிக் கண்டனம் இவண் என்றார்.

(அ - ரை.) திண்திறல் - மிகவலிமை பொருந்திய. வாகு - வீரவாகு. வாகு - தோள். நாடிய - விரும்பிய. அளவை தீர் - அளவற்ற. பேதுற்று - நிலைகலங்கி. இவண் - இவ்விடம்.

## 32. புகழ்தலில் வைதல் நன்று

சிறந்த செந்தமிழ்ப் புலவர் ஒருவர், ஒரு செல்வனிடஞ் சென்று பரிசுபெற எண்ணினர். அச் செல்வன் அதுவரையிற் செய்துள்ள நற்காரியங்கள் யாவை? அவனை எவ்வாறு புகழலாம் என்று ஆராய்ந்து அவனைப்பற்றித் தெரிந்தவர்களிடம் கேட்டார். அவன் யாதும் நல்லறங்கள் புரிந்தவன் அல்லன் என்றும், நற்பண்பு போதிய அளவு அற்றவன் என்றும், இரப்போர்க் களித்தலை அவன் கனவிற்கூடச் செய்தறியான் என்றும் பலரும் பகர்ந்தனர்.

புலவர்க்கு வீண் புகழ்ச்சியும் பொய்ப் புகழ்ச்சியும் அடியோடு பிடிக்காது. 'அச் செல்வனைப் புகழ்ந்து பாடுதலைவிட இகழ்ந்து பாடுதல்தான் தக்கது; அவ்வாறே செய்வோம். அவன் பரிசு கொடுத்தால் கொடுக்கிறன்; கொடுக்கா விட்டால் போகிறன்' என்று முடிவு செய்துகொண்டார். 'அவன் அறிவின்மையையும், அறஞ் செய்யா திருத்தலின் தீமையையும், அதனல் அவன் அடையப் போகிற கொடிய நிலைமையினையும் செய்யுளாகப் பாடிக்கொண்டு அச் செல்வனிடஞ் சென்றர். அவனைக் கண்டு தம்முடைய பாட்டைப் படித்துக காட்டினர். செல்வனுக்குச் சீற்றம் பீறிக்கொண்டு வந்தது. அவன் புலவரைப் பார்த்து, 'ஓய் புலவரே! செல்வர்களிடம் பரிசுக்குச் செல்லும் புலவர்கள் அச் செல்வர்களின் புகழைப் பாடிக்கொண்டு செல்வதுதான் வழக்கம். நீவிரோ எம்மை இகழ்ந்து

பாடிக்கொண்டு வந்திருக்கிறீரே; என்ன காரணம்?" என்று கேட்டான்.

அதற்குப் புலவர், 'ஓ செல்வனே! நன்கு தெளியப்பெறாத தீயவர் நட்பைப் பார்க்கினும் பகை நல்லது. மிகவருத்தும் நோயை நுகர்தலைப் பார்க்கினும் இறந்துபோதல் நல்லது. ஒருவரை இல்லாதவற்றைக்கூறி இகழ்தலைப் பார்க்கினும் கொன்றுவிடுதல் நல்லது. ஒருவரை இல்லாதவற்றைச் சொல்லிப் புகழ்தலைப் பார்க்கினும் வைதலே நல்லது ஆதலின் யான் உன்னைப் பொய்ப் புகழ்ச்சி செய்யாமல் உன்னிடம் உள்ள தீக் குணங்களைமட்டும் கூறி இகழ்ந்திருக்கிறேன்' என்றார்.

தெளிவிலார் நட்பில் பகைநன்று சாதல்
விளிய வருநோயி னன்றால்—அளிய
இகழ்தலின் கோறல் இனிதேமற் றில்ல
புகழ்தலின் வைதலே நன்று.

(அ - ரை.) விளிய - வருந்த. அளிய - மிகவும். கோறல் - கொல்லுதல்.

---

## 33. ஆயத்தைப் போன்ற அணிநீர்ப் பொய்கை

இரு நண்பர்கள் ஒரு தடாகக் கரையில் நின்று இன்னுரையாடிக்கொண் டிருந்தார்கள். ஒருவன் மற்றவனைப் பார்த்துப், 'புலவர்கள் உலகிலுள்ள ஒவ்வொரு பொருளுக்கும் உவமைகூறியிருக்கின்றார்களே; தடாகத்திற்கு எதனையாவது உவமை கூறியிருக்கிறார்களா?' என்று கேட்டான். அதற்கு

மற்றவன், 'ஏன் கூறவில்லை? மாதர் கூட்டத்திற்குப் பொய்கையை உவமை கூறியிருக்கிறார்கள்' என்றான்.

அதற்கு மற்றவன், 'ஒரு தடாகத்திற்குப் பல மாதர்களை எவ்வாறு உவமை கூறமுடியும்? அது பொருந்தாக் கூற்றாக முடியுமே,' என்றான். பொருந்தும்படியாகவே உவமை கூறியிருக்கிறார்கள். அஃதெவ்வாறு என்பாயானால், தடாகத்தில் மலர்ந்துள்ள தாமரை மலர்கள் பெண்களின் முகத்தைப் போன்றவை. அங்கு படர்ந்துள்ள பாசிகள் கூந்தலைப் போன்றவை. செவ்வல்லிகள் உதட்டைப் போன்றவை. மலர்களிற் பொருந்தியுள்ள அன்னப் பறவை முதலியவற்றின் ஒலிகள் மாதர் பேச்சைப் போன்றவை. தடாகத்திற் பொருந்தியுள்ள சங்குக் கூட்டங்கள் மங்கையர் கழுத்தைப் போன்றவை. திரைகள் ஆடைகளைப் போன்றவை. இவைகள் தடாகத்தில் பலவாக விருப்பதால் தடாகமானது பல மாதர்கள் ஒன்று சேர்ந்திருப்பதைப் போன்றது.' இவ்வாறு கூறியுள்ள ஒப்புப் பொருந்தாமல் எவ்வாறு போக முடியும்? தாமரை மலர் பெண்கள் முகத்திற்கு மட்டுமன்றிக் கை, கால், கண், வாய் முதலிய எல்லாவற்றிற்குமே உவமை கூறப்பட்டிருக்கிறதே' என்றான்.

நண்பன் கூற்றைக் கேட்ட மற்றவன் ஒரு தடாகம் பல மாதர்கள்கூடிய கூட்டத்திற்கு நிகரானதுதான் என்று ஒப்புக்கொண்டான்.

பங்கயம் வதனம் என்பார் பாசியைக் கூந்தல் என்பார்
செங்கிடை அதரம் என்பார் புள்ளொலி செப்பல் என்பார்
சங்கினைக் களமே என்பார் தடாகமும் ஒருததி அல்ல
மங்கையர் பலரே என்பார் திரைகளை மணித்தூ(சு) என்பார்.

(அ - ரை.) பங்கயம் - தாமரை. வதனம் - முகம். செங்கிடை - செவ்வல்லி. புள்ளொலி - பறவை ஒலி. களம் - கழுத்து. மணித் தூசு - அழகிய ஆடை.

---

## 34. விலைமகளே குரு

ஒரு தலைமகன், தன்னுடைய மனைவி, மைந்தர் முதலிய உற்றார் உறவினர்களை யெல்லாம் வெறுத்துத், தன்னுடைய பலவகைப் பொருள்களையும் ஒரு வேசையிடம் கொடுத்துத் தன்னுடைய நினைப்புச் செய்கை முதலிய எல்லாவற்றையும் அவ்வேசை யிடமே அமைத்து, அவளுடைய சிற்றின்பக் கட லிலே திளைத்துநின்றான்.

ஓர் அறிஞர் அவ் விலைமகள் காதலனைப் பார்த்து, 'நீ இவ்வாறு செய்துகொண் டிருத்தல் தக்கதாமா?' என்று கேட்டார். அதற்கு அக் காமுகன், 'எனக்கு அவ் விலைமகளே குருமூர்த்தி (ஆசிரிய வடிவம்). அறிவாசிரியரானவர் தம்மை யடுத்துப் பணிந்திறைஞ்சும் அடியார்களை மனைவி மக்களில் நின்றும் பிரியச்செய்து அவர்களுடைய பொருட் பற்றையும் அடியோடு அகற்றி, அந்த அடியார்கட்கு ஒப்பற்றபேரின்பமாகியவீடுபேற்றை யளித்தருளல்போல, என்னுடைய குருவாகிய விலை

மகளும், நான் வீடு, வாசல், மனைவி, மைந்தர் முதலியவற்றின்மேற் கொண்டுள்ள பற்றை ஒழிக்கச் செய்து, பொருளையும் தான் கவர்ந்துகொண்டு, ஒப்பற்ற தன்னுடைய இன்பத்தை யெனக்குக் கொடுத்து என்னை மகிழச்செய்கிறாள். ஆகையால் அந்த விலைமகளே எனக்குக் குரு. அவளே எல்லாமும். அவள் அளிக்கும் இன்பமே இன்பம் என்றான்.

காமுகன் பேச்சைக் கேட்ட அறிஞர் நகைத்தார். அவன் கூறியது ஒருவாற்றால் பொருந்தித்தான் இருக்கிறது என்று உணர்ந்தார். அவனுக்கு அறவுரைகள் பலகூறி அகன்றார்.

மனைவியை வெறுத்து மைந்தர் வளநிலம் அனைத்தும் நல்கி,
நினைவொடு வாக்குங் காய நித்தலும் தம்பால் ஆக்கத்,
தனைநிகர் இல்லா இன்பம் தருதலால் கணிகை மாதர்
வினைநிகர் புதல்வர்த் தாழ்த்தி வீடருள் குரவர் போன்றார்.

(அ - ரை.) காயம் - உடல். நித்தலும் - நாடோறும். வினைநிகர் - தீவினையை ஒத்த.

## 35. கற்புடைக் காரிகை

ஓர் அரசனுடைய மகளுக்குத் திருமணம் நடைபெற்றது. திருமணத்தின் இறுதியில் அம்மி மிதித்து அருந்ததி காட்டுவது வழக்கம். அவ்வாறு ஏன் செய்வதெனின், அகலிகையைப் போல நான் கற்பற்றவளாகி இழிவடைய மாட்டேன் என்பதற்காகவும், அருந்ததியைப் போலக் கற்பிற் சிறந்தவளாகி உயர்வடைவே னென்பதற்காகவே யாம். அரசன் மகள் திருமணத்திலே திருமணக்காரியங்கள் இனிது நடைபெற்று முடிந்தன. அம்மி மிதித்து அருந்ததி காட்டும் வேளை வந்தது. அப்போது அரசனுடைய மகள் அம்மியை மிதித்தாள். ஆனால் அருந்ததியைப் பார்க்கமுடியா தென்று மறுத்துவிட்டாள்.

மணமகளுடைய செய்கை திருமண வேள்வியாசிரியருக்கும் அரசன் முதலிய பிறருக்கும் விளங்கவில்லை. அப்போது வேள்வியாசிரியர் அரசன் மகளைப் பார்த்து, 'ஏன் அருந்ததியைப் பார்க்கமாட்டேன் என்கிறாய்?' என்று கேட்டார். அதற்கு மணமகள், 'உலகில் கற்புடைப் பெண்களானோர் மற்றவர்கள் பார்த்து அவாவுறும்படி வெளியிலே திரியமாட்டார்கள். அவர்கள் வீட்டை விட்டு வாசல்படியைக்கூடத் தாண்டமாட்டார்கள். அருந்ததியோ உலகத்தார் எல்லோரும் பார்க்கும்படி நாணமற்றவளாக வான வெளியில் திரிகின்றாள். நான் அவளைப்போல நாண மற்றவளாகவும், இழிவுடையவளாகவும் இருக்க மாட்டேன். அருந்ததிக்குக் கற்பென்றால் இன்னதென்றே

தெரியாது. இனிமேல்தான் அவளுக்குக் கற்பிலக்கணம் போதிக்க வேண்டும்' என்றாள். மணமகள் கூற்றைக் கேட்டோர் வியப்படைந்தனர்.

வானநெறி எங்கும் வளர்சோதி வடமீனைக்
கானமயில் அன்னவள் தன்முன்னை நனிகாட்ட
யானும் இவள்போல் உலகுகாண இயல்வேனோ
ஈனமொடு நாணமில ளேயென இகழ்ந்தாள்.

(அ - ரை.) வானநெறி - விண்வழி. சோதி - ஒளி. வடமீன் - வட திக்கிலுள்ள அருந்ததி. கானமயில் - அழகிய மயில். நனி - நன்றாக. இயல்வேனோ - நடமாடுவேனோ? ஈனம் - இழிவு.

---

## 36. இடங்கொடுத்தால் மடம் பிடுங்குவான்

ஒரு பெருநிலக் கிழவர் (சமீன்தார்) வறுமையால் வாடிய புலவர் ஒருவருக்கு, அடிக்கடி உதவி செய்துகொண்டிருந்தார். வேண்டிய பொழுதெல்லாம் தம்மிடம் வந்து உதவிபெற்றுச் செல்லலாமென்றுங் கூறியிருந்தார். புலவர் தம்மாலியன்ற சிறு உதவிகள் பல பெருநிலக் கிழவருக்குச் செய்திருந்தார். அதனால் பெருநிலக் கிழவரிடம் புலவர் அதிக உரிமைபாராட்டிக்கொண்டிருந்தார்.

ஒருமுறை புலவர் வேறு பல புலவர்களையும் தம்முடன் அழைத்துக்கொண்டு பெருநிலக் கிழவரிடஞ் சென்று, 'எல்லோருக்குந் தகுந்தபடி பரிசளிக்க வேண்டுமென்றும் அவர்களெல்லாருந் தம்முடைய நண்பர்களென்றுங் கூறினர். பெருநிலக் கிழவ

ருக்கு அப்போது எல்லோருக்கும் பரிசளிக்க முடியாத நிலைமை யேற்பட்டிருந்தது. 'அவர் இன்னொரு முறை வாருங்கள்; அப்போது பார்ப் போம்; இப்போது நிலைமை தகுதியாக வில்லை. எனக்குப் பலவகைச் செலவுகளும் தொல்லையும் ஏற்பட்டுள்ளன' என்றார்.

புலவர், பெருநிலக் கிழவர் கூறியதைக் கேளா மல் இன்றைக்கு ஏதேனும் அளித்துத்தான் ஆக வேண்டும் என்று வற்புறுத்திக் கூறியதுடன் தாம் அவருக்குச் செய்துள்ள சில உதவிகளையும் எடுத் துக் கூறினார். தாம் அவருடன் மிகுதியாகப் பழகி யுள்ள உரிமைபற்றித் தாக்கியும் பேசினார். அப் போது பெருநிலக்கிழவருடைய நண்பரும் புலவரும் ஆகிய அறிஞரும் அங்கிருந்தார். அவர் புலவரைப் பார்த்து, 'ஓய் புலவரே! நீர் செய்வது நன்றாக இல்லை. விரலை விடுவதற்கு மட்டும் இடம்கொடுத் தால், அந்த இடத்திலே நீர் உரலையுங் கூடக் கொண்டுவந்து விடப் பார்க்கிறீரே; நன்றாக இருக் கிறதா? பெருமை தங்கிய செல்வர்கள் ஒரு முறை மனங் கோணினால் பிறகு திரும்புவார்களா? நீர் முத்துச்சாமிப் பிரபுவினுடைய தன்மை தெரியாமல் பேசுகிறீர்; நீர் இவ்வாறு பித்துக்கொள்ளித் தன மாகப் பேசுதல் கூடாது. ஆயிரம் உதவிகளை நீர் செய்திருந்தபோதினும், உமக்குத் துரையவர்கள் அடங்கி நடப்பார்கள்; சொன்னதைக் கேட்பார் கள் என்று சிறிதும் எண்ணவே வேண்டாம்' என்று கண்டித்துக் கூறினார். புலவர் தம் நண்பர்க ளுடன் திரும்பிவிட்டார்.

விரலைவிட இடங்கொடுத்தால் உரலையுங்
கூடக்கொண்டு விடுகின்றுயே
முரணரசர் மனங்கோணி ஞல்திரும்பா
தன்றேவிம் முத்துச் சாமி,
பிரபுகுணம் அறியாய்நீ பைத்தியக்கா
ரத்தனமாய்ப் பேசா தேயா,
யிரமிருந்த போதினும்தான் உனக்கடங்கி
அவன் நடப்பான் என்றெண்ணதே.

(அ-ரை.) முரண் அரசர்-வலிமை பொருந்திய அரசர்.

## 37. அப்பாச்சாமியின் அறியாமை

மதுரை நகரிலே அப்பாச்சாமி என்று பெயருடைய ஒரு பார்ப்பான் இருந்தான். அவன் சில நூல்களைப் படித்தான். ஆனல் அதனல் யாருக்கும் எத்தகைய பயனும் இல்லை. ஏனெனின் அவனுடைய படிப்பு மிகவும் அற்பமானது. அப்பாச்சாமி சிவந்த நிறமும் நீண்டு வளர்ந்த உயரமும் உடையவன். அவனை அழகன் என்றுஞ் சொல்ல முடியாது; அழகில்லாதவ னென்றுஞ் சொல்ல முடியாது. ஆயினும் அப்பாச்சாமி தன்னைத்தான் மதுரை மன்மதன் என்று எண்ணிக்கொண்டிருந்தான்.

ஒருநாள் அப்பாச்சாமிக்கு ஓர் எண்ணம் உண்டாயிற்று. அஃதாவது, 'நாம் உயர்குலமாகிய பார்ப்பன குலத்தில் தோன்றியுள்ளோம். அதுவேயுமன்றி நல்ல அழகுடனும் கல்வியறிவுடனும்

விளங்குகிறோம். இப்படியிருந்தும் நம்மை நன்கு மதித்துப் போற்றுவோரையே காணோமே; இதற்குக் காரணம் என்னை? நம்மை எவரும் நன்குணராததுதான் காரணமாகும்' என்று தன்னுடைய அறிவின்மையினாலே முடிவுகட்டிக்கொண்டான். நம்முடைய செய்தியை நன்கு விளக்கியுரைத்தால் தான் ஊரார்கள் போற்றுவார்கள். இன்றேல் நம்மை எவரும் கண்ணெடுத்துப் பார்க்கப் போகிறதும் இல்லை என்று அவன் தன்னையே புகழத் தொடங்கினான்.

கண்டவர்களிடமெல்லாம், 'நான் உயர்ந்த பார்ப்பன குலத்திற் றோன்றியவனென்றும், கல்வி கற்றவனென்றும், நல்ல அழகன் என்றும் கூறிக் கொண்டு திரியலானான். அப்பாச்சாமி தன்னையே புகழ்ந்துகொண்டு திரிவதைக் கண்ட பலரும் அந்தோ! பெருமையும் புகழும் தானே வரவேண்டுமென்பது இவ்வறிவிலிக்குத் தெரியாது போயிற்றே' என்று வருந்தினார்கள். சிலர் அப்பாச்சாமியைக் கண்ட விடங்களில், உயர்பெருந் திருவாளர் அப்பாச்சாமி ஐயர் அவர்களே! நலந்தானா? தங்களுடைய அறிவு, அழகு, குலம் முதலியவற்றின் பெருமையை நாங்கள் இதுவரையில் அறியாமற் போனோம். இப்பொழுது தாங்களே சொல்லியதனால்தான் தெரிந்துகொண்டோம். எங்களுடைய அறியாமைக் குற்றத்தைப் பொறுத்து எம்மை மன்னித்தருள வேண்டும் என்று கேலியாகக் கூறி கையாண்டி செய்யலானார்கள். அவர்கள் கையாண்டி செய்கிறார்கள் என்பதை யுணராத

அப்பாச்சாமி, நம்முடைய சூழ்ச்சி பலித்தது. நம்முடைய பெருமையை இப்பொழுதுதான் உணரத் தொடங்கியிருக்கிறார்கள் என்று களிப்படைந்தான்.

கற்றனவும் கண்ணகன்ற சாயலும் இற்பிறப்பும்
பக்கத்தார் பாராட்டப் பாடெய்தும் — தானுரைப்பின்
மைத்துனர் பல்கி மருந்தில் தணியாத
பித்தனென் றெள்ளப் படும்.

(அ-றை,) கண்ணகன்ற சாயல் - பேரழகு. பாடு-பெருமை. பல்கி-மிகுந்து. மைத்துனர் - நையாண்டி செய்வோர்.

---

## 38. தாழ்ந்தோர் உயர்வர்

ஒரு பெரியார் எப்போது பார்த்தாலும் 'தாழ்ந்தோர் உயர்வர்; உயர்ந்தோர் தாழ்வர்' என்றே கூறிக்கொண்டு திரிந்தார். சிலர் அப் பெரியாரைப் பார்த்து, 'அஃதெப்படி? அதனை விளக்கமாகச் சொல்லுங்கள்' என்று கேட்டனர். அதற்கு அப் பெரியார், 'தாழ்ந்துபோகும் பணிவுடைமைதான் எல்லோருக்குஞ் சிறந்தது. திருவள்ளுவப் பெரியாரும் தம்முடைய திருக்குறளிலே, "எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும், செல்வர்க்கே செல்வந் தகைத்து" என்று திருவாய் மலர்ந்தருளி யிருக்கின்றார். பணிந்து போகின்றவனுடைய பெருமை உயர்ந்துபோகின்றது எவ்வாறென்பீர்களாயின், அவன் பணிவுடைமையைக் கண்டு எல்லோரும் போற்றுவார்கள். ஓர் எடுத்துக் காட்டுக் கூறுகிறேன் கேளுங்கள்.

'ஒரு பெரிய நகரத்தைச் சூழ்ந்து அகழியும் மதிலும் அமைந்திருந்தது. அகழி மிகவும் ஆழமானது. எவ்வளவு ஆழமுடையது என்றால், கீழ் உலகம் வரை ஆழ்ந்து நிலவுலகத்தைத் தாங்கிக் கொண்டிருக்கும் ஆதிசேடனுடைய மணிமுடிவரையிற் சென்று நின்றது. அவ்வகழி அவ்வளவு தாழ்வாகப் போனபடியால் ஆதிசேடன் மணி முடிமேல் அமரும் பெருமையைப் பெற்றது.

அகழியை ஒட்டி விளங்கிய மதிலோ மிக வுயர்ந்து வானளாவிச்சென்று, ஞாயிறேனுகிய கதிரவனுடைய காலுக்குக் கீழே சென்று நின்றது. ஒருவனுடைய தலைமேல் இருப்பவன் உயர்ந்தவனென்பதும் கால்கீழ் இருப்பவன் தாழ்ந்தவன் என்பதும் நாமனைவரும் நன்குணர்ந்தது தானே. தாழ்கின்றவர்கள் எவ்வாறுயர்வார்கள்; உயர்கின்றவர்கள் எவ்வாறு தாழ்வார்கள் என்பதை இதிலிருந்து உணர்ந்துகொள்ளுங்கள்' என்றார்.

தாழ்ந்தோர் உயர்வர் என்றும் மிகஉயர்ந்
தோர் தாழ்வர் என்றும் அறம்
சூழ்ந்தோர் உரைக்கும் உரைகண்டாம்
மதில்சூழ் கிடந்த தொல் அகழி,
தாழ்ந்தோர் அனந்தன் மணிமுடிமேல்
நின்றன்று உயர்ந்து தடவரையைச்,
சூழ்ந்தோர் வரையின் உதிப்பவன்தாள்
கீழ்நின் றதுபோய்ச் சூழெயிலே.

**(அ-ரை.)** தொல் - பழைய. அனந்தன் - ஆதிசேடன், தடவரை-பெருமலை. சூழ் எயில்-சுற்றியுள்ள மதில்.

# 39. இனியமொழி

வேப்பூர் என்னும் ஊரிலே சுப்பன் என்று பெயருடைய ஒருவன் இருந்தான். அவன் சிறிது கல்வி கற்றிருந்தானாயினும் அக் கல்வியைத் தீயவழியிலே பயன்படுத்தி எல்லோராலும் தீயவன் என்று இகழப்பெற்று இருந்தான். அவன் பேசும் மொழிகளை நன்மக்கள் காதுகொடுத்துக் கேட்க முடியாது. நாளடைவில் ஊரார்கள் அவனை நன்கு உதைத்து ஊரைவிட்டுத் துரத்திவிட்டார்கள்.

ஊரைவிட்டுத் துரத்தப்பெற்ற சுப்பன் திருவண்ணாமலை என்னும் ஊருக்குச் சென்றான். அங்குப் பல துறவிகள் தூயவாழ்க்கை நடத்திக்கொண்டு சிறப்புடன் விளங்குவதைக் கண்டான். தானும் துறவியாகிவிடுதலே மேன்மையடைவதற்குச் சிறந்த வழி என்று முடிவுசெய்தான். ஒரு பெரியவரிடஞ் சென்று தனக்கு அறிவு நூல்களைப் போதிக்கவேண்டுமென்று வேண்டிக்கொண்டான். அப் பெரியார் உண்மையாகவே பெரியவர் தாம். பெரியோர் சிறியோர் என்னும் வேறுபாட்டை அவர் சிறிதும் பார்க்கமாட்டார். சுப்பனையும் தம்முடைய திருமடத்திலே சேர்த்துக் கொண்டு தம்முடைய மாணவர்களோடு அறிவு நூற் பயிற்சி யளித்துவந்தார். சுப்பனும் பல நூல்களைத் திறமையாகக் கற்றுத் தேர்ந்தான். ஆனாலும் பழைய பழக்க வாசனை அவனை முற்றிலும் விடவில்லை. மடத்தில் உள்ளவர்களோடும் மடத்

திற்கு வருகிறவர்களோடும் சுடுமொழியும் தீய மொழியுமே பேசிக்கொண்டிருந்தான்.

சுப்பனுடைய அறிவாசிரியராகிய பெரியார், 'எல்லோரிடத்திலும் இனியமொழி பேசவேண்டு மென்றும், தீயமொழிகள் பேசுதல் கூடாது என்றும், பேசுவதற்கு இனிய மொழிகள் இருக்கும் போது அதனைப் பேசாது, வன்சொற் பேசுதல், இனிய கனி இருக்கும்போது அதனைத் தின்னது காயைத் தின்னுதலோடு ஒக்கும்' என்றும் அறிவுரைகள் போதித்தார். உடனே சுப்பன் விரைவாக மடத்திற்குள் ஓடி, ஒரு கற்கண்டுக் கட்டியை எடுத்து வாயில் போட்டுக்கொண்டு, தன்னுடைய ஆசிரியரிடத்திற்கு வந்து, 'நான் இனிமேல் எப்போதும் இனிய மொழிகளே பேசுகிறேன். பேசத் தொடங்குவதற்கு முன் ஒவ்வொரு கற்கண்டுக் கட்டி கொடுக்குமாறு ஏற்பாடு செய்யுங்கள். இல்லாவிட்டால் என்னல் இனியமொழி பேசவே முடியாது' என்ருன். ஆசிரியரும் அவருடன் இருந்த மற்றவர்களும் விழுந்து விழுந்து நகைத்தார்கள்.

ஒருவர், அப்பெரியாரைப் பார்த்து, 'ஏன் அவர் இவ்வாறு சொல்கிருர். அதற்குக் காரணம் என்ன ?' என்று கேட்டார். அதற்கு அப்பெரியார், மிகுதியான அறிவுநூல்களைப் படித்தாலும் அடங்காதவர்கள் எந்தக் காலத்திலுமே அடங்க மாட்டார்கள். மிகுந்த கசப்புப் பொருந்திய பேய்ச் சுரைக்காயை, உப்பு, நெய், பால், தயிர், காயம் முதலிய நறும்பொருள்களைப் போட்டுச் சமைத்தா

லும் அப்பேய்ச் சுரைக்காயின் கசப்பு மாறுமா? சிறிதும் மாறாதன்றோ? அந்தப் பேய்ச்சுரைக்காயைப் போன்றவன் இந்தச் சுப்பன். அவன் அறிவு நூல்களைப் படித்தும் அவனுடைய பழைய பழக்க வாசனை விடவில்லை. அதுதான் காரணம். இத்தகைய மக்கள் உலகத்தில் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். இதில் ஒன்றும் வியப்பில்லை' என்றார்.

இடம்பட மெய்ஞ்ஞானம் கற்பினும் என்றும்
அடங்காதார் என்றும் அடங்கார் — தடங்கண்ணாய்
உப்பொடு நெய்பால் தயிர்காயம் பெய்தடினும்
கைப்பறா பேய்ச்சுரையின் காய்.

(அ-ரை.) இடம்பட - மிகுதியாக. தடங் கண்ணாய் - பெரிய கண்களையுடையவளே. அடினும் - சமைத்தாலும். கைப்பு-கசப்பு. அறா-நீங்கமாட்டா.

---

## 40. பாவலர்க்குச் சோறளித்த பரமன்

புலவர் ஒருவர் பல திருப்பதிகளிலும் எழுந்தருளியுள்ள கடவுளை வணங்கிக்கொண்டு ஊர் ஊராகச் சுற்றிக்கொண்டிருந்தார். ஆங்காங்குள்ள செல்வர்களைப் பாடி அவர்கள் தரும் பொருளைக் கொண்டு வாழ்க்கையை நடத்துவதே அவருடைய தொழில்.

அந்தப் புலவருடைய பெயர் முத்துக்குட்டிப் புலவர் என்பது. அவர் ஒரு நாள் இரவில் ஓர் ஊரில் கடவுளைப் போற்றி வழிபட்டுவிட்டுக்

கோயிலைவிட்டு வெளியேவந்தார். இராச்சாப்பாட்டிற்கு எங்குச் செல்லலாம்? என்ன செய்யலாம்? என்பதே அவருடைய எண்ணம்.

அறம்புரியும் அன்பர்களிடம் செல்லலாம் என்றாலோ வேளை கடந்துவிட்டது. இரவு பத்துநாழிகைக்கு மேல் இருக்கலாம். படுக்கைக்கும் இடம் தெரியவில்லை. தேர்முட்டி அருகில் இருந்தது. அதிலேயாவது ஏறித் தங்கி இராப்போதைப் போக்கலாம் என்று முடிவுசெய்தார். தேர்முட்டியின்மேல் ஏறி ஓர் இடத்தில் பசிப்போராட்டத்துடன் அமர்ந்தார்.

தம்முடைய அன்பர்கள் பசியால் வாடி வருந்துவதை அருட்கடலாகிய கடவுள் பார்த்துக்கொண்டிருப்பரா? புலவர் அவ்வாறு பசியால் வாடி வருவார் என்பதை யுணர்ந்த கடவுள் தமக்குப் படைக்கப்பட்ட பட்டைச்சோற்றில் இனிமையானவற்றை ஒருவர் பசியாறப் போதிய அளவு மடக்கி மறைத்துவிட்டார்.

புலவர் பசியோடு தேர்முட்டியில் ஏறி யமர்ந்ததும் தாம் கோயில் பட்டருக்குத் தெரியாமல் களவாடிய பட்டைச்சோற்றைத் தம் கடவுட்டன்மையால் புலவர்க்கெதிரே வைத்தார். பசி வேளையில் புலவர் கண்டார் அவ்வுணவினை. ஒரே நெட்டாக நெட்டினர். பத்தையும் பறக்கச் செய்யும் பசி தானே பறந்தோடிவிட்டது. இது கடவுள் செயலே என்று புலவர் தெளிந்தார்.

'ஊரில் உள்ளவர்கள் உண்டுவிட்டு உறங்கி ஒரு சாமப்பொழுது ஆயிற்று. இந்த ஊரிலே தண்ணீரும் சோற்றுப்பருக்கையும் இந்நேரத்திலே யார் கொடுக்கப்போகிறார்கள் என்று வருந்திக் கொண்டிருந்தேன். முத்து முல்லையரும்பு போன்ற பற்களையுடைய திருமகளைத் திருமார்பில் வைத்தரு ளிய சவுமிய மூர்த்தியே உன்னுடைய தேரே இனிய கட்டிச்சோற்றினையும் கடற்கரைச் சீனியையும் கொடுத்தது என்று கூறி மகிழ்ச்சி யடைந்தார்.

ஊருண் டுறங்கி யொருசாம மாயிற்றிவ் வூர்தனிலே
நீரும் பருக்கையு மார்தரு வாரிந்த நேரமென்றேன்
மூரன் மலர்மங்கை மார்பா சவுமிய மூர்த்தியுன்றன்
தேருந் தருங்கட்டிச் சோறுங் கடற்கரைச் சீனியுமே.

(அ - ரை.) மூரல் - வெள்ளிய முல்லையரும்பு போன்ற பல்.

---

## 41. மாடு தின்பான் பார்ப்பான்

ஒரு தமிழ் மாணவன் ஒருநாள், 'மாடு தின்பான் பார்ப்பான் மறையோதுவான் குயவன், கூடிமிக மண்பிசைவான் கொல்லனே—தேடி, இரும்படிப்பான் செக்கான், எண்ணெய் விற்பான் வண்ணான், பரும் புடவை தப்பும் பறை' என்று படித்துக்கொண் டிருந்தான்.' அப்போது அவ் வழியே சிலர் சென்றுகொண் டிருந்தனர். அவர்கள் காதுகளில் "மாணவன் படித்தது விழுந்தது. அவர்கள் மிகுந்த வியப்படைந்தார்கள்.

அவர்களில் ஒருவர் அம்மாணவனைப் பார்த்துத், 'தம்பி! நீ இப்போது படித்தாயே; அதை

இன்னுமொருமுறை படி' என்றார். மாணவன் மீண்டும் அப்பாட்டை முற்கூறியபடியே படித்தான். அப்பாட்டை நன்குகேட்ட அவர்கள், 'இஃதென்ன, மிகவும் வியப்பாக விருக்கிறது. பார்ப்பான் மாடு தின்பானும், குயவன் மறை யோதுவானும், கொல்லன் மண் பிசைவானும், வாணியன் இரும்படிப்பானும், வண்ணான் எண்ணெய் விற்பானும், பறையன் புடவை துவைப்பானும். பெரிய வியப்பாக வன்றோ இருக்கின்றது. இப்படியும் ஒரு புலவர் செய்யுள் இயற்றுவாரா? ஒரு வேளை அவருக்கு உலகநடை தெரியாதோ என்னவோ? உலக நடை தெரியாதவர் எவ்வாறு பாட்டியற்றும் புலவராக இருக்கமுடியும்?' என்று பேசிக்கொண்டனர்.

அப்போது மாணவன் அவர்களைப் பார்த்துப், 'புலவர் பாடியதில் ஒன்றுந் தவறில்லை. நன்றாகத் தான் பாடியிருக்கிறார். இப்பாட்டுக், கடைமொழி மாற்று ' என்னும் அழகு வகையைச் சேர்ந்தது. 'பறை' என்பதை முன்னால் எடுத்து, பறை மாடு தின்பான், பார்ப்பான் மறையோதுவான், குயவன் கூடிமிக மண்பிசைவான், கொல்லனே தேடி இரும்படிப்பான், செக்கான் எண்ணெய் விற்பான், வண்ணான் பரும்புடவை தப்பும்' என்று கூட்டிப்பாருங்கள்' என்றான்.

மாணவன் கூறியதைக் கேட்ட வழிப்போக்கர்கள் வியப்படைந்து, ஆ! ஆ!! அப்படியா? சிறிது நேரத்திற்குள் பெரும் வியப்படையும்படியாகப் புலவர் செய்துவிட்டாரே; அவருடைய ஆற்றலே ஆற்றல், என்று போற்றிக்கொண்டு சென்றனர்.

மாடுதின்பான் பார்ப்பான் மறையோது வான்குயவன்
கூடிமிக மண்பிசைவான் கொல்லனே—தேடி
இரும்படிப்பான் செக்கான்எண் ணெய்விற்பான் வண்ணான்
பரும்புடவை தப்பும் பறை.

(அ - ரை.) செக்கான் - வாணியன்.

---

## 42 "என்னை யிடுக்கடி பாயைச் சுருட்டடி."

காளமேகப்புலவர் என்னும் பெரியார் இறைவியின் திருவருளைப் பெற்றவர். யாவர் எத்தகைய பாட்டு அடிகள் கொடுத்தாலும் அவற்றை ஒரு நொடிக்குள் பாடக்கூடிய ஆற்றல் அமைந்தவர். அத்தகைய பெரியாரைக் கண்டு ஒருவர், 'என்னை யிடுக்கடி பாயைச் சுருட்டடி ஏகடி யம்பலத்தே' என்னும் அடியைக் கொடுத்து ஒரு பாட்டில் அமைத்துப் பாடச்சொன்னார்.

புலவர் உடனே ஒரு கதையைக் கற்பித்துக் கொண்டார். ஒரு காலத்தில் வியாக்கிரபாதர் என்னும் புலிக்கால் முனிவருடைய குழந்தையாகிய உபமன்யு என்பவர் பாலுக்காக அழுதார். தாய்ப் பாலும் இல்லை. ஆன்பாலும் அரிதாயிற்று. புலிக் கால் முனிவர் சிவபெருமான் இடத்தில், 'குழந் தைக்குப் பால் வேண்டுமென்று வேண்டிக் கொண்டார்.

எல்லாம் வல்ல முழு முதற்கடவுளாகிய இறை வனுக்கு அருமையான செயல் யாதிருக்கிறது? அவர் திருப்பாற் கடலையே உபமன்யு முனிவருக்குக்

கொடுத்துவிட்டார். சிவபெருமான் திருப்பாற் கடலைப் புலிக்கால் முனிவருடைய பிள்ளைக்குக் கொடுத்து விட்ட செய்தி திருமாலுக்குத் தெரிந்தது. அவருக்கு உடனே மிகுந்த நடுக்கம் உண்டாகி விட்டது. அவர் திருமகளைப் பார்த்து, 'ஓ திருமகளே! நாம் இதுவரையில் எத்தகைய கவலையும் இல்லாமல் இந்தத் திருப்பாற் கடலிலே இனிது வாழ்ந்திருந்தோம். இப்போது உங்கள் அண்ணனாராகிய சங்கரனார் நாம் வாழும் இந்தப் பாற்கடலைப் புலிக்குட்டிக்கு (புலிக்கால் முனிவர் பிள்ளைக்கு) க கொடுத்து விட்டாராம். அந்தப் புலிக்குட்டி நம்மையுஞ் சேர்த்துப் பாலோடு விழுங்கினாலும் விழுங்கி விடும். எனக்கு நெஞ்சிலே மிகுந்த அச்சம் வந்து விட்டது. கைகால் அசையவில்லை. நடுக்கத்தினால் கீழே விழுந்துவிடுவேன்போ லிருக்கிறது. நான் அவ்வாறு விழுந்து விடாமல் என்னைத் தாங்கலாகப் பற்றிக்கொள். பாம்புப் படுக்கையைச் சுருட்டிக் கக்கத்தில் வைத்துக்கொள். அம்பலத்தைப் பார்த்துச் செல். புலிக்குட்டிக்குப் பாற்கடலைக் கொடுத்தது உண்மைதானா வென்று அம்பலவாணரைக் கேட்போம். உண்மைதான் என்றால் அந்த அம்பலத்திலேயே தங்கிவிடுவோம்' என்று கூறியதாக அமைந்தது அக்கற்பனை. அதனைக் கேட்டோர் வியப்புக் கடலில் மூழ்கிப் புலவரைப்போற்றி வணங்கினர்.

தடக்கட லில்பள்ளி கொள்வோ மதனைச் சங்கரனார்
அடற்புலிக் குட்டிக் களித்தன ராமது கேட்டுநெஞ்சில்
நடுக்கம்வந் துற்றது கைகால் எழாநனி னத்தியென்னை
இடுக்கடி பாயைச் சுருட்டடி ஏகடி அம்பலத்தே.

(அ-ரை.) தடக்கடல் - பெரிய கடல். அடற்புலிக்குட்டி - வலிய புலிக்குட்டி. நளினத்தி - தாமரையில் தங்கிய திருமகளே! என்னை இடுக்கடி - என்னைத் தாங்கலாகப் பற்றிக்கொள். ஏகடி - செல்வாயடி பெண்ணே.

---

## 43. பாட்டாக வந்த பதில்

சிவஞானமுனிவர் என்னும் பெரியார் கல்வி கேள்விகளில் மிகவும் சிறந்தவர். பல உரைநடை நூல்களும் செய்யுள் நூல்களும் எழுதியவர். சைவ சித்தாந்த நூல்களிலே பேராற்றல் படைத்தவர். எப்பொழுதும் எழுத்துவேலையிலேயே ஈடுபட்டிருப்பார். ஒருநாள் யாதோ ஒரு செய்யுள் நூலை இயற்றிக்கொண்டிருந்தார்.

அப்போது முனிவருடைய சமையல்காரன் அங்கு வந்தான். 'அடுத்தவேளை யுணவிற்குச் சாப்பாட்டோடு எவ்வகையான கறிவகைகள் ஆக்குவது?' என்று கேட்டான்.

முனிவர் பாட்டை நிறுத்திவிட்டு அவனுக்குப் பதிற்கூற விரும்பவில்லை. பதிற்கூறுமளவிருந்தாலோ சமையல்காரன் அவ்விடத்தைவிட்டு அகல மாட்டான். அங்கேயே நின்றுகொண்டு மேலும் மேலுங் கேட்டு வேலைக்கு இடையூறு விளைத்துக் கொண்டிருப்பான். ஆகவே என்னசெய்தார் தெரியுமா? சமையல்காரனைப் பார்த்து, 'தம்பீ! சிறிது துவையலரை, ஒரு பச்சடிவை; ஏதாவது வற்றல் வறுத்துவை. காயம்போட்டுக் கீரையை மணமுண்

டாகும்படி கடைந்து வை' என்று பாட்டாகவே பதில் கூறினர்.

முனிவருடைய வாக்கிலிருந்து வருவனவெல்லாம் பாட்டாயிருத்தலைக் கண்டு சமையல்காரன் மகிழ்ந்து, தன்னுலும் ஒரு பாட்டுத் தோன்றிற்று என்று எண்ணிக்கொண்டு சென்ருன். முனிவருடன் இருந்த அவருடைய மாணவர்கள் அப்பாட்டை எழுதி வைத்தார்கள். சமையல்காரர் முனிவர் காலமான பிற்பாடும் தாமிருக்கும் வரையில் அப்பாட்டைச் சொல்லிக்கொண்டே யிருந்தார்.

சற்றே துவையலரை தம்பிபொரு பச்சடிவை
வற்றலே தேனும் வறுத்துவை — குற்றமிலை
காயமிட்டுக் கீரைகடை கம்மெனவே மிளகுக்
காயரைத்து வைப்பாய் கறி.

(அ - ரை.) மிளகுக்காய்-பச்சையான மிளகின் காய்.

## 44. புலவர் தம் மனைவிக்குப் புகன்றது

குமணன்பாற் பெரும்பொருள் பரிசுபெற்ற புலவர் தம்முடைய இல்லத்தை யடைந்தார். மனைவியின் இடம் பொருளைக் கொடுத்தார். 'மனைவி பொருளைப் பலருக்கும் வழங்கிப் பயன்படுத்தாது சேர்த்து வைத்துக்கொண்டு, நெடுங்காலம் தொல்லையில்லாமல் வாழலாம் என்று எண்ணினாலும் எண்ணுவாள்; அவ்வாறு செய்யாமல் பலருக்கும் பயன்படுத்துமாறு அறிவுரை கூறுதல்வேண்டும்' என்று முடிவுசெய்தார். அவர் தம்முடைய மனைவியைப் பார்த்து,

"என்னுடைய மனைவாழ்க்கைக் குரியவளே! நீ இச்செல்வத்தை மடக்கி வைத்துக்கொண்டு பிசினத்தனஞ் செய்யாதே. நின்னை விரும்பி யொழுகும் நட்புடை மகளிர்க்கும், நின்னால் விரும்பப்பெற்ற நட்புடைய மகளிர்க்கும், பல குணங்களாலும் பெருமை பொருந்திய கற்பினையுடைய நினது சுற்றத்து மூத்தமகளிர்க்கும், நமது வாழ்க்கைக்கு நீண்ட காலமாகக் கடன்கொடுத்துக் கொண்டிருந்தவர்களுக்கும், மற்றும் எல்லோருக்குங் கொடுத்து மகிழ்வாயாக. கொடுக்குங் காரியத்தில் என்பால் எதுவும் கேட்கவும் வேண்டாம். இப்பொருளைப் பாதுகாத்தால் நீண்டகாலத்திற்கு நலமாக வாழலாமென்றும் எண்ணாதே. இப்பொருளை நன்கு செலவிட்டால்தான் நாம் மேன்மேலும் சிறப்படையலாம்" என்று நல்லுரைகள் பல நவின்றார்.

புலவருடைய மனைவியும் கணவனார் கட்டளைப் படி, அப்பொருளினைப் பலருக்கும் வழங்கிப் பொருளினால் அடையவேண்டிய புகழைப் பெற்றாள். 'ஊருணி நீர் நிறைந்தற்றே உலகவாம் பேரறிவாளன் திரு' என்பது தெய்வப்புலவருடைய திருவாக்கன்றோ?

நின்னயந் துறைநற்கு நீநயந் துறைநர்க்கும்
பன்மாண் கற்பினின் கிளைமுத லோர்க்குங்
கடும்பின் கடும்பசி தீர யாழநின்
நெடுங்குறி எதிர்ப்பை நல்கி யோர்க்கும்
5 இன்னோர்க்(கு) என்னாது என்னொடுஞ் சூழாது
வல்லாங்கு வாழ்தும் என்னாது நீயும்
எல்லோர்க்குங் கொடுமதி மனைகிழ வோயே
பழந்தூங்கு முதிரத்துக் கிழவன்
திருந்துவேற் குமணன் நல்கிய வளனே.

(அ - ரை.) நயந்து - விரும்பி. நெடுங்குறிஎதிர்ப்பை நல்கியோர்க்கும் - கடனைக் கொடுத்தவர்களுக்கும். சூழாது - எண்ணாது. வல்லாங்கு - நன்றாக. முதிரத்துக் கிழவன் - முதிரமலைக்கு உரியவன்.

கழக வெளியீடு—சகூக

# இலக்கியச் சிறுகதைகள்

## எட்டாம் பகுதி

✳

ஆக்கியோன் :

புலவர். சு. அ. இராமசாமி

✳

திருநெல்வேலி, தென்னிந்திய

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்

திருநெல்வேலி, :: சென்னை.

பதிப்புரிமை] [அணா 12

First Edition: April 1948.

[All Rights Reserved]

Published by
THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
PUBLISHING SOCIETY, TINNEVELLY LTD.
TIRUNELVELI : : & MADRAS.

P. I. C. Ms. 95-B

The Royal Printing Works, Mount Road, Madras.
M. S. 175 C. 500.

# முகவுரை

கற்பனைச் செய்யுட்களில் அமைந்துள்ள பொருள்களைச் சிறு சிறு கதை வடிவாக அமைப்பின் இலக்கியப் பயிற்சி பெறுபவர்களுக்குப் பேருதவியாக இருக்குமென்று திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் ஆட்சிப்பொறுப்பாளரும், அக்கழகத்தை அதன் தொடக்ககாலத்திலிருந்தே நன்முறையில் இயக்கிவருபவரும் நுண்ணறிவு மிக்காருமாகிய திருமிகு. வ. சுப்பையா பிள்ளையவர்கள் எண்ணினார்கள். அக்கருத்தைப் பண்டித வித்துவான். திருமிகு. பொன். இராமநாதன் செட்டியாரவர்களிடமும் என்னிடமும் அறிவித்தார்கள். அக்கருத்து மிகச் சிறந்ததென்று எங்கட்குந் தோற்றியது. நாங்கள் உடனே அவ்வேலையில் ஈடுபட்டோம். முதல் நான்கு பகுதிகள் வெளிவந்தன. அவைகளைக் கண்ணுற்றோர், இஃது இலக்கியப் பயிற்சிக்குப் புதிய முறையாக விருக்கிறதென்று தங்கள் நல்லெண்ணத்தைப் புலப்படுத்தினார்கள்.

பல காரணங்களால் இராமநாதன் செட்டியாரவர்கள் இவ்வேலையில் ஈடுபட முடியாதவர்களானார்கள். பின்னர், நான் ௫, ௬-ஆம் பகுதிகளை எழுதி முடித்தேன். அவை முன்னரே வெளிவந்தன. இப்போது, ௭, ௮-ஆம் பகுதிகள் வெளிவருகின்றன. இவ்வரிசைக்கு இவைகளே இறுதிப் பகுதிகளாம்.

இந்த எட்டுப் பகுதிகளிலும்,

| | |
|---|---|
| காஞ்சிப் புராணம் | விவேக சிந்தாமணி |
| திருவிளையாடற் புராணம் | தேவாரம் |
| கந்த புராணம் | திருவீங்கோய்மலை எழுபது |
| கம்ப ராமாயணம் | நக்கீரர் பாடல் |

நைடதம்
கலிங்கத்துப்பரணி
சூளாமணி
தேம்பாவணி
தனிப்பாடல் திரட்டு
தனிச்செய்யுட் சிந்தாமணி
பெருந்தொகை
பன்னூற்றிரட்டு
நாலடியார்
திருக்குறள்
குசேலோபாக்கியாநம்
திருவாரூர் நான்மணிமாலை
பெரியபுராணம்
சோண சைலமாலை
நரி விருத்தம்
வேதநாயகம் பிள்ளை நீதி [நூல்
திருமந்திரம்
கைவல்லிய நவநீதம்
தண்டலையார் சதகம்
நன்னெறி
அருணைக் கலம்பகம்
மீனாட்சிசுந்தரம் பிள்ளை [பாடல்
நீதிவெண்பா
நீதிநெறி விளக்கம்
பழம் பாடல்
தரும தீபிகை
கொலை மறுத்தல்
புறநானூறு

முதலிய பல நூல்கள் எடுத்தாளப் பெற்றுள்ளன. பெரும்பாலும் தனிப்பாடல் திரட்டு, தனிச் செய்யுட் சிந்தாமணி ஆகியவற்றின் பாடல்களே அமைந்துள்ளன. கதைகளின் இறுதியிற் பாடலும் அரும்பதவுரையும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

இந்த இலக்கியச் சிறுகதைவரிசைகளைப் படிப்பவர்கள் பல இலக்கியங்களையும் படிக்கும் ஆற்றல் பெறுவார்களென்பது திண்ணம். ஆகவே, அன்பர்கள் இவ்விலக்கியச் சிறுகதைவரிசைகளுக்குத் தக்க ஆதரவு தந்து இத்தகைய நூல்கள் பல தோன்றுமாறு செய்வார்களென்று நம்புகிறேன்.

பைந்தமிழ்ப் பண்ணை,
கருப்பக்கிளர்.
1-12-1947

**சு. அ. இராமசாமி.**

# பொருளடக்கம்


| தொடர் எண் | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | பிணத்தையும் மறைத்த பெருந்தகை | ... | 1 |
| 2. | என்ன செயங்கொண்டார் இவர்? | ... | 4 |
| 3. | பாழ்வீட்டில் தங்கிய பாவலர் | ... | 5 |
| 4. | அறச்சாலை உணவின் அழகு | ... | 8 |
| 5. | கழைக்கூத் தாடிய திங்கள் | ... | 10 |
| 6. | கல்காலை கடலை தின்றது | ... | 12 |
| 7. | தம்பிரானகளும சாப்பாடும | ... | 15 |
| 8. | உரைநடைப பாட்டு | ... | 17 |
| 9. | கத்தரிக்காய் லிங்கம | ... | 18 |
| 10. | பரிசுப் பாட்டு | ... | 21 |
| 11. | கயவன பாடல்பெற்ற கதை | ... | 23 |
| 12. | நான்முகன தயக்கம் | ... | 26 |
| 13. | கருடன் கலக்கம | ... | 27 |
| 14. | காவலனும பாவலனும | ... | 29 |
| 15. | வீரனைப் பெற்ற விளங்கிழை | ... | 32 |
| 16. | போரைத் தடுத்த புலவர் | ... | 33 |
| 17. | புலவராற் பிழைத்த புரவலன் மக்கள் | ... | 36 |
| 18. | அறிஞர் பிழைக்கு அரசன் தண்டனை | ... | 39 |
| 19. | காவலனுக்குப் பொருள் அளித்த பாவலர் | | 42 |
| 20. | தனது கடனுரைத்த தாய் | ... | 45 |
| 21. | கல்வி யருமை தெரிந்த காவலன் | ... | 46 |
| 22. | சூளுரை புகன்ற சுடர்த்தொடி | ... | 50 |
| 23. | செந்தமிழ் மாதின் சீரிய கற்பு | ... | 52 |
| 24. | நரைதிரை யின்மைக்கு நன்மருந்து | ... | 55 |
| 25. | எதிரொலி | ... | 58 |

26. செல்வரின் செந்தமிழன்பு ... 59
27. அரசன் மதித்தலே அருஞ்செல்வம் ... 62
28. புலவரின் விடுகதை ... 64
29. பயணீ சொல்லே ... 65
30. கைப்பொருளின மேன்மை ... 67
31. அருங்கனி வழங்கிய அரசன ... 69
32. முல்லையைச் சினக்கும மொய்குழலார் ... 71
33. செருக்கடங்கிய சிற்றரசன் ... 73
34. திருவருட் பெரியாருந் தீயோரும ... 74
35. காவலர்க்குக் கபிலரின் அறவுரை ... 76
36. புளியங்கிளை ஒடித்த புலவர் ... 78
37. மக்கட் பேற்றின மாண்பு ... 80
38. குற்றால மலைவளம ... 82
39. நரிவெரூஉத்தலையாரின நல்லுரை ... 84
40. கச்சியப்பனை யுதைத்த கால் ... 85
41. குலத்தொழில் தானே வரும ... 88
42. நண்டு வந்தால் தெரியும் ... 89

# இலக்கியச் சிறுகதைகள்

## (எட்டாம் பகுதி)

---

### 1. பிணத்தையும் மறைத்த பெருந்தகை

பல ஆண்டுகளுக்கு முன்னே செங்கலங்கை என்னும் ஊரிலே வடுகநாத முதலியார் என்னும் பெயருடைய ஒரு செல்வரிருந்தார். அவர் நல்ல அறிவாளி. விருந்தினரையும் தமிழறிஞர்களையும் போற்றுவதில் மிகுந்த ஊக்கமுடையவர். அவருடைய புகழ் நாற்றிசையும் பரவிநின்றது. அவருடைய புகழைப் புலவர்கள் பலவாறு பாடிச் செல்வர். அவர்களுக்கெல்லாம் முதலியார் பொருண் மாரி பொழிவார்.

ஒருநாள் அவருடைய வீட்டுக்குப் புலவர்கள் சிலர் விருந்தாக வந்தனர். அவர்களுக்கெல்லாம் அறுசுவை யுணவு சமைக்கப்பட்டுக்கொண் டிருந்தது. எதிர்பாராத விதமாக அவருடைய வீட்டிலே அவருடைய தம்பி இறந்துவிட்டார். அவர் நோய் வாய்ப்பட்டிருந்து இறந்தாரா அன்றி வேறெக் காரணத்தாலாவது இறந்தாரா என்பது தெரியவில்லை. விருந்தோம்புதற்கு இடையூறாகத் தம் வீட்டில் ஒரு சாவு நேரிட்டதைக் கண்டு வருந்தினார். திடீரென்று அவருடைய மனத்திலே ஓர் எண்ண

முண்டாயிற்று. அந்நாளிலே அப்பூதியடிகள், அப்பருக்குத் தம்முடைய மகன் பிணத்தை மூடி வைத்துவிட்டு உணவளிக்க முயற்சித்தாரல்லவா? அதைப்போலத் தாமுஞ் செய்யலாமென்று எண்ணி முடிவுசெய்தார்.

பிறகு பிணத்தை ஓரிடத்திலே மறைத்து வைத்துவிட்டு விருந்தினர்களனைவரையும் உண்ணச் செய்தார். உயிர் நீங்கிய உடல் ஒரு தெருவில் கிடந்தால் கூட அத் தெருவினர் உண்ணுதல் கூடாது. அப்பர் தம்முடைய தெய்வ அருளால் அப்பூதியடிகளின் மகன் இறந்திருந்ததை யுணர்ந்து பிழைக்கச் செய்தார். முதலியார் வீட்டு விருந்தினர்களோ யாதும் அறியாமல் உண்டுவிட்டார்கள். உணவு முடிந்த பிறகுதான் விருந்தினர்களுக்குச் செய்தி தெரிந்தது.

பிணங் கிடக்கும்போது தம்மை உண்ணச் செய்தமைக்காக யாரும் முதலியாரைச் சினந்து கொள்ளவில்லை. முதலியாருடைய விருந்தோம்பும் ஆர்வத்தைத்தான் அவர்கள் பெரிதாக எண்ணிப் போற்றினார்கள்.

ஒரு புலவர், 'தன்னுடன் பிறந்த தம்பி இறந்ததும் வெளியே தோன்றாமல் மூடிவைத்துவிட்டுச் சோறிட்டான்; செங்கலங்கை என்னும் ஊரிலே அரசரும் மதிக்கும்படியாக வாழ்கிற வடுகநாத முதலி என்பவன். அவனுடைய சிறப்பை நாம் எவ்வாறு கூறுவது? அவனுடைய பெருமைக்குக் கன்னனையும் சோமனையும் கூட ஒப்பிட்டுக் கூற முடியாது' என்று புகழ்ந்து பேசினார்.

புகழேந்திப் புலவருடைய காலத்திலே அந்த வடுகநாத முதலியாருடைய மகன் சிறந்து விளங்கியிருந்தான். புகழேந்திப் புலவருக்குத் திருமணம் நடக்கவிருந்தது. புகழேந்திப் புலவர் முதலியாருடைய மகனிடஞ் சென்று தம்முடைய திருமணத்திற்கு வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அப்பொழுது முதலியார் வீட்டில் ஒருவர் நோயாகவிருந்தார். அச் செய்தியை முதலியாருடைய மகன் புகழேந்திப் புலவரிடங் கூறினன்.

அதற்குப் புகழேந்திப் புலவர், 'நம்முடைய தம்பி இறந்துபோக அதனைப் பொருட்படுத்தாது பிணத்தை மூடிவைத்துவிட்டு விருந்தினர்களையுண்ணச்செய்த பெருமையுடையவர் உன்னுடைய தந்தையாகிய வடுகநாத முதலியார். நீ அத்தகைய மாண்புடையவரின் மகனாயின் உன்னுடைய வீட்டிலே இறப்பு நேர்ந்தாலுங்கூடப் பிணத்தை மூடிவைத்துவிட்டு என்னுடைய திருமணத்திற்கு வந்து பெருமையுண்டாக்குவாயாக' என்று கூறிவிட்டுச் சென்றார்.

தன்னுடன் கூடப் பிறந்த சகோதரத் தாயியுயிர்
அந்நிலே மாண்டது தோன்றமல் மூடிவைத் தன்னமிட்டான்
மன்னவர் போற்றிட வாழ்செங் கலிங்கை வடுகனுக்குக்
கன்னனுஞ் சோமனு மோவிணை யாகக் கழறுவதே.

(அ-ரை) அந்நிலே - விருந்துசெய்ய முயன்றுகொண்டிருக்கும் அந்த நிலைமையில்.

முந்தவிளை யோன்மாள முத்தமிழோர்க் கன்னமிட்ட
அந்த வடுகன் மகனயின் — வந்தென்
தலைக்கலி யாணத்துக் கேதான் நலத்தை
இலக்கணமாச் செய்வாய்நீ யே.

(அ-ரை.) முந்த - முன்னல். வடுகன்-வடுகநாத முதலியார்.

## 2. என்ன செயங்கொண்டார் இவர்?

செட்டிமார் நாட்டிலே, ஒரு திருப்பதியில் எழுந்தருளியுள்ள சிவபெருமானுடைய திருப்பெயர் செயங்கொண்டார் (வெற்றிகொண்டார்) என்பது. அப்பெருமானுடைய பேரில் செயங்கொண்டார் சதகம் என்று போற்றி நூலும் புகழ்ந்து பாடப்பட்டிருக்கிறது.

ஒரு சமயம் ஊனையூர்ப் பாரதியார் என்பவர் அவ்வூருக்குச் சென்றார். செயங்கொண்டார் சதகத்தைச் சிலர் அவருக்குக் காட்டினர். ஊனையூர்ப் பாரதியார் அந்நூலைப் பார்த்துவிட்டு, 'இந்த ஊர்க் கடவுள் செயங்கொண்டார் என்றால் எதனைச் செயங்கொண்டார்? பதுமாசுரனைக் கண்டு ஓடியொளித்தார். அருச்சுனன் கையில்லாற் பூசை வாங்கினர். சாக்கிய நாயனாரால் கல்லடிபட்டார். பாண்டியனால் பிரம்படி பட்டார்' என்று சிவபெருமான் அடைந்துள்ள தோல்விகள் பலவற்றையும் வேடிக்கையாகக் கூறி அடுக்கிக்கொண்டே போனார்.

அப்போது அங்கு மூத்தப்பசெட்டியார் என்பவர் இருந்தார். அவருங் கல்வியறிவிற் சிறந்தவர். அவர்தாம் மேற்படி சதகத்தைப் பாடியவர். அவர் உடனே பாரதியாரைப் பார்த்து, 'இவர் என்ன செயங்கொண்டார் என்று ஏளனமாகச் சொல்லி விடவேண்டாம். முப்புரத்தையும் நகைத்தெரித்துச் செயங்கொண்டார். காமனை விழித்தெரித்துச்

செயங்கொண்டார். இராவணனைக் காற்பெருவிர லால் மிதித்தழுத்திச் செயங்கொண்டார்' என்று சிவபெருமான் வெற்றிகள் பலவற்றையும் வரிசை யாக அடுக்கத் தொடங்கினார். ஊனையூர்ப் பாரதி யார் நம்மை எதிர்ப்பதற்கு இங்கும் ஆள் இருக் கிறானா என்று வாயடங்கினார்.

ஓங்குபத்மா சுரனைக்கண் டோடியொளித் தார்விசயன்
வாங்குதனு வாற்பூசை வாங்கினார் — ஈங்கிருக்கும்
நன்னியமச் சோழீசனார்செயங்கொண் டாரென்றால்
என்னசெயங் கொண்டார் இவர்.

(அ-ரை.) வாங்கு தனு - வளைந்த வில். நல் நியமம் - நல்ல முறை.

என்னசெயங் கொண்டார் இவரென்றால் முப்புரத்தைச்
சொன்னமய மாய்ச்சமைத்த சோழீசர் — பின்னும்
சிரித்துச் செயங்கொண்டார் சித்தசனைக் கண்ணால்
எரித்துச் செயங்கொண்டா ரே.

(அ - ரை.) சொன்னமயம் - பொன்மயம், தீமயம். சித்த சன்-காமன்.

---

## 3. பாழ் வீட்டில் தங்கிய பாவலர்

புலவர் ஒருவர் ஊர் ஊராகச் சுற்றிக் கொண்டு திரிந்தார். கொடைநல முடைய செல் வர்கள்பாற் சென்று அவர்தம் புகழைப் பாடிப் பரிசில் பெறுதலும் ஆண்டாண் டெழுந்தருளிய அண்ணலைப் போற்றி வழிபடுவதுமே அவருடைய நோக்கம். அறிவாளிகளாயினார் இறைவனைப் போற்றாவிடின் அறிவு பயன் படாதன்றோ? தெய்

வப் புலவரும் 'கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவன் நற்ருள் தொழாஅ ரெனின்' என்று பாடவில்லையா ? ஆகையால்தான் புலவர்கள் பலர் சிவப்பதிகள்தோறுஞ் சென்று இறைவனை வழிபடுதலையும் தம்முடைய விழுமிய நோக்கமாக மேற்கொண்டனர்.

இங்குக் கூறப்பெறும் புலவருடைய பெயர் வீர ராகவர். அவர் பல சிவப்பதிகளையும் போற்றி வழிபட்டுக்கொண்டு இடும்பாவனம் என்னும் திருப் பதியை அடைந்தார். இறைவனைப் போற்றி வழி பட்டார். இரவு தங்குவதற்கு இடந் தேடினர்.

ஊர்க்காரர்கள் ஒரு பாழ் வீட்டைக் காட்டினர் கள். புலவர் அங்குச் சென்று படுத்துக்கொண் டார். புலவருக்கு உணவும் அகப்படாதபடியால் பசியோடிருந்தார். பசிக் கொடுமையால் உறக்க மும் பிடிக்கவில்லை. புலவர் பட்டினியாக விருந்தது போல் அப்பாழ் வீட்டிலிருந்த கொசுக்களும் தக்க உணவு அகப்படாமையினுல் பட்டினியாக விருந் தன. அவை புலவர் வந்து படுத்ததும் தம்முடைய பட்டினியைப் போக்கிக்கொள்ளத் தொடங்கின. பசியோடிருந்த புலவர் கொசுக்களுக்கு விருந்து செய்யப் பெரிதும் வருந்தினர்.

புலவருக்கு இறைவன் மேலேயே வெறுப் புண்டாயிற்று. 'இறைவனே! நான் உம்மைத் தொழவேண்டி இங்கு வந்தால் இப்படிப் பட்டினி யாகப் போட்டுக் கொசுக்களை விட்டுக் கடித்துக்

கொல்லச் செய்கிறீரே! இது தானா உம்முடைய தண்ணளி?' என்று புலம்பினர்.

திடீரென்று புலவருக்குப் பழவினையைப் பற்றி யெண்ண முண்டாயிற்று. இவ்வாறு அல்லற் படத் தீவினையே காரணம் என்று தெளிந்தார். 'இடும்பாவனமாகிய இவ்வூரில் எழுந்தருளியுள்ள இறைவனே! நான் உம்மை நோவது தவறு; நான் பெருந்தீவினைகளைச் செய்து அதன் பயனை நுகர்ந் தால் அதற்கு நீர் என்ன செய்வீர்? நான் உம்மை நொந்து கொள்வது கூடாது' என்று தம்மைத் தாமே தேற்றிக்கொண்டார்.

பசிமுடுக நோவதல்லால் பாழ்வீட்டில் பாழ்ந்த
கொசுக்கடி யாலுங் குமைந்தோம்—இசையில்
நெடும்பாவம் யாஞ்செய்தால் நீரென்ன செய்வீர்
இடும்பா வனநாத ரே.

(அ—ரை.) முடுக - தொல்லை செய்ய. குமைந்தோம் - குழைந்து வருந்தினோம்.

———

## 4. அறச்சாலை உணவின் அழகு

புலவர் ஒருவர் உணவின்பொருட்டு ஓர் அறச்சாலை (சத்திரம்)க்குச் சென்றார். அவ்வறச்சாலை நாகதேவன் என்னும் செல்வன் ஒருவனால் ஏற்படுத்தப் பெற்றது. ஆகவே, அது 'நாகதேவன் அறச்சாலை' என்று வழங்கிக்கொண்டிருந்தது.

அறச்சாலையுணவிற்கு வந்த பலரும் பந்தியாக அமர்ந்தனர். தனிப்பட்டவர்கள் சிலர் வீடுகளில் கூடத் தூய்மையாக இருப்பதில்லை. வெறுக்கத்தக்க விதமாக அழுக்கு ஏனங்களையும் தூய்மையற்ற பொருள்களையும் பயன்படுத்திக் காரியஞ் செய்வார்கள். அவ்வாறாகப் பலருக்கு உணவு சமைக்கும் அறச்சாலையைப் பற்றிக் கூறவும் வேண்டுமா? அறச்சாலையில் தொழில் புரிவோர் பெரும்பாலும் வெறுப்போடுதான் எதையுஞ் செய்வார்கள். தாங்கள் தங்கள் பொருட் செலவிலேயே ஏழை யெளியவர்கட்கு உணவளிப்பதாக எண்ணிக்கொள்வார்கள். அறச்சாலைக்கு வருபவர்களை அன்புடன் நடத்தமாட்டார்கள். அறச்சாலை அறத்தின்பொருட்டு நடத்தப்பெறுகிறது என்னும் எண்ணமே அவர்களுக்குச் சிறிதும் இருக்காது. இத்தகைய ஓர் அறச்சாலையில்தான் புலவரும் உண்பதற்குச் சென்று உட்கார்ந்தார். உணவு படைக்கப்பட்டது. சோற்றை யள்ளிப் புலவர் வாயில் போட்டார். முதல்வாய்ச் சோற்றிலேயே ஒரு கல்லும் ஒரு நெல்லும் இருந்தன. கறி செய்யப்பட்டிருந்த கத்தரிக்காயோ பல நாட்களுக்கு முன் வந்ததாகையால் காய்ந்து போய்

உருசி கெட்டுப்போ யிருந்தது. உப்போ அரை குறையாக விருந்தது.

பரிமாறியவன் கையில் பிடித்திருந்த அகப் பையோ காம்பொடிந்து அரையகப்பையாக விருந் தது. ஏனமோ விளக்காமல் அழுக்குப் பிடித்து விகாரமாக விருந்தது. அதன் வெளிப் புறத்திலோ பலவகை அழுக்கு நீர் ஒழுகியது. அவைகளில் ஈக்களோ மொலு மொலு வென்று மொய்த்துக் கொண்டிருந்தன. அந்த அழுகுகளை யெல்லாம் பார்த்த புலவருக்குச் சாப்பிடவே முடியவில்லை. அவர் மிகுந்த வெறுப்படைந்து அரைகுறையாகவே சாப்பாட்டை முடித்துக்கொண்டு எழுந்துவிட்டார்.

எழுந்த புலவரின் மனத்தைவிட்டு அந்த அறச் சாலையில் உணவு படைக்கும் அழகு நீண்ட காலம் வரையிலும் மறக்கவே யில்லை. அவர் அதைப் பற்றிப் பலரிடமுஞ் சொல்லிக்கொண்டே யிருந் தார். அத்தகைய அழகுடைய அறச்சாலைகள் எத்தனையோ நாம் இக்காலத்திலும் பார்க்கிறோ மன்றோ?

வாயிலொன்று கல்லுமொன்று—நெல்லுமான வண்ணமும்
வாடலாக ஆறுமாதம் வைத்திருந்த கத்தரிக்
காயிலிட்ட கறியுமுப்பி லாதகஞ்சி வன்னமும்
காம்பொடிந்த வோரகப்பை கைப்பிடித்த வண்ணமும்
தூயதாகத் துலக்கலின்றி யழுக்கடைந்த பாத்திரம்
தூக்கியுள் ளசுத்தநீர் துறுத்துவந்த நேர்த்தியும்
ஓயலின்றி யீக்கள் வீழ்ந்து மொலுமொ லென்ற சட்டியும்
உடன்கொணர்ந்த நாகதேவன் ஊண்மறப்ப தில்லையே.

(அ—ரை.) துலக்கல் - விளக்கல். ஓய லின்றி - ஒழிவில்லா மல். மொலு மொலு - ஒலிக்குறிப்பு. ஊண் - உணவு.

## 5. கழைக் கூத்தாடிய திங்கள்

சிவப்பிரகாச அடிகள் என்னும் பெரியார் ஒரு நாள் இரவு தம்முடைய ஆசிரியருடனும் மற்றோர் அன்பருடனும் திறந்த வெளியிலே அமர்ந்திருந்தார். அப்போது முழுத்திங்கள் விண்ணில் விளங்கியது. உடுக்கூட்டங்கள் வானிடமெங்கும் விளங்கின. அவர்கள் அமர்ந்திருந்த இடம் கடற்கரை.

உடனிருந்த அன்பர் சிவப்பிரகாச அடிகளைப் பார்த்து, 'இப்போது விண்ணிலே திங்கள் விளங்குகிறது. கடல் பேரிரைச்சலுடன் முழங்குகிறது. விண்ணகமெல்லாம் உடுக் கூட்டங்கள் இலங்குகின்றன. நாம் ஈண்டு இனிது அமர்ந்திருக்கிறோம். இப்பொழுதைய நிலைமையைப் பற்றிப் பாவாணராகிய நீங்கள் ஒரு கற்பனை சொல்லுங்கள்' என்று வேண்டிக்கொண்டார்.

அதற்குச் சிவப்பிரகாச அடிகள், 'இப்பொழுதைய நிலைமையைக் கழைக்கூத்தாடு மிடத்திற்கு ஒப்பாகக் கூறலாம். எவ்வாறெனின், கடலின் பேரொலி மத்தள ஒலி; திங்களின் ஒளிக்கதிர்கள் நான்கு பக்கமும் பரவியிருப்பது கயிறுகள். மேலே திங்கள் விளங்குவது கழையின் (மூங்கில்) மேலே கழைக்கூத்தாடி ஒருவன் நின்று ஆடல் புரிவதை நிகர்க்கும். இங்குத் தங்கியுள்ள நாமோ கழைக் கூத்தாடியின் வேடிக்கையைப் பார்த்துக்கொண்டிருக்கிறவர்களாவோம்.

வானகமெங்கும் பரவியுள்ள ஒளி தங்கிய உடுக் கூட்டங்களோ, நம் பெருமானுகிய சிவஞான அடிக ளார் கழைக்கூத்தாடியின் கூத்தைப் பார்த்து வியந்து அள்ளியிறைத்த பொற்காசுகளைப் போல விளங்குகின்றன. இவ்வாறு ஒரு வேடிக்கை நிக ழிடமாக எனக்குக் கற்பனை தோன்றுகிறது. இவ்வாறு கொள்ளுதல் நன்ருக வுள்ளதா?" என்ருர்.

சிவப்பிரகாச அடிகளாரின் செய்தியைக் கேட்ட அன்பரும் சிவஞான பாலைய அடிகளும் அவருடைய கற்பனை நயத்தை வியந்து புகழ்ந்தார் கள். இடத்திற்குத் தக்க எண்ணங்கள் இவ்வாறு உண்டாகுதல் எல்லோருக்கும் அமையாதன்ரே?

கடன்முரச மார்ப்பக் கதிர்க்கபிற்ருல் எறி
அடைமதிவின் கழைநின் ருடக்—கொடைமருவும்
எங்கள் சிவஞான வேந்தல் இறைத்தமணி
தங்கியவே தாரகைகள் தாம்.

(அ - ரை.) ஆர்ப்ப - ஆரவாரிக்க. விண் கழை - வானுகிய மூங்கில். தாரகைகள் - உடுக்கள்.

## 6. கல்லானை கடலை தின்றது

கடவுள் உண்டென்று சொல்லுகிறவர்களும் இல்லையென்று சொல்லுகிறவர்களும், இவ்வுலகந் தோன்றிய நாள் தொட்டே இருந்துகொண்டுதானிருக்கிறார்கள். கடவுள் இல்லையென்று சொற்போர் செய்பவர்கள், ஏதேனும் செயற்கருஞ் செயல்களைக் கண்கூடாகக் கண்டால்தான் கடவுளின் உண்மையை ஒப்புக்கொள்வார்கள். எத்தனையோ பெரியார்கள் இவ்வுலகில் தோன்றிக் கடவுளுண்மையைப் பலவகையாக உலகிற்கு விளக்கிக் காட்டியிருக்கிறார்கள்.

'ஞானக் கூத்த சிவப்பிரகாச தேசிகர்' என்னும் பெரியார் திருவருட் செல்வம் நிறைந்தவர். வியத்தகும் செயல்கள் செய்யும் ஆற்றல் அமைந்தவர். அவர் ஒரு காலத்தில் திருச்செங்கோடு என்னும் ஊருக்குச் சென்றார். தேசிகர் சைவ சித்தாந்த மெய்யறிவுச் செல்வர். யாண்டுச் செல்லினும் சிவிகையில்தான் செல்வார். அவ்வழக்கப்படியே திருச்செங்கோட்டுத் திருவீதியிலுஞ் சென்றார்.

அங்கே கேதாரி ஐயர் என்று பெயருடைய ஓர் அந்தணர் இருந்தார். அவர் கல்வி கேள்விகளிற் சிறந்தவர். அவருக்கு மாணவர்கள் பலர் இருந்தனர். அவர்கள் கல்வியறிவு நிரம்பப் பெறாதவர்கள்; மிகுந்த செருக்குடையவர்கள். அவர்கள் அங்குச் சிவிகையில் வந்த ஞானக்கூத்தரைக் கண்டு பொறாமை கொண்டார்கள். அவர்கள் தேசிகரைப் பார்த்து, "நீவிர் இந்தப் பார்ப்பனத் தெருவிலே

சிவிகையில் செல்லுதல் கூடாது. இறங்கி நடந்து தான் செல்லுதல் வேண்டும். சிவிகையிற் செல்வது எம்முடைய ஆசிரியரையும் எம்மையும் இழிவுபடுத்துவதாகும்" என்று கூறிச் சிவிகையிற் செல்லாவண்ணந் தடைசெய்தனர்.

தேசிகருடைய மாணவர்கள் தங்கள் ஆசிரியரின் பெருமையைப் பலவாறு எடுத்துக் கூறி, 'எங்களுடைய ஆசிரியர் சிவிகையில் செல்வது தக்கதே' என்றனர். அம்மாணவர்கள் 'அவ்வாறு உங்கள் ஆசிரியரிடத்திலே அருட்டன்மை உள்ள தென்பீர்களாயின், இங்கே கோவிலின் முன்னுள்ள கல்காளை (நந்தி) யானது கடலையைத் தின்னுமாறு செய்யுங்கள் பார்க்கலாம். அவ்வாறு செய்வீர்களாயின், உங்களுடைய ஆசிரியரின் பெருமையை நாங்கள் ஒப்புக்கொள்ளுகிறோம்' என்று உரைத்ததுடன் ஒரு கூடையில் கடலையையுங் கொண்டுவந்து வைத்தனர்.

சிவப்பிரகாச தேசிகர் சிவிகையை விட்டிறங்கினார். இறைவனை வணங்கினார். இறைவனைப் பார்த்து, 'ஒளி தங்கிய அம்பலத்தின்கண் எழுந்தருளிய இறைவனே! நீ அந்தக காலத்தில் திருவாலவாயின்கண்ணே எல்லாம் வல்ல சித்தராகக் கல்லானைக்குக் கரும்பருத்தியது உண்மையானால், உன் முன் இருக்கும் இந்தக் கல் காளையானது உயிர் கொண்டெழுந்து, கடலையைக் கொண்டுவந்து வைத்த இவர்கள் முன்பாகவே தின்னுமாறு செய்வாயாக' என்று கூறினார். தம்முடைய கையினால் திருவெண்ணீற்றையும் எடுத்து நந்தியின் நெற்றியிலே இட்டார்.

அவ்வளவில் அக் கல்காளையானது ஆரவாரஞ் செய்துகொண்டு எழுந்தது. கூடையிலிருந்த கடலை முழுமையையும் ஒரு நொடியில் தின்று தீர்த்துவிட்டுப் பழமைபோல் படுத்துவிட்டது. அச் செயற்கருஞ் செயல் எல்லோரையும் வியப்புக் கடலில் அமிழ்த்திவிட்டது. நிகழ்ந்த நிகழ்ச்சி கனவோ நினைவோ என்று ஐயங்கூட அவர்களுக்கு உண்டாகிவிட்டது. கடலைக் கூடை காலியாயிருப்பதைக் கொண்டு நிகழ்ந்த நிகழ்ச்சி உண்மைதான் என்று தெளிந்து துணிந்தார்கள். செயற்கருஞ் செயல் செய்த பெரியாரின் பேராற்றலை எண்ணிப் பெரிதும் வியந்தார்கள். விழுந்து விழுந்து வணங்கிப் பெரியாரைத் தொழுதார்கள். சிலர் விரைந்தோடித் தம்முடைய ஆசிரியராகிய கேதாரி ஐயரிடம் நிகழ்ந்ததைத் தெரிவித்தார்கள்.

கேதாரி ஐயர் விரைந்தோடிவந்தார். தேசிகரைக் கண்டு பணிந்து தொழுதார். தம்முடைய மாணவர்கள் செய்த குற்றத்தினைப் பொறுத்தருள வேண்டுமென்று மிகவும் இரங்கிக் கேட்டுக்கொண்டார். பின்னர்த் தேசிகர், அங்கு எழுந்தருளியுள்ள மாதொருபாகனைப் பணிந்து வணங்கிக்கொண்டு தம் நோக்கப்படி சென்றார்.

வில்லார் மணிச்சபையின் வித்தகா கூடலின்முன்
கல்லானைக் கிக்கருத்திக் காட்டியவுன் - வல்லாண்மை
கட்டுரையே யாகிலிந்தக் கல்லே றெழீஇக்கடலை
இட்டவிவர் முன்தினச்செய் யே.

(அ - ரை) வில் - ஒளி. மணிச்சபை - அழகிய சபை. கூடல் - மதுரை. இக்கு - கரும்பு. கட்டுரை - உறுதிமொழி. கல் ஏறு - கல் காளை. எழீஇ - எழுந்து.

# 7. தம்பிரான்களும் சாப்பாடும்

சிவஞான முனிவர் திருவாவடுதுறை ஆதீனத்திற்கு வந்து சேர்ந்ததும், அவ்வாதீனத்துத் தம்பிரான்களோடு கல்வி பயின்றுகொண்டிருந்தார். பெரும்பாலும் ஆதீனங்களில் புதிதாக வருபவர்களுக்குச் சிறிது மட்டமான சாப்பாட்டையே போடுவார்கள். தம்பிரான்கள் கல்வி கற்று நன்னிலையடைந்து சிறந்தால்தான் மிகவும் நன்மையான நிலைமையில் பலரும் போற்றும்படியாக இருக்கலாம். திடீரென எவருமே உயர்ந்த நிலைமைக்குப் போய்விட முடியாதல்லவா?

ஒருநாள் சிவஞான முனிவரும் அவருடன் கூடப் பயிலும் மற்றையோரும் பந்தியில் உணவுக்கமர்ந்தனர். அன்று சமைக்கப்பட்டிருந்த சோறு கொழியல் அரிசிச் சோறாக இருந்தது. அதுவும் நன்கு சமைக்கப் பெறாமல் குழைவாகவும் கட்டியாகவும் ஆக்கப்பெற்றிருந்தது. அச்சோறு சிவஞான முனிவருக்கும் அவருடைய தோழர்களுக்கும் படைக்கப்பட்டது. பந்தியின் முன்பகுதியில் அமர்ந்திருந்தவர்களுக்கோ நல்ல உயரிய உணவாகப் படைக்கப்பட்டது. ஆகவே, அவர்கள் ஒரே வீச்சாக வீசிக்கொண்டிருந்தனர்.

சிவஞான முனிவருக்கும் அவருடைய தோழர்களுக்கும் சாப்பிடவே முடியவில்லை. சோற்றைக் கையில் அள்ளுவதும் வாயிடம் கொண்டுபோவதும் பிறகு இலையிலேயே போட்டுவிடுவதும், முன் பகு

தியில் நன்ருகச் சாப்பிட்டுக்கொண் டிருப்பவர் களைப் பார்த்துக்கொண் டிருப்பதும் இப்படியாகப் பொழுதைப் போக்கிக்கொண் டிருந்தனர்.

ஒருவர் மற்றவரைப் பார்த்து, 'இந்தக் கொழி யல் அரிசியை இவ்வாறு பொங்கியது யார்?' என்று கேட்டார். அதற்கு மற்ருெருவர், 'யாரோ ஒரு கொங்குநாட்டான் வந்து சமைக்கிருன்' என் ருர். உடனே மற்ருெருவர், கொங்கன் வந்து பொங்கிஞன் கொழியரிசிச் சோற்றினை,' என்ருர். அவருக்கு அடுத்தபடியாக இருந்த வேருெருவர், 'தம்பிரான்கள் எல்லோருங்கூடிச் சாப்பிடத் தொடங்கிஞர்கள்' என்ருர். அவருக்கு அடுத்த படியாக இருந்த இன்னொருவர், 'அங்கும் இங்கும் பார்க்கிறீர்களே; உண்பதில் கருத்தில்லையா?' என்று கேட்டார். எல்லோருக்கும் இறுதியில் இருந்த சிவஞான முனிவர், 'என்ன செய்வது? நல்ல உணவை உண்பதற்கு நல்வினையைச் செய்திருந்தால்தானே. நாம் செய்த தீவினைக்கு ஏற்ற படியாகத்தான் இந்த உணவு வந்திருக் கிறது' என்ருர். எல்லோரும் பேசிக்கொண்ட வைகளைச் சேர்த்துப் பார்த்தபோது ஒரு செய்யு ளாக முடிந்தது. அச்செய்யுள் ஆதீனத் தலை வருடைய காதுகளுக்கும் எட்டியது. ஆதீனத் தலைவர் பிறகு நன்கு கருத்தூன்றித் தம்பிரான் கள் அவ்வாறு சாப்பிடுவதற்குத் தொல்லைப்படா மல் ஏற்பாடு செய்தார். அச்செய்தி நீண்டகால மாக வழங்கிவருகிறது.

கொங்கன்வந்து பொங்கினன் கொழியரிசிச் சோற்றினை
சங்கமங்கள் கூடியே சாப்பிடத் தொடங்கின
அங்குமிங்கும் பார்க்கிறீர் அமுதினிற்கண் இல்லையே
எங்கள்பாவம் எங்கள்பாவம் எங்கள்பாவம் ஈசனே.

(அ - ரை) கொங்கன் - கொங்குநாட்டான். சங்கமங்கள் துறவிகள். அமுது - உணவு.

---

## 8. உரைநடைப் பாட்டு

முருகதாசர் என்றும் தண்டபாணி அடிகள் என்றும் பெயர்களை உடைய பெரியார் ஒருநாள் வேம்பத்தூர் என்னும் ஊருக்குச் சென்றார். அப்போது அந்த ஊரிலே பிச்சுவையர் என்று பெயருடைய ஓர் ஐயர் இருந்தார். அவ்வையர் செய்யுள்களை விரைவாகவும் அழகாகவும் பாடுவதில் மிகவும் வல்லவர். அவருடைய பேச்சுக்களெல்லாமே பாட்டாகத்தான் இருக்கும்.

தண்டபாணியடிகளும் செய்யுள் செய்வதிலே தந்நிகரற்றவர். அவருடைய பாடல்களெல்லாம் இனிய ஒலி நயம் அமைந்த வண்ணப்பாக்களாகத் தான் இருக்கும். இரு பேரறிஞர்கள் எதிர்ப்பட்டுக் கொண்டால் கேட்கவும் வேண்டுமா ?

பிச்சுவையர் தண்டபாணியடிகளைப் பார்த்து, ‘நிலவுலகில் எங்கும் புகழ்ந்து பேசப் பெறுகிற முருகதாசரெனும் அடிகட்கு உணவு கொள்ளுதல் எவ்விடத்திலோ ?’ என்று செய்யுளாகவே இரண்டடியில் கேட்டார். முருகதாச அடிகள், “செந்தமிழ்ப் பயிற்சி வன்மையும் திருமுருகப்பெருமான்

அடிமலரிடத்திலே மிகுந்த அன்பும் உடையவர்களுடைய இல்லத்திலேதான்'' என்று தாம் பிச்சுவையர் தொடங்கிய பாட்டை நிரப்பி மூன்ருவது நான்காவது அடிகளால் விடையளித்தார்.

இரண்டு அறிஞர்களும் அவ்வாறு பாட்டாகவே சொல்லாடிக்கொண்டதைக் கண்ட அன்பர்கள் களிபேருவகை யடைந்தனர். அறிவின் பயன் அறிவுடையாரிடத்தில் நன்கு சிறந்து விளங்குமென்பதை உலகம் அவர்கள் இருவர்பாலும் அன்று நன் குணர்ந்து தெளிந்தது.

பூமிதனில் எங்கும் புகழ்முருக தாசரெனும்
சாமிக்கு நைவேதன மெங்கே - தேமிக்க
செந்தமிழின் சீருந் திருக்கைவேல் ஏந்திவரும்
கந்தனன்பும் உள்ளமனைக் கண்.

(அ - ரை.) நைவேதனம் - உணவு. தேமிக்க - நன்மை மிகுந்த.

---

## 9. கத்தரிக்காய் லிங்கம்

முன்னாளில் வசவதேவர் என்னும் பெயரினையுடைய ஒரு பெரியார் இருந்தார். அவர் இறைவன் கூருக உலகில் தோன்றியவர். செயற்கருஞ் செயல் செய்யத் தக்க சீரிய மாண்பு செறிந்தவர். அவர் இறைவனுடைய அடிமலரிடத்தும், அடியார்களிடத்தும் அளவிடற்கரிய அன்புடையவர். நாள் தோறும் அடியார்களுக்குப் பூசனைபுரிந்து உணவு செய்விப்பவர்.

அவ்வசவரிடத்திலே இருந்த பொருளைக் களவாடவேண்டுமென்று சில கள்ளர்கள் எண்ணினர். அதற்குத் தக்க சமயத்தை எதிர்பார்த்திருந்தனர். அடியார்கள் உணவின்பொருட்டு வசவருடைய வீட்டிற்குச் செல்லும்போது தாங்களும் அவர்களுடன் உட்புகுந்து தக்க வேளைபார்த்து அகப்பட்டதைச் சுருட்டிக்கொண்டு வெளியேறிவிட வேண்டுமென்று முடிவுசெய்தனர்.

வசவருடைய வீட்டிற்கு உணவுக்குச் செல்லும் அடியார்கள் வீரசைவர்கள். ஒவ்வொருவரும் கழுத்திலே இலிங்கம் கட்டியிருப்பார்கள். களவாட முடிவுசெய்த கள்ளர்கள், கழுத்திலே இலிங்கம் கட்டியிருந்தால்தானே வசவருடைய வீட்டிற்குட் செல்லமுடியும். இலிங்கத்திற்கு யாது செய்வதென்று எண்ணமிட்டார்கள். அவர்களுக்கு ஒரு நல்ல வழி தோன்றிற்று. கத்தரிக்காயின் மேலே துணியைச் சுற்றி அவற்றைத் தம்முடைய கழுத்திலே கட்டித் தொங்கவிட்டுக்கொண்டனர். அது பார்வைக்கு இலிங்கம் கட்டிக்கொண்டிருப்பதைப் போலக் காணப்பட்டது.

வீரசைவ அடியார்கள் உணவின்பொருட்டு வசவருடைய வீட்டிற்குள் சென்றபோது, கத்தரிக்காய் இலிங்கம் கட்டிய கள்ளர்களும் உள்ளே நுழைந்தனர். கத்தரிக்காய் இலிங்கம் கட்டியவர்கள்மீது வசவருடைய அடியார்களுக்கு ஐய மேற்பட்டது. அவர்களைப் பந்தியில் அமரச்செய்து பூசனை புரியுமாறு கூறினர். கள்ளர்கள் ஒன்றுஞ் செய்யத் தெரியாமல் மிரள மிரள விழித்தனர்.

ஒவ்வொருவருக்கும் அச்சமும் நடுக்கமும் உண்டாகி விட்டது. நாம் இன்று இங்கு அகப்பட்டுக்கொண்டோம். இனி உயிரோடு மீள்வதே ஐயந்தான் என்று ஏங்கி ஒவ்வொருவரும் வருந்தினர்.

கள்ளர்களுடைய போக்கைக் கண்ட வசவருடைய அடியார்கள் அவர்களைத் தாக்கத் தொடங்கினர். வசவதேவர் உடனே தம் அடியார்களைத் தடுத்துக் கள்ளரைத் தாக்காதவாறு செய்தார். அவர்களும் உண்மையான அடியார்கள்தாம் என்று தம்மடியார்கட்குக் கூறினர். இறைவனை உள்ளத்தின்கண்ணே நினைத்துப் போற்றினர். கத்தரிக்காயை இலிங்கமாகக் கட்டிக்கொண்டு வந்திருந்த அத்தனைக் கள்ளர்களும் உண்மையான அடியார்களாக மாறிவிட்டனர். அவர்கள் கழுத்தில் கட்டியிருந்த கத்தரிக்காய்களும் உண்மையான சிவலிங்கங்களாக மாறிவிட்டன. அனைவரும் வசவதேவருடைய பெருமையைப் பெரிதும் போற்றினார்கள்.

வெள்ளவேணிப் பெருந்தகைக் குயாருஞ்செய் யடிமை
மெய்யாகக்
கள்ளவேடம் புனைந்திருந்த கள்வரெல்லாம் களங்கமறும்
உள்ளமோடு மெய்யடியா ராகவுள்ளத் துள்ளுமருள்
வள்ளலாகும் வசவேசன் மலர்த்தாள் தலையால்
வணங்குவாம்.

(அ - ரை.) வெள்ளவேணிப் பெருந்தகை - இறைவன். கள்ளவேடம் - பொய்க்கோலம். களங்கம் - குற்றம். உள்ளும் - நினைக்கும்.

# 10. பரிசுப் பாட்டு.

சிவஞான முனிவர் பல சிவப்பதிகளுக்குஞ் சென்று இறைவனை வழிபட்டுக்கொண்டிருந்தார் ஒருகால் திருப்பாதிரிப்புலியூருக்குச் சென்றார். அங்கு அப்பொழுது அறிஞர்கள் பலருஞ் சேர்ந்து நூலாராய்ச்சி செய்யும் அரங்கம் ஒன்று இருந்தது. அவ்வூரில் இருந்த ஒரு செல்வர் பொருட் செல்வத்தோடு அறிவுச் செல்வமும் அமைந்தவர். அவர், 'கரையேற விட்டமுதல் வாஉன்னை யன்றியுமோர் கதியுண்டாமோ' என்னும் செய்யுளின் இறுதியடியொன்றை எழுதி, மற்றைய மூன்று அடிகளையும் பாடிப் பாட்டை முடிப்பவர்களுக்கு அளிப்பதாகப் பொன் முடிப்பு ஒன்றையும் முடிந்து அறிஞர்களுடைய அரங்கத்திலே கொண்டுவந்து கட்டித் தொங்கவிட்டார்.

அப்பாட்டின் முதல் இரண்டாவது மூன்றாவது அடிகளையும் பாடி முடித்து, அப்பொன் முடிப்பினைத் தாங்கள் அடைவதற்குப் பலரும் முயன்றனர். ஒவ்வொருவருந் தத்தமக்கியன்றவாறு பாடி அச் செல்வரிடங் கொண்டுபோய்க் கொடுத்தனர். அவைகளில் எதுவும் பொற்கிழி கட்டிய செல்வருடைய உள்ளத்திற்குப் பொருத்தமானதாக வில்லை. ஆகவே, பொற்கிழி அப்படியே தொங்கிக்கொண்டிருந்தது.

அவ்வூரிலே ஓர் ஏழைப் பார்ப்பான் இருந்தான். அவன் திருமணமும் ஆகாதவன். எவ்வகையேனும் அந்தப் பரிசினைப் பெற்றால் திருமணத்தை

இனிது முடித்துக்கொண்டு நலமடையலாம் என்று எண்ணினன். பாட்டை முடிவுசெய்து யாரேனுந் தன்னிடம் கொடுத்துவிடுவார்களா என்று எண்ண மிட்டான். சிவஞான முனிவருடைய கல்விப் பெரு மையையுந் தண்ணளியையுஞ் சிலர் அவனுக்குக் கூறினர்கள். அவன் சிவஞானமுனிவரையடைந்து, அச்செய்யுளை முடிவுசெய்து தனக்களிக்கவேண்டு மென்று வேண்டிக்கொண்டான்.

இயற்கையில் சிவஞான முனிவர் யாவர் மாட் டுந் தண்ணளிமிக்கா ராதலின், அப்பார்ப்பனன் வேண்டுகோட்படியே அப்பாட்டை நிறைவுசெய்து கொடுத்தார். பார்ப்பனன் அப்பாட்டைக கொண்டு சென்று பொற்கிழி கட்டிய செல்வரிடங் கொடுத் தான். அச் செல்வர் அப்பாட்டைப் படித்துப் பார்த்தார். அஃது அவருடைய உள்ளத்திற்கு மிகுந்த மகிழ்ச்சியை உண்டாககிற்று. உடனே பொற்கிழியை அப்பாட்டுக்குரியவர் அடையவேண்டு மென்று முடிவுசெய்தார். பார்ப்பனனும் பொற் கிழிபெற்று நலமடைந்தான்.

வரையேல் தவிட்டமுதம் சேந்தனிட
உண்டனைவல் லினமென் றுலும்
உரையேற விட்டமுதல் ஆகுமோ
எனைச்சித்தெேன் றுரைக்கி லென்னும்
நரையேறு அவிட்டமுதல் நாளவனைக்
கொண்டுநறும் புலிசை மேவும்
கரையேற விட்டமுதல் வாவுன்னை
அன்றியுமோர் கதியுண் டாமோ.

(அ - ரை) வரையேல் - நீக்காதே, வல்லினம் என்றாலும்; ட ற எழுத்துக்கள் வல்லினமாக இருந்தாலும், றவ்வும் டவ்வும் முதல் ஆகுமோ - மொழிக்கு முன்னை வருமோ, ஏறையேறு - வெள்ளிய காளை, அவிட்ட முதல்நாள் அவன் - திருமால். புலிசை- திருப்பாதிரிப்புலியூர்.

---

## 11. கயவன் பாடல்பெற்ற கதை.

தென்னாட்டிலே ஓர் ஊரிலே ஏறத்தாழ ஐம்பதாண்டுகளுக்கு முன்னே சின்ன பிள்ளை என்ற பெயருடைய ஒரு கயவன் இருந்தான். கயவன் என்றால் சின்ன பிள்ளை என்னும் பெயருக்கேற்ப, சின்ன கயவன் அல்லன். சின்னத்தனமான காரியங்களைப் புரிவதில் பெரிய கயவன். எப்பொழுது பார்ப்பினும் தில்லுமல்லும் குறும்புஞ் செய்வதிலேயே தன்னுடைய பொழுதைப் போககுவான்.

அந்தச் சின்னபிள்ளைக்கு நல்லவர்கள் கெட்டவர்கள் என்ற மாறுபாடே இல்லை. நல்லவர்கள் கெட்டவர்கள் எல்லோரிடத்தினும் ஒரே தன்மையாகத்தான் பொல்லாத காரியங்களைப் புரிவான். 'துர்ச்சனருக் கங்கமுழுதும் விடமேயாம்' என்பது அவன் காரியத்தில் நன்றாகப் பொருந்தியிருந்தது. நல்லவர்கள் அவனைக் கண்டால், 'வம்புசெறி.தீங்கினரைக் கண்டால் அவர்தம் கண்ணுக்குத் தெரியாத தூரம் நீங்குவதே நல்லநெறி' என்று கூறி மறைந்து சென்றுவிடுவார்கள்.

ஏழையெளியவர்களே யல்லாமல், செல்வர்கள் கூட சின்ன பிள்ளைக்குப் பெரிதும் அஞ்சுவார்

கள். ஏனெனில் அந்தச் சின்ன பிள்ளையும் சிறிது பொருளுடையவன்; யாருக்குந் தீமை செய்வதற்குப் பின்வாங்காதவன். யாரேனும் புலவர்களைச் சின்ன பிள்ளை கண்டுவிட்டால் தன்மீது புகழ்ப் பாடல் பாடவேண்டுமென்று தொல்லைசெய்வான். ஏதாவது பாடினால்தான் விடுவான். பாட மறுத்தால் தண்டுகொண்டு சாடிவிடுவான். ஆகவே, புலவர்கள்கூடச் சின்ன பிள்ளையின் ஊருக்குச் செல்லமாட்டார்கள்.

அந்தச் சின்ன பிள்ளையினுடைய காலத்திலே பிச்சுவையர் என்னும் பெயரையுடைய ஒரு பார்ப்பனார் இருந்தார். அவர் கல்வியறிவு மிகக வர். விரைந்து பாடல் பாடுவதில் மிகவும் வல்லவர். சூழ்ச்சித் திறனும் நன்கமைந்தவர். அவர் ஏதோ ஓர் அலுவலை முன்னிட்டுச் சின்ன பிள்ளையின் ஊருக்குச் சென்றார்.

பிச்சுவையரைக் கண்ட சின்ன பிள்ளை பெரிதும் மகிழ்ச்சியடைந்து மடக்கிக்கொண்டான். தன்மீது ஒரு பாட்டைப் பாடிவிட்டுத்தான் செல்ல வேண்டுமென்று கட்டளையிட்டான். பாட மறுத்தால் சின்ன பிள்ளையிடம் பூசைபெற நேரிடும் என்பது பிச்சுவையருக்கு நன்கு தெரியும். ஆகவே, அவர் சின்ன பிள்ளையை ஏமாற்றி இகழ்ந்து பாடுதல் வேண்டுமென்று முடிவுசெய்துகொண்டார்.

சின்ன பிள்ளை பெரிய அறிவிலி. கல்வியறிவைப் பற்றி அவனுக் கொன்றும் தெரியாது. ஆகவே பிச்சுவையர் பாடத் தொடங்கினர். வாலேயம் என்றால் கழுதை. ஞாளி என்றால் நாய். அரவு

என்றால் பாம்பு. வாலேபம், ஞாளி, அரவு முதலிய சொற்களை யெடுத்துக்கொண்டார்.

'திருமாலால் படைக்கப்பட்டவனும், தாமரை மலரில் எழுந்தருளியவனுமாகிய நான்முகன், வாலேபத்தையும், வாலெடுக்கும் ஞாளியையும், ஆலாலத்தைக் கொண்ட அரவையும், சீலமற்ற பேயையும் ஒன்றாகச் சேர்த்துச் சின்ன பிள்ளைய வாளைப் படைத்தான்' என்று ஒரு வெண்பாப் பாடினார்.

அப்பாட்டிலே, 'சின்னபிள்ளையவாளை' என்று பாடப்பட்டிருப்பதைக் கேட்டதும் சின்னபிள்ளைக்குப் புகழ்ச்சியாகப் பாடப்பட்டிருப்பதாக அளவுகடந்த மகிழ்ச்சியுண்டாகிவிட்டது. அப்பொழுது அவன் தன்னுடைய கழுத்திலே பொற் சங்கிலி ஒன்றை யணிந்திருந்தான். இகழ்ச்சியை யறியாமல் நெகிழ்ச்சியடைந்த அவன், உடனே மகிழ்ச்சியால் அச்சங்கிலியைப் பிச்சுவையருடைய கழுத்திலே யெடுத்துப்போட்டு அவரைப் பாராட்டினன். ஐயர் அவனிடமிருந்து விரைவாக விடைபெற்றுக் கொண்டு நழுவிவிட்டார்.

வாலேப மானதையும் வாலெடுக்கும் ஞாளியையும்
ஆலாலங் கொண்ட அரவினையும் - சீலமிலாப்
பேயினையுங் கொண்டுசின்ன பிள்ளையவா ளைப்படைத்தான்
மாயனரு ளுங்கமல மன்.

(அ - ரை) வாலேபம் - கழுதை, ஞாளி - நாய். ஆலாலம்-நஞ்சு, அரவு - பாம்பு, சீலம் - நன்னடத்தை, மாயன் - திருமால் கமலன் - நான்முகன்.

———

## 12. நான்முகன் தயக்கம்.

படைப்புத் தொழிலைச் செய்பவனாகிய நான்முகன், ஒருநாள் சிவபெருமானை வணங்கும் பொருட்டுக் கைலாயமலையை அடைந்தான். அப்பொழுது சிவபெருமான் ஏதோ ஓர் இன்றியமையாத காரியத்தில் ஈடுபட்டிருந்தார். தேவர்களும் சிவபெருமானை வணங்கும் பொருட்டுப் பெருங்கூட்டமாகக் கூடியிருந்தார்கள். ஆகவே, இறைவனை வணங்குவதற்கு அப்பொழுது இயலாதென்பதை யுணர்ந்த நான்முகன் திரும்பினான். தன்னுடைய ஊர்தியாகிய அன்னப்பறவையை நிறுத்தியிருந்த இடத்திற்குத் திரும்பினான். அப்பொழுது அன்னப்பறவை அசைவற்று உறங்கிக்கொண்டிருந்தது.

கைலைமலையின் நிறம் வெண்மையல்லவா? அம்மலையைப்போல் மிக வெண்ணிறமுடைய பொருள்கள் இயங்கினால்தான் வேறுபாடறியலாம். இயங்காமல் அசைவற்றிருந்தால் வேறுபா டறியமுடியாது. அன்னப்பறவையானது அசையாமல் உறங்கிக் கொண்டிருந்தபடியால் அஃது அங்குத்தானே இருப்பதும் நான்முகனுக்குத் தெரியவில்லை. அசையாமல் உறங்கிக் கொண்டிருந்தால் எவ்வாறு தெரியும்? துறைமங்கலம் சிவப்பிரகாசஅடிகள்கூடத் தம்முடைய பிரபுலிங்கலீலை என்னும் நூலிலே கைலைமலையின் ஒளியைப்பற்றிக் கூறும்போது, 'மலர்மிசைக் கடவுளூர்தி, அழகுறு நடையாலன்றிஅறிதரப் படாவக்குன்றில்' என்று பாடியிருக்கிறார் அல்லவா? ஆகவே, திரும்பிவந்த நான்முகன்,

இறைவனைத்தான் கண்டுபோற்றி வழிபடமுடிய வில்லையென்றால்,திரும்பிப் போவதற்குத் தடையாக நம்முடைய ஊர்தியாகிய அன்னத்தைக்கூடக் காணோமென்று, தன் அன்னப்பறவை நின்று கொண்டிருந்த இடத்தில்தானே தானும் நின்று வருந்தினான்.

நாய கன்கழல் சேவிக்க நான்முகன்
மேய காலம லாமையின் மீண்டவன்
தூய மால்வரைச் சோதியின் மூழ்கிபொன் (று)
ஆய வன்னமுங் காண தயர்க்குமால்.

(அ - ரை) நாயகன்-இறைவன். சேவிக்க-வணங்க. தூய-தூய்மையாகிய. மால்வரை - பெரியமலை. அயர்க்கும் - வருந்தும்.

---

## 13 கருடன் கலக்கம்

ஒருநாள் கருடனென்பவன் கைலைமலைக்கு மேலே விண்ணிற் பறந்துகொண்டிருந்தான். மலையின் அடியிலே ஆனைமுகக் கடவுளுடைய ஊர்தியாகிய பெருச்சாளி தன் இயல்புப்படி வளைபறித்துக் கொண்டிருந்தது. வெள்ளிமலை தன் ஒளியை விண் முழுவதும் பரப்பிக்கொண்டிருந்தது.

ஒளிவடிவான மலையையும் அதன் கீழே பெருச்சாளியையுங் கண்ட கருடனுக்கு ஐயமுண்டாகிவிட்டது. விண்ணிலிருந்து பார்த்த கருடனுக்குக் கீழே வளைபறிப்பது பெருச்சாளி என்பது தெரியவில்லை. பன்றி யென்று தவறாக நினைத்துக்கொண்டான்.

அக்காலத்தில் செவ்வொளியான வடிவுடன் தீமலையாகத் தோன்றிய சிவபெருமான் இன்று வெண்மையான ஒளியுடன் கூடிய மலையாகத் தோன்றிவிட்டாரோ; திருமால்தான் அக்காலத்தைப்போல இக்காலத்திலும் அடியைக் காண்பதற்கு நிலத்தைத் தோண்டிக்கொண்டு செல்கின்றாரோ வென்று எண்ணமிட்டான். ஐயமறத் தெரிந்துகொள்வதற்காக நிலத்திலிறங்கிப் பெருச்சாளியை நெருங்கிப்பார்த்தான். அப்பொழுது தான் கருடனுக்கு உண்மை தெரிந்தது. தான் தவறாக எண்ணிக்கொண்டு இறங்கியதைப் பற்றி நாணமடைந்தான்.

காதில்வெண் குழையோன் கழல்தொழ நெடியோன்
காலம்பார்த் திருந்ததும் அறியான்,
சோதிவெண் கயிலைத் தாழ்வரை முழையில்
துதிக்கையோன் ஊர்தியைக் கண்டு,
மீதெழும் பண்டைச் செஞ்சுடர் இன்று
வெண்சுடர் ஆனதென் றதன்கீழ்
ஆதியே னமதா யிடக்கலுற் றனனென்
றதனைவந் தணைதருங் கலுழன்.

(அ-ரை) காதில் வெண்குழையோன்—சிவன். நெடியோன்-திருமால். முழை-மலைக்குகை. துதிக்கையோன்-ஆனைமுகக் கடவுள். மீது-மேலே. ஆதி ஏனமதா-முற்காலத்தில் தோன்றிய பன்றிவடிவாக. இடக்கல்-தோண்டுதல்.

## 14. காவலனும் பாவலனும்.

தாமப்பல் கண்ணனார் என்பவர் பெரும் புலவர். பார்ப்பன குலத்தில் தோன்றியவர். அப்புலவரும் சோழன் நலங்கிள்ளி என்னும் மன்னவனுடைய இளவலாகிய மாவளத்தான் என்பவனும் ஒருநாள் சூது விளையாடிக்கொண் டிருந்தனர். புலவர் சூதின் கண்ணை ஒரு சூது செய்தார். எதிர்பாராவாறு அதை மாவளத்தான் கண்டுவிட்டான். அவனுக்கு எப்பொழுதும் முன் சினம் உண்டாவது வழக்கம். அன்றும் அப்படியே உண்டாயிற்று. சூதாடு கருவியினைப் புலவர் நெற்றியின்மீது ஓங்கியடித்தான். அக்கருவி புலவர் நெற்றியைக் காயப்படுத்திற்று. காயத்தினின்றும் குருதியானது ஆறுகப் பெருகிற்று. அவ்வளவில் புலவருக்கும் பெருஞ் சினம் உண்டாகிவிட்டது. அவர் மாவளத்தானைப் பார்த்து,

"ஓ மாவளத்தானே, உன்னுடைய முன்னோர்களனைவரும் மிகவும் சிறந்தவர்கள். அவர்கள் உலகத்தாருடைய துன்பத்தைத் தீர்க்கும்பொருட்டு மிகுந்த தொல்லையை அடைந்தார்கள். அருந்தவ முனிவரும் பெருந்திகைப்படையுமாறு பல வியத்தகு காரியங்களைப் புரிந்தார்கள். உன் மரபில் தோன்றிய சிபி என்னும் அரசன் பருந்தினது தொல்லைக்கு அஞ்சித் தன்னை வந்தடைந்த சிறிய நடையினையுடைய ஒரு புறாவின் இறப்பிற்கு மிகவும் அஞ்சினனே தவிர, தன்னுடைய அழிவுக்குச் சிறிதும் அஞ்சினன் இல்லை. தன்னழிவுக்கு அஞ்சா

மேலே நிறைகோலின்கண் ஏறினன். அத்தகைய சிறந்த வழியில் தோன்றிய நீ இவ்வாறு என்னை இந்தச் சூதாடு கருவியினலே தாக்கி வருத்தினய். ஆத்திமாலையை அணிந்த நின் வழியினுள்ளோர்கள் பார்ப்பார்கள் வருந்தும்படியான காரியத்தைச் செய்யமாட்டார்கள். நீயோ என்னை இவ்வாறு வருத்தினய். ஆகவே, நான் உன்னுடைய பிறப்பைக் குறித்து ஐயப்படுகிறேன்'' என்று கூறினர்.

புலவர் உரையைக் கேட்ட மாவளத்தான் தான் செய்த தவற்றினை யெண்ணி உள்ளம் வருந்தினன். பார்ப்பனரை இவ்வாறு தாக்கினேமே யென்று இரங்கினன். அவனுடைய நிலைமையைக் கண்ட புலவர்சினந் தணிந்தது. தாம் உரைத்த உரையின் போக்கை நினைத்தார். அவருடைய உள்ளம் மிகவும் வருந்தியது. அவர் மாவளத்தானைத் தேற்றத் தொடங்கினர். 'ஓ மாவளத்தானே! நான் சினம் மிகுதியினலே உன்னை இழிவுபடுத்திப் பேசிவிட்டேன். அதன்பொருட்டு நீ என்னை வெறுமற்போனதுடன் நீயே தவறுசெய்தவன் போன்று மிகவும் வருந்துகின்ருய். இவ்வாறு தம்மை இகழ்ந்தவர்களையும் பொறுத்துக்கொள்ளும் உயர்ந்த சிறப்பு, உன் குலத்தின்கண் பிறந்தவர்கட்கல்லது மற்றவர்கட்கு உண்டாகாது. தவறு செய்த நான் உன்னை வாழ்த்துகிறேன். பெருகி வருகிற இனிய நீரையுடைய காவிரியானது கொழித்துப்போட்டுள்ள மணலைப் பார்க்கினும் நின்னுடைய வாணளானது மிகுதிப்பட்டு, நீ இனிமையாக வாழ்வாயாக' என்று கூறி

வாழ்த்தினார். இருவரும் பண்டுபோல் தம்முடைய நட்புமுறைக்குச் சிறிதும் குறைவின்றி மேலும் நண்பர்களாகவே விளங்கினார்கள். ஒவ்வொருவரும் தம்முடைய தவற்றினை யுணர்ந்து வருந்துவார்களாயின், அத்தவற்றிற்கு அவ்வருந்துதலைத் தவிர வேறு தண்டனையும் வேண்டுமோ ?

நிலமிசை வாழ்நர் அலமரல் தீரத்
தெறுகதிர்க் கனலி வெம்மை தாங்கிக்
காலுண வாகச் சுடரொடு கொட்கும்
அவிர்சடை முனிவரு மருளக் கொடுஞ் சிறை
கூருகிர்ப் பருந்தின் ஏறுகுறித் தொரீஇத்
தன்னகம் புக்க குறுநடைப் புறவின்
தபுதி அஞ்சிச் சீரை புக்க
வரையா வீகை யுரவோன் மருக
நேரார்க் கடந்த முரண்மிகு திருவில்
தேர்வண் கிள்ளி தம்பி வார்கோல்
கொடுமர மறவர் பெரும கடுமான்
கைவண் தோன்றல் ஐயம் உடையேன்
ஆர்புனை தெரியல்நின் முன்னோ ரெல்லாம்
பார்ப்பார் நோவன செய்யலர் மற்றிது
நீர்த்தோ நினக்கென வெறுப்பக் கூறி
நின்யான் பிழைத்தது நோவாய் என்னினும்
நீபிழைத் தாய்போல் நனிநா ணினையே
தம்மைப் பிழைத்தோர்ப் பொறுக்குஞ் செம்மல்
இக்குடிப் பிறந்தோர்க் கெண்மை காணுமெனக்
காண்டகு மொய்ம்ப காட்டினை யாகலின்
யானே பிழைத்தனென் சிறக்கநின் னாயுள்
மிக்குவரும் இன்னீர்க் காவிரி
எக்க ரிட்ட மணலினும் பலவே.

(அ - ரை.) அலமரல் - சுழற்சி. கால் - காற்று. கொட்கும் - சூழும். உகிர் - நகம். குறுநடை - சிறிய நடை. தபுதி - அழிவு. சீரை - நிறை கோல். உரவோன் - வலிமை உடையவன். கொடுமரம் - வளைந்த வில். ஆர் - ஆத்தி. தெரியல் - மாலை. காண்தகு மொய்ம்ப - காணத்தக்க வலிமையை உடையவனே. இன்னீர் - இனிய நீர். எக்கரிட்ட - கொழித்திட்ட.

---

## 15. வீரனைப் பெற்ற விளங்கிழை

பண்டைக்காலத்திலே நம் நாடு வீரத்திலும் தீரத்திலும் சிறந்து விளங்கியது. ஆடவர்களேயன்றிப் பெண்டிரும் வீரமாதராய் மிளிர்ந்து நின்றனர். அக்காலத்து ஆண்மக்களும் பெண்மக்களும் 'தேளடிப்பதற்கு வேறு ஆள் தேடு' என்ற நிலையில் இல்லை. ஆடவர்கள் தங்கள்மேல் படும் புண்களைக் கண்டும் பெருங் குருதியைக் கண்டும் சிறிதும் அஞ்சார்கள். பெண்மக்கள் போர்களத்திலே கணவனை யிழப்பினும் மகனை யிழப்பினும் அவ்விழப்புக் குறித்துச் சிறிதும் கலங்கமாட்டார்கள். தாங்களும் வீரமுடன் போர்க்களஞ் சென்று போர்புரியவும் முற்படுவர்.

அந்நாளிலே ஒரு நாள் ஒருமாது தன்னுடைய தோழி ஒருத்தியைக் காணச் சென்றாள். சென்றவள் உட்கார்ந்துகூட உரையாடவில்லை. தூணைப் பிடித்தபடி நின்றுகொண்டே பல செய்திகளைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தாள். இறுதியில், 'உன்னுடைய மகன் எங்கே காணேமே' என்றாள். அதற்கு அம்மாது, 'வீட்டுத்தூணைப் பிடித்துக்

கொண்டு நின்று, உன்னுடைய மகன் எங்கே என்று கேட்கிறாய். அவன் இப்பொழுது யாண்டு ளான் என்பதை யானறியேன். ஆயினும் புலி யானது தங்கிவிட்டுப் போன முழையைப்போல, அவன் தோன்றிப் பத்துத் திங்கள் வரை வளர்ந்து கொண்டிருந்த வயிறு இதுதான். நீ அவனைக் காண வேண்டுமாயின், போர் எங்கு நடக்கிற தென்பதை யறிந்து, ஆண்டுச் சென்று போர்க் களத்திலே தேடு; அவன் போர்க்களங்களிலே காணப்படுகிறதுதான் வழக்கம்' என்று விடை யளித்தாள்.

சிற்றில் நற்றூண் பற்றி நின்று
யாண்டுள னோவென வினவுதி என்மகன்
யாண்டுள னாயினும் அறியே னோரும்
புலிசேர்ந்து போகிய கல்லளை போல
ஈன்ற வயிறோ இதுவே
தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே.

(அ - ரை.) சிற்றில் - சிறிய வீடு. கல்அளை - கல்புழை.

## 16. போரைத் தடுத்த புலவர்

ஒரு காலத்தில் சோழவள நாட்டிலே இரண்டு சோழவரசர்கள் வெவ்வேறு ஊரிலே இருந்து அரசு புரிந்துகொண்டிருந்தார்கள். அவர்களுள் ஒருவன் பெயர் சோழன் நலங்கிள்ளி; மற்றவன் பெயர் நெடுங்கிள்ளி. எக்காரணத்தினாலோ இரு வருக்கும் பகை மூண்டுவிட்டது. ஒருவரை யொரு வர் தொலைப்பதற்குக் காலம்பார்த்துக்கொண் டிருந்தார்கள்.

நலங்கிள்ளியினுடைய படை பெரிது; நெடுங்கிள்ளியினுடைய படை நலங்கிள்ளியினுடைய படையைப் பார்க்கினுஞ் சிறிது. எதிர்பாரா வண்ணம் திடீரென்று சோழன் நலங்கிள்ளி தன்னுடைய படையைத் திரட்டிக்கொண்டு சென்று நெடுங்கிள்ளியினுடைய உறையூரை முற்றுகையிட்டு வளைத்துக்கொண்டான். நெடுங்கிள்ளியோ தனது படை சிறியதாகலின் வெற்றிகொள்வது அரிதென்றுணர்ந்து, கோட்டை வாயில் கதவுகளை அடைத்துக்கொண்டு உள்ளேயே யிருந்தான்.

நாட்கள் பல சென்றன. முற்றுகை நீடியது. உள்ளிருந்தோருடைய உணவுப் பொருள்கள் ஒழிந்தன. அவர்கள் பட்டினியாகக் கிடந்து இறக்கும் நிலை ஏற்பட்டுவிட்டது. சிலர் இறந்தும் விட்டனர். அப்பொழுது கோவூர்க்கிழார் என்னும் புலவர் இருவருடைய நிலைமையையுங் கண்டார். மக்கள் பலர் வீணே அழிந்தொழிவதில் நின்றும் தடுக்கவேண்டுமென்று எண்ணங் கொண்டார். இருவருடைய இடத்திற்குஞ் சென்றார்; இருவரையுங் கண்டார்; இருவரையும் பார்த்து,

"உன்னோடு எதிரியாக இருப்பவன் பனம் பூமாலையை அணிந்த சேரன் அல்லன்; வேம்பினது மாலையை அணிந்த பாண்டியனும் அல்லன். உன்னுடைய மாலையும் ஆத்திப்பூவாற் கட்டப்பெற்றது. உன்னுடைய பகைவனது மாலையும் ஆத்திப்பூவால்தான் கட்டப்பெற்றுள்ளது. ஆதலில் உங்களில் எவர் போர் செய்து தோல்வியை அடைந்தாலும், தோற்பது உங்களுடைய குடியே

யாகும். இரண்டு பேரும் வெற்றி யடைவதென்ப தும் இயலாத காரியம். ஆகவே, இந்தப் போரா னது உங்கள் குடிச்சிறப்புக் கேற்ற ஒரு செய்கை யாகாது. இப்போரானது உங்களை யொத்த பிற அரசர்களுக் கெல்லாம் மிகுந்த உவகையை விளை விக்கும். ஆகவே, இப்போரில் நின்றும் ஒழிவீர்க ளாக''

என்று அறிவுரை புகன்றார். புலவர் கூறிய கூற்றுப் புரவலர் இருவருக்கும் தக்கதாகவே பட்டது. அவர்கள் தமது செற்றந் தணிந்தனர்.

இரும்பனை வெண்தோடு மலைந்தோன் அல்லன்
கருஞ்சினை வேம்பின் தெரியலோன் அல்லன்
நின்ன கண்ணியும் ஆர்மிடைந் தன்றே
நின்னொடு,
பொருவோன் கண்ணியும் ஆர்மிடைந் தன்றே

௫ ஒருவீர் தோற்பினும் தோற்பதுங் குடியே
இருவீர் வேறல் இயற்கையும் அன்றே
அதனால்,
குடிப்பொரு ளன்றுநும் செய்தி கொடித்தேர்
நும்மோ ரன்ன வேந்தர்க்கு
மெய்ம்மலி உவகை செய்யுமிவ் விகலே.

(அ-ரை.) மலைந்தோன் - அணிந்தோன். கருஞ்சினை - கரிய கிளை. தெரியல் - மாலை. கண்ணி - மாலை. ஆர் - ஆத்தி. பொருவோன் - போர் செய்வோன். வேறல் - வெல்லுதல். மெய்ம்மலி - உடம்பு பூரிக்கும்.

## 17. புலவராற் பிழைத்த புரவலன் மக்கள்

முற்கூறிய கோவூர்க்கிழார் தண்ணளிமிக்கா ரென்பது மற்றுமோர் அரிய செய்கையாலும் நன் குணரப்படும்.

கிள்ளிவளவன் என்னும் மன்னனும் மலையமான் என்னும் மன்னனும் பகைவர்களாக இருந்தனர். ஒரு சமயத்திலே மலையமானுடைய இளஞ் சிறுவர்கள் இருவர் கிள்ளிவளவனிடஞ் சிக்கிக் கொண்டார்கள். கிள்ளிவளவனுக்கும் அப்பிள்ளைகளுக்கும் ஒன்றும் பகையில்லை. தன் பகைவனுடைய மக்கள் என்பதற்காகக் கிள்ளிவளவன் அப்பிள்ளைகள்மீது பழிதீர்த்துக்கொள்ள எண்ணினன். அக்குழந்தைகளை யானைக்காலில் இடறிக் கொலைசெய்யும்படி கட்டளை பிறப்பித்தான்.

கொலைஞர்கள் அச்சிறுவர்களைக் கொலைக் களத்திற்கு இழுத்துக்கொண்டு சென்றனர். செல்லுமிடம் அறியாத சிறுவர்கள் அழுது புலம்பிக்கொண்டு சென்றனர்.

கொலைக் களத்திலே கிள்ளிவளவனும் வந்திருந்தான். தன் பகைவனுடைய பிள்ளைகள் அழிந்தொழிவதைப் பார்த்து மகிழவேண்டு மென்பது அவனுடைய எண்ணம். குழவிகளைக் கொலை புரிவது பெருந் தீவினை யென்பது பகைக்கொடுமையாற் பற்றப்பட்ட அரசனுக்குச் சிறிதுந் தெரியவேயில்லை. அவன் பழிதீர்த்துக்கொள்ளுவதில்தான் தன்னுடைய கருத்துமாக விருந்தான்.

குழவிகளை யானைக்காலில் இடறிக் கொல்வதற்கு எல்லா ஏற்பாடுகளும் முடிந்துவிட்டன. யானையுங் கொலைக்களத்திற்கு வந்துவிட்டது. மன்னன் மக்களோ தங்களுக் கேற்பட விருக்கும் நிலைமை தெரியாதவர்களாய், யானையைக் கண்டதும் அதனைப் பார்த்து அழுகை நீர்ந்து வியந்து மகிழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

கோவூர்கிழாருக்கு இச்செய்தி தெரிந்தது. அவர் மிக விரைந்து வந்து கொலைக்களத்தை யடைந்தார். கிள்ளிவளவனைப் பார்த்தார். அவன் செய்யுங் காரியத்திற்கு வருந்தினர். அவர் அவனைப் பார்த்து,

'ஓ கிள்ளிவளவ! நீ ஒரு புறவின் துன்பத்தைத் தீர்த்த தன்றி மற்றையோர்க்கு வருந் துன்பங்களை யெல்லாந் தனதாக எண்ணித் தீர்த்த சோழனுடைய வழியிலே தோன்றியவன். இக் குழந்தைகளோ புலவரைத் காக்கும் புரவலனது வழியிலே தோன்றியவர்கள். மிகவும் சிறுவர்கள். முன்னர் அழுத அழுகையையும் யானையைக் கண்ட வியப்பால் மறந்து நிற்கும் பான்மையினர். இவ்வளவு சிறிய பச்சிளங்குழந்தைகளைக் கொலை புரிவதற்கு உன் உள்ளம் எவ்வாறு துணிந்தது என்பது எனக்குப் பெரும் வியப்பாக விருக்கிறது. நான் என்னுள்ளத்தில் தோன்றியதைக் கூறி விட்டேன். இனி நீ உன்னுடைய உள்ளத்திற்கு ஏற்றதைச் செய்வாயாக' என்று கூறினர்.

அரசனுடைய உள்ளம் மாறுபட்டது. நமக்கு ஒரு பிழையுஞ் செய்யாத இச்சிறுவர்களைக் கொலை

புரியத் துணிந்தோமே என்று வருந்தினன். அச்சிறுவர்களைக் கொலைசெய்யாது விட்டான். பெருந்தீவினையிலிருந்து தன்னைக் காத்ததற்காகப் புலவரைப் போற்றினன். அன்று புலவர் தடுத்திராவிடின் அச்சிறுவர்கள் இறந்திருப்பார்கள். புலவருடைய அச்செயல் குறித்து மக்கள் அனைவரும் அவரைப் போற்றிப் புகழ்ந்தனர்.

நீயே,
புறவின் அல்லல் அன்றியும் பிறவும்
இடுக்கண் பலவும் விடுத்தோன் மருகனை
இவரே,
புலனுழு(து) உண்மார் புன்கண் அஞ்சித்
தமதுபகுத் துண்ணும் தண்ணிழல் வாழ்நர்
களிறுகண் டழூஉம் அழாஅல் மறந்த
புன்தலைச் சிறாஅர் மன்றுமருண்டு நோக்கி
விருந்திற் புன்கணோ வுடையர
கேட்டனை யாயினீ வேட்டது செய்ம்மே.

(அ-ரை.) புறவு-புறா. விடுத்தோன்-நீக்கியோன். மருகன்-வழியில் வந்தவன். புலன் உழுது-அறிவால் உழுது. புன்கண்-வறுமைத்துன்பம். விருந்திற் புன்கண்-புதிய வருத்தம். வேட்டது-விரும்பியது.

# 18. அறிஞர் பிழைக்கு அரசன் தண்டனை

மோசிகீரனார் என்னும் புலவர் பெருமான், சேரமான் தகடூர் எறிந்த பெருஞ் சேரல் இரும்பொறையைக் காண்பதற்காகச் சேரநாட்டிற்குச் சென்றார். அரண்மனையை அடைந்தார். அரசன் தன் இருப்பிடத்திலே இல்லை. அவன் ஏதோ காரியத்தின் பொருட்டு வேறிடஞ் சென்றிருந்தான். அரசன் வருமளவும் புலவர் அங்குத் தங்க எண்ணினார். நீண்ட தூரம் வழி நடந்து வந்திருந்தாராதலின் அவருக்கு உறக்கம் மிகுதியாக வந்து தொல்லை செய்தது. சுற்று முற்றும் பார்த்தார். ஒருபுறத்திலே முரசுகட்டில் வைக்கப்பெற்றிருந்தது.

அந்த முரசுகட்டில் தெய்வத்தன்மை பொருந்தியது. அதிலே மக்கள் யாரும் ஏறுதல் கூடாது. யாரேனுந் தெரியாது ஏறிவிடுவார்களாயின் அவர்களுடைய தலையை வாங்குவதுதான் அக்குற்றத்திற்குத் தக்க தண்டனை. அக்கட்டில் கொற்றவையின் வழிபாட்டிற்கும், அரசன் வெற்றிபெற்ற ஞான்று முரசு வைத்து அடிப்பதற்கும் பயன்படுவது. மோசிகீரனார் பார்த்தபொழுது அக்கட்டில் நன்கு அழகுசெய்யப்பெற்று இனிது விளங்கிக்கொண்டிருந்தது. அக்கட்டிலில் உள்ள முரசு நீராட்டலுக்குக் கொண்டு செல்லப்பெற்றிருந்தமையின் கட்டில் வறிதாக விருந்தது. புலவருக்கு அக்கட்டில் முரசுகட்டில் என்பது தெரியாமற் போயிற்று. மோசிகீரனார் அக்கட்டிலிலே ஏறிப் படுத்து நன்கு உறங்கிவிட்டார். சிறிது நேரத்தில்

அரசன் அங்கு வந்தான். வழக்கப்படி முரசு கட்டிலைக் கைகூப்பி வணங்கினான். யாரோ கட்டில்மீது படுத்திருப்பதாகத் தெரிந்தது. அளவு கடந்த சீற்றத்துடன் உறையிலிருந்த வாளை உருவிக்கொண்டு கட்டில் அருகிற் சென்றான். கட்டிலில் படுத்திருப்பது யார் என்று உற்றுப்பார்த்தான். மோசிகீரனார் என்று தெரிந்தது. அவ்வளவில் அரசனுடைய சினம் போனவிடந் தெரியாமல் போய்விட்டது. புலவர் வழிநடந்த இளைப்பால் உறங்கிக்கொண்டிருக்கிறார் என்பதையும், அவருடைய உடல் புழுக்கத்தினால் வியர்த்துக்கொண்டிருக்கிறது என்பதையும் உணர்ந்தான்.

அக்கட்டிலின் மற்றொரு பக்கத்தில் கொற்றவைக்கு வீசும் சாமரை வைக்கப்பெற்றிருந்தது. அரசன் அதைத் தன்னுடைய கையிலே யெடுத்துக் கொண்டு வீசலானான். சிறிது நேரஞ் சென்றது. தம்மீது இனிய காற்றுப் படுதலை யுணர்ந்த புலவர் விழித்துக்கொண்டார். கண்டார் அரசனை. தாம் படுத்திருக்குங் கட்டிலின் தன்மையையும் நொடியில் உணர்ந்துகொண்டார். அவருக்கு அரசன் மீது அளவு கடந்த அன்பு பெருகிவிட்டது. அவர் சேரமானைப் பார்த்து,

"ஓ அரசர் பெரும! குற்றம் தீர அமைக்கப் பெற்ற கட்டிலின்கண்ணே உள்ள வெற்றி முரசானது நீராடி வருவதற்குள், எண்ணெயினது நுரையை முகந்தாற் போன்ற மெல்லிய பூக்களையுடைய இதனிடத்தே, இதனை முரசுகட்டில் என்று உணராமல் ஏறி உறங்கிய என்னை நின்னுடைய

வாளினாலே இருகூறாக வெட்டிக் கொலைபுரியாமல் நின்றதுடன், அருகிலே வந்து மத்தளம் போலுந் தோளும் அசையச் சாமரையையும் எடுத்து எனக்குக் குளிர்ச்சி யுண்டாகும்படியாக வீசினாய். இவ்வகன்ற உலகத்தின்கண்ணே பரக்கும் பரிசு இவ்வுலகத்துப் புகழுடையவர்களுக் கல்லாமல் அவ்விடத்ததாகிய உயர்ந்த நிலைமையை உடைய உலகத்தின்கண்ணே தங்குதல் பிறர்க்கு இல்லாமையை நீ உணர்ந்துகொண்டதனாலோ இவ்வாறு செய்யலானாய்; அதனை எனக்குக் கூறுவாயாக" என்று புகழ்ந்து பாடினார்.

அரசுகட்டிலின் மீது, அறியாது ஏறியோர்க்குக் கொலைசெய்யப் பெறுதலே தண்டனையாக விருக்க, அத்தண்டனையைச் செய்யாததுடன், அரசன் சாமரையையுங் கையிலெடுத்துப் புலவருக்கு வீசினனெனின், அவன் தமிழின்மாட்டுக் கொண்டிருந்த நன்மதிப்பை நாம் அளவிட்டுரைக்கவும் இயலாதன்றோ?

மாசற விசித்த வார்புறு வள்பின்
மைபடு மருங்குல் பொலிய மஞ்ஞை
ஒலிநெடும் பீலி ஒண்பொறி மணித்தார்
பொலங்குழை உழிஞையொடு பொலியச் சூட்டிக்
குருதி வேட்கை உருகெழு முரசம்
மண்ணி வாரா அளவை எண்ணெய்
நுரைமுகந் தன்ன மென்பூஞ் சேக்கை
அறியா தேறிய என்னைத் தெறுவர
இருபாற் படுக்குநின் வாள்வாய் ஒழித்ததை

அதூஉம் சாலுநல் தமிழ்முழு தறிதல்
அதனொடு மமையா(து) அணுக வந்துநின்
மதனுடை முழுவுத்தோள் ஓச்சித் தண்ணென
வீசி யோயே வியலிடங் கமழ
இவணிசை யுடையோர்க் கல்ல தவண(து)
உயர்நிலை உலகத்(து) உறையுள் இன்மை
விளங்கக் கேட்ட மாறுகொல்
வலம்படு குருசில்நீ ஈங்கிது செயலே.

(அ-ரை.) மாசு-குற்றம். விசித்த-கட்டிய. மை படு-கருநிறம் பொருந்திய. மருங்குல்-பக்கம். மஞ்ஞை-மயில், குருதிவேட்கை-உதிரப்பலி விருப்பத்தையுடைய. உரு கெழு-அச்சம் பொருந்திய. மண்ணிவாரா அளவை-நீராட்டி வருவதற்குள். முழுவுத் தோள்-மத்தளம் போன்ற தோள். ஓச்சி-அசைத்து. இவண்-இவ்விடம். இசை-புகழ். அவண்-அவ்விடம், அதாவது மேல் உலகம். வலம்படு-வெற்றிபொருந்திய.

---

## 19. காவலனுக்குப் பொருள் அளித்த பாவலர்

முன்னாளிலே பெருஞ்சித்திரனார் என்னும் பெயருடைய புலவர் ஒருவர் இருந்தார். அவர் செய்யுள் யாப்பதிலே மிகவும் வல்லவர். எந்தச் செய்தியையும் ஓவியம் எழுதினாற்போல அழகுபெற அமைத்துக் காட்டுவதில் அவர் மிகவும் வல்லுநர். அக்காரணம் பற்றியே அவருக்குப் பெருஞ்சித்திரனார் என்று பெயருண்டாயிற்று. அவர் அரசர்களிடம் செய்யுள் பாடிச்சென்று அதனால் கிடைக்கும் பெரும் பொருளைக்கொண்டே வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்தார்.

பெருஞ்சித்திரனார் பெரும்பரிசில் கருதி, வெளிமான் என்னும் அரசன்மீது பாடல் யாத்துக்

கொண்டு சென்றார். பெருஞ்சித்திரனாருடைய கெட்ட காலம் அவ்வெளிமான் இறக்கும் நிலையி லிருந்தான். அவனிடம் பெருஞ்சித்திரனார் தம் முடைய பாடலைப் படித்தார். வெளிமான் அதைக் கேட்டு மகிழ்ந்தான். பரிசில் கொடுக்குமாறு தன் னுடைய இளவலான இளவெளிமானுக்குக் கட் டளையிட்டு இறந்தான்.

சில நாட்கள் சென்றன. இளவெளிமான் பெருஞ்சித்திரனாருக்குச் சிறிது பொருள் கொடுக்க வந்தான். அந்தச் சிறிய பொருளை யேற்றுக்கொள் ளப் பெருஞ்சித்திரனார் விரும்பவில்லை. புலி பசித் தாலும் புல்லைத் தின்னுதன்றோ? அவர் இளவெளி மானைப் பார்த்து, ஓ அரச! நீ எனக்குச் சிறிது பொருளைக் கொடுக்க வருகிறாய். உன்னுடைய முன்னோன் இருந்தால் இவ்வளவு அற்பமாகவா கொடுக்க வருவான்? இப்பொருள் எனக்கு வேண் டாம்' என்று கூறிவிட்டு அவ்விடத்தை விட்டு வெளியேறினார்.

வெளியேறியவர் குமணன் என்னும் அரசன் பாற் சென்று அவனுடைய பெருமைகளைப் புகழ்ந்து பாடினார். அவன் அறிஞர்களுடைய வரி சையை நன்குணர்வானாதலால், பெருஞ்சித்திர னாரைப் பெரிதும் போற்றிப் பெரும்பொருள் வழங்கி னான். அவைகளையெல்லாம் யானைகளின் மீது ஏற்றிக்கொண்டு தம்முடைய ஊருக்குப் புறப் பட்டார்.

வரும் வழியில் இளவெளிமானுடைய ஊர்வழி யாக வந்தார். ஒரு யானையை அரசனுடைய காவல்

மரத்திலே கட்டிவிட்டு அரசனிடஞ் சென்றார். அரசன் இளவெளிமானைக் கண்டார். அவனைப் பார்த்து,

"ஓ இளவெளிமானே, நீ இரவலர்களைக் காப்பாற்றுபவன் அல்லன். உன்னை விட்டால் புலவர்கட்குப் புரவலர்கள் இல்லாமற் போய்விடவில்லை. இனி இரப்போர் உண்டாகலையும் பார்; அவ்விரப்போருக்கு இடுவார் உண்டாகலையும் பார். உன்னுடைய ஊர்க்காவல் மரத்திலே, நான் குமணன்பாற் பெற்ற பெரும் பொருளில் ஒரு சிறு பகுதிப் பொருளை யானையின் மீது ஏற்றியபடி அம்மரம் வருந்துமாறு கட்டியிருக்கிறேன். நீ அவ்வியானையின் மீது ஏற்றியுள்ள பொருளை உன்பால் வைத்துக்கொண்டு, இனி உன்னை நாடி வரும் பரிசிலர்க்குத் தக்கபடியாகப் பொருள் வழங்குவாயாக' என்று கூறிவிட்டு அவ்விடம் விட்டகன்றார். புலவர் கூறியவற்றைக் கேட்ட இளவெளிமான் மிகுந்த நாணத்தை யடைந்தான்.

இரவலர் புரவலை நீயும் அல்லை
புரவலர் இரவலர்க் கில்லையும் அல்லர்
இரவலர் உண்மையுங் காணினி இரவலர்க்(கு)
ஈவோ ருண்மையுங் காணினி நின்னூர்க்
5 கடிமரம் வருந்தத் தந்தியாம் பிணித்த
நெடுநல் யானையெம் பரிசில்
கடுமான் தோன்றல் செல்வல் யானே.

(அ-ரை.) இரவலர்-ஏற்போர். புரவலை - பாதுகாப்போய். கடிமரம்-காவல் மரம். கடுமான் தோன்றல்-விரைந்து செல்லும் குதிரையை யுடைய தலைவனே.

## 20. தனது கடனுரைத்த தாய்

சங்ககாலத்திலே, இரண்டு மாதர்கள் ஒருநாள் எதிர்ப்பட்டு இன்னுரையாடிக்கொண் டிருந்தனர். ஒரு மாது மற்றொரு மாதை நோக்கி, "உன்னுடைய மகன் எப்படியிருக்கின்றான்? நன்றாக அவனுக்குக் கல்வி கற்பித்து நல்லவனாக வளர்க்கின்றாயா? அல்லது தண்டச்சோற்றுத் தடிராமனாக வளர்க்கின்றாயா? நீ பிள்ளையை வளர்ப்பதில் கெட்டிக்காரியாதலின் கேட்கிறேன். அவன் யாரேனும் படைக்கலப்பயிற்சி பெறுகிறானா? இப்பொழுது அவன் வெளித்தோற்றத்திற்கு எப்படித் தெரிகிறான்? போர்க்களத்திற்குச் சென்றால் அஞ்சாது போரிடுவானா?" என்று பல கேள்விகளைக் கேட்டாள்.

அதற்கு மற்றவள், 'பெற்று வளர்ப்பது என்னுடைய கடன். நான் என்னுடைய கடமையை நன்கு செய்துவருகிறேன். மற்றவர்களும் அவரவர்களுடைய கடமையைச் செய்தால் அவன் எந்நிலைக்கு வருகிறான் என்பது பிறகு தெரியும்' என்றாள்.

அதற்குக் கேள்வி கேட்டவள், 'மற்றவர்களும் அவரவர்களுடைய கடமையைச் செய்தால்' என்கிறாயே, அஃதென்ன? விளக்கமாகச் சொல்' என்றாள். அதற்குச் சிறுவனுடைய தாய், 'என் மகனுக்கு நான் செய்யவேண்டிய கடமை பெற்று அவனை நன்கு வளரும்படி செய்வது மட்டுந்தான். மற்றவை என்னுடைய கடமைகள் அல்ல. அவன் கல்வியறிவுடையவனாகச் செய்வது அவனுடைய

தந்தையின் கடமை; கூரிய வேற்படையைச் செய்து கொடுக்க வேண்டியது கொல்லனுடைய கடமை; அவன் நல்ல வழியிலே செல்லுமாறு செய்யவேண்டியது அரசனுடைய கடமை; போரின்கண்ணே பின்வாங்காது எதிர்த்தோரை வென்று மீளுதல் அச் சிறுவனுடைய கடமை; ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கடமை யிருக்கிறதென்பது இப்பொழுது தெரிகிறதா? என்றாள்.

ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே
சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே.

(அ - ரை.) புறந்தருதல் - காப்பாற்றுதல். தலைக்கடன் - முதன்மையானகடன். ஒளிறு வாள் - விளங்குகின்ற வாள். சமம் - போர். உருக்கி - அழித்து.

---

## 21 கல்வி யருமை தெரிந்த காவலன்

முற்காலத்தில், 'பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்' என்று பெயரையுடைய ஓர் அரசன் இருந்தான். கல்வியின் சீருஞ் சிறப்பும் அவனுக்கு நன்றாக விளங்கின. அவன் தானும் நன்றாகக் கல்வி கற்றுப், பூவேந்தனாக இருப்பதோடு பாவேந்தனாகவும் இருக்க விழைந்தான்.

பெரும் புலவராக விளங்கும் நல்லாசிரியர் ஒருவரைத் தேடிப்பிடித்தான். அவ்வாசிரியருக்கு ஆக வேண்டிய உதவிகளை யெல்லாஞ் செய்து அவரிடம்

ஒழுங்காகவும் வரன்முறையாகவும் கல்வி பயின்றான். தன்னுடைய ஆசிரியருக்கு ஏதேனும் தொல்லை யேற்பட்டால் விரைந்து தீர்ப்பான். அவ்வாசிரியருடைய செலவுக்குத் தாராளமாகப் பொருள் கொடுப்பான். அவரிடம் அடக்கமாகவும் பணிவுடனும் நடந்துகொள்வான். ஆசிரியரிடம் பணிந்து நிற்பதற்குச் சிறிதும் பின்வாங்கமாட்டான். தான் ஓர் அரசனாயிற்றே என்று எண்ணிப் பெருமிதமாக ஆசிரியரிடம் நடந்துகொள்ளமாட்டான். நூல்களில் மாணவர்களுக்குக் கூறப்பட்ட முறைப்படி, அவன் ஆசிரியரிடம் அமைந்து நடந்து கல்வி கற்றுக்கொண்டிருந்தான்.

அரசன் புலவரிடம் அவ்வாறு தாழ்ந்து நின்று கல்வி கற்பது சிலருக்குப் பிடிக்கவில்லை. அவர்கள் ஒருநாள் அரசனைத் தனியிடத்திலே கண்டு, 'தாங்கள் அளவுகடந்த அடக்கவொடுக்கத்துடன் ஆசிரியரிடம் அடங்கிக் கல்வி கற்கிறீர்களே; ஏன் அவ்வாறு செய்தல் வேண்டும்? தாங்கள் ஓர் அரசராகையால், அவ்வளவுதூரம் தாழ்ந்துபோதல் பார்ப்பவர்களுக்கு நன்றாக விருக்காது; ஆகையால் இனிமேல் தாங்கள் பெருமிதமாகவே இருங்கள். இவ்வாறு தொல்லைப்பட்டுக் கற்கிற கல்வியினால் அப்படி என்ன பெரிய நன்மை விளைந்துவிடப் போகிறது?' என்று கூறி அரசனுடைய உள்ளத்தைக் கலைத்துக் கெடுக்கப்பார்த்தார்கள்.

அவர்கள் கூறியவற்றைக் கேட்ட அரசன் அவர்களுடைய அறிவின்மையை எண்ணி வருந்தினான். அவர்களுக்கு நல்லறிவு கூற எண்ணினான். அவன் அவர்களைப் பார்த்து, 'நீங்கள் கூறியமொழி

கள் நன்மொழிகளல்ல. நீங்கள் கல்வியின் பெரு
மையைச் சிறிதும் உணராதவர்களாக இருக்கின்
றீர்கள். கல்வியின் சிறப்புக் கழறுதற்கரியதாகும்.
தன்னாசிரியருக்கு ஒரு துன்பம் வந்தபொழுது அது
நீங்குவதற் காவன புரிந்தும், அவ்வாசிரியருடைய
நல்வாழ்க்கையின் பொருட்டு மிகுந்தபொருளைக்
கொடுத்தும், அவரிடத்திலே தாழ்ந்து நிற்றலை
வெறாமலும், ஒருவன் கல்வியைக் கற்பது மிகவும்
நன்மையாகும். பிறப்பு ஒரே தன்மையராய் ஒரு
வயிற்றின்கண் பிறந்தவர்களுள்ளும் கல்வியின்
சிறப்பால் தாயும் மனவேறுபாட்டை யடைவாள்.
ஒரு குடியின்கண்ணே தோன்றிய பலருள்ளும்
அறிவுச் சிறப்பால் மூத்தோனை ஒரு பொருட்படுத்
தாது இளைஞனாயினும் அறிவுடையவனுடைய
சொல்வழியாகத்தான் அரசனும் நடப்பான்.
வேறுபாடறியப்பெற்ற நால்வகைக் குலத்துள்ளும்,
கீழ்க்குலத்தின்கண் பிறந்த ஒருவன் கல்வி கற்று
அறிவாற் சிறப்புற்று விளங்குவானாயின், அவன்
கீழ்க்குலத்தோன் என்று எண்ணாமல் மேற்குலத்
தின்கண் பிறந்த ஒருவனும் அருமைமிக்க கல்வியை
யடைதற்பொருட்டு அவனிடத்தே சென்று குறை
யிரந்து நிற்பான். கல்வியறிவின் பெருமை அத்
தகையது. நீங்களோ கல்விப் பெருமையைச் சிறி
தும் எண்ணாதவர்களாய்க் குறுகிய நோக்கங்
கொண்டு பேசுகின்றீர்கள். இஃது உங்களுக்குத்
தகாது' என்று இடித்துரைத்தான்.

நெடுஞ்செழியனுடைய மொழிகளைக் கேட்
டோர், அரசனுடைய உள்ளப் பண்பு தெரியாமல்

வந்து பேசினேமே என்று நாணிச் சென்றனர். அரசனே மிக முயன்று கல்வியை நன்கு கற்றுத் தேர்ந்தான். செய்யுள் பாடுந் திறமையையும் அடைந்தான். அவனுடைய பாடல்கள் அனைவரும் போற்றும் வண்ணம் அமைந்துள்ளன.

உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே
பிறப்போ ரன்ன உடன்வயிற் றுள்ளும்
சிறப்பின் பாலால் தாயும் மனந்திரியும்
ஒருகுடிப் பிறந்த பல்லோர் உள்ளும்
மூத்தோன் வருக என்னா(து) அவருள்
அறிவுடை யோன்ஆ(று) அரசுஞ் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பால் உள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன்கட் படுமே.

(அ - ரை) உற்றுழி உதவியும் - ஆசிரியருக்கு ஒரு துன்பம் வந்தபொழுது உதவிசெய்தும். உறு பொருள் - மிகுந்த பொருள். பிற்றைநிலை - பின் நிற்கும் நிலை; அதாவது பணிந்து நிற்கும் நிலை. முனியாது - வெறுக்காது. ஓர் அன்ன - ஒரே தன்மையான. வேற்றுமை - வேறுபாடு. நாற்பால் - நான்கு பகுப்பான குலம். அவன்கட் படும் - அவனையடைந்து பணிவான்.

## 22. சூளுரை புகன்ற சுடர்த்தொடி

அருந்தமிழ் மாதர்கள் பண்டைக் காலத்திலே திருந்திய உள்ளப்பாங்கினை உடையவர்களாக இருந்தார்கள். தங்களுடைய மக்களை வீரர்களாக வளர்த்தனர். அம்மாதர்களின் வீரமுந் தீரமும் இக்காலத்து மக்களாற் பெரிதும் வியந்து கொண்டாடத் தக்கன. இக்காலத்திலே போர் என்னும் பேரைக் கேட்டாலே ஆடவர்களும் பெண்டிரும் அஞ்சி நடு நடுங்கி மூலையிற் பதுங்குகிறார்கள். அக்காலத்திலே இருந்த ஒரு தமிழ் மாதின் ஒப்பற்ற தீரத்தைப் பாருங்கள்.

ஒருதாய் தன்னுடைய இளமகனைப் போர்க்களத்திற்கு அனுப்பியிருந்தாள். அவனுடைய உடல் கூட நல்லஉரம் பெறவில்லை. அத்தகைய இளமகன் போர்க்களத்தில் பெரும் போர் செய்து மாண்டொழிந்தான். ஆனால் சிலர் அவ்வீரச் சிறுவனுடைய தாயிடம் வந்து, 'உன்னுடைய மகன் போர்க்களத்திலே பொருதற் கஞ்சிப் புறங்காட்டி யோடிப் போனான்' என்று தவறாகக் கூறிவிட்டனர். அவ்வளவில் அம்மாதுக்குப் பெருஞ்சின முண்டாகிவிட்டது. அவள் உடனே அவ்வாறு கூறியவர்களைப் பார்த்து, 'என்னுடைய மகன் நீங்கள் கூறியபடி போர்க்களத்திலே புறமுதுகு காட்டியிருப்பானாயின், அத்தகையோன் உண்டு வளர்தற்குக் காரணமாக இருந்த என்னுடைய கொங்கைகளை அறுத்து எறிகிறேன் பாருங்கள்' என்று சூளுரை புகன்று பெருஞ்சினங் கொண்டாள். கையிலே வாளை யெடுத்துக்கொண்டு

போர்க்களத்திற்குச் சென்றாள். அங்கு இறந்து கிடக்கும் உடல்களையெல்லாம் புரட்டிப்பார்த்தாள். ஓரிடத்திலே அவளுடைய மகன் இறந்து கால்வேறு கைவேறாக உடல் சிதைந்து கிடந்தான். அப்பிணத்தைத் தாய் கண்டாள். கண்டவுடன் என்ன செய்தாள் என்று நினைக்கிறீர்கள்? தற்காலத்திய மாதர்களாக விருந்தால் கீழே விழுந்து முட்டிக்கொண்டும் மோதிக் கொண்டும் கூந்தலைப் பிடித்துப் பிய்த்துக் கொண்டும் பலவாறாக ஒப்பாரிவைக்கத் தொடங்கி விடுவார்களல்லவா? அம்மாதோ தன்னுடைய மகன் பிணத்தைக் கண்ட அளவில்,பெற்றபொழுது அடைந்த மகிழ்ச்சியினும் பலமடங்கு மிகுதியான மகிழ்ச்சியை அடைந்தாள். அக்காட்சியைக் கண்ட காக்கைபாடினியார் நச்செள்ளையார் என்னும் புலவர்,அவள் செய்கையைச் செய்யுளிலே யாத்துப், பல்லாண்டுகட்குப் பின்னர்கூட நாம் அறிந்து மகிழ்ந்து அவளுடைய தீரத்தைப். போற்றுமாறு செய்துள்ளார். அத்தகைய தீரமாதரைப் பெற்றிருந்த தமிழகம் இப்பொழுதுள்ள நிலை பெரிதும் வருந்தக்கூடியதன்றோ?

நரம்பெழுந் துலறிய நிரம்பா மென்தோள்
முளரி மருங்கின் முதியோள் சிறுவன்
படையழிந்து மாறினன் என்றுபலர் கூற
௫ மண்டமர்க் குடைந்தனன் ஆயின் உண்டவென்
முலையறுத் திடுவென் யானெனச் சினைஇக்
கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்
செங்களந் துழவுவோள் சிதைந்துவே றாகிய
படுமகன் கிடக்கை காணூஉ
ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே.

(அ - ரை) நிரம்பா மென்தோள்-இளந்தோள். படையழிந்து மாறினன் - போருக்குப் புறங்காட்டினன். மண்டமர் - நெருங்கிய போர். சினைஇ - சினந்து. படுபிணம் - இறந்தபிணம். பெயரா - பெயர்த்து. செங்களம் - உதிரத்தாற் சிவப்பாகிய போர்க்களம். துழவுவோள் - பெயர்த்துப் பார்ப்பவள்.

---

## 23. செந்தமிழ் மாதின் சீரிய கற்பு

அக்காலத்து மாதர்கள் தீரத்திற் சிறந்து விளங்கியதைப் போன்றே பொற்புடைக் கற்பிலும் புகழ் பெற்று விளங்கினார்கள். கணவன் இறந்தபின்பு உயிர்வாழ்தலை விரும்பாத மாதர்கள் உடன்கட்டையேறித் தாமும் மாய்வர்; அல்லது கடுமையான கைம்மை நோன்பை மேற்கொள்வர். அக்கைம்மை நோன்பு உடன்கட்டை யேறுதலைப் பார்க்கினும் கொடியதாகவிருக்கும்.

பூதப்பாண்டியன் என்னும் அரசன் இவ்வுலக வாழ்வை நீத்து இறந்தொழிந்தான். அவனுடைய பிணம் சுட்டெரித்தலின் பொருட்டுச் சுடலைக்குக் கொண்டு செல்லப்பட்டது. ஆண்டுக் கட்டைகள் அடுக்கி அதன்மீது அரசன் உடலையுங் கிடத்தி உயிர் நீங்கிய அவ்வுடலுக்குச் செய்யவேண்டிய கடன்களை யெல்லாஞ் செய்து இறுதியில் தீயும் வைத்துவிட்டனர். தீயானது மூண்டு எரிந்தது. அப்பொழுது அவ்வரசனுடைய மனைவியாகிய பெருங்கோப்பெண்டு என்பவள் அவ்விடம் வந்து சேர்ந்தாள். அரசன் இறந்துவிட்டது கண்டு அவள் வருந்தி யழவில்லை. நன்னீராடிப் புத்துடை புனைந்து அணி

பூல் வணிந்து மணவணி கொண்டாள்போல விளங்கினாள். அவளுடைய உள்ளக்கிடக்கையை யுணராமல் அமைச்சரும் பிறரும் திகைத்துநின்றனர்.

பெருங்கோப்பெண்டு எரிந்துகொண்டிருக்கும் தீயில் பாயத் தொடங்கினார்கள். அவ்வளவில் அமைச்சர்களும் அங்குக் கூடியிருந்த பெரியோர்களும் அவள் தீப்பாய்தல் வேண்டாவென்று வேண்டிக்கொண்டனர்.

பெருங்கோப்பெண்டுக்குப் பெருஞ்சினம் உண்டாகிவிட்டது. அவள் தன்னை விலக்கிய பெரியோர்களைப் பார்த்து, "பெரியோர்காள்! என்னை 'உடன் கட்டை ஏறு' என்று கூறாமல், 'ஏறுதல் வேண்டா' என்று தடுக்கின்றீர்கள். நீங்கள் தடுப்பதை நோக்கின், நான் கைம்மை நோன்பை மேற்கொண்டு பல காலத்திற்குத் தொல்லைப்பட வேண்டுமென்று நீங்கள் சூழ்ச்சி செய்திருப்பதாகத் தெரிகிறது. நான் உங்களுடைய சூழ்ச்சிக்கு உட்படமாட்டேன். அணிலினுடைய வரிபோலும் வரிகளையுடைய வளைந்த வெள்ளரிக்காயை அரிவாளால் அரியப்பட்ட விதைபோன்ற நல்ல வெள்ளிய நெய் இல்லாமல், இலையானது இடையே பொருந்தியதும் கையாற் பிழியப்பட்டதுமாகிய நீர்ச் சோற்று உருண்டையுடன் எள்ளரைத்த விழுதுடன், புளியைக் கூட்டிச் சமைக்கப்பட்ட வேளைக்கீரைக்கறியை உணவாகக் கொண்டு, பருக்கைக் கற்களால் அமைக்கப்பெற்ற படுக்கையிலே பாயுமில்லாமல் உறங்கும் கைம்மை நோன்பினால் வருந்தும் மற்றைப் பெண்களைப் போன்றவள் அல்லள் நான். இடுகாட்டின் கண்ணே

அமைக்கப்பெற்ற பிணைப்படுக்கை உங்களுக்கு மிகவுங் கொடிதாகத் தோன்றலாம்; எனக்கு என்னுடைய தலைவன் இறந்தொழிந்தபிற்பாடு அவ்வாறு தோன்றவில்லை. எனக்கு நன்னீர்ப் பொய்கையும் தீயும் ஒரே தன்மையுடையவைகளாகத் தெரிகின்றன" என்று கூறித் தானும் உடன்கட்டையேறி மாய்ந்தொழிந்தனள்.

உடன்கட்டையேறும் வழக்கம் நீண்டகாலம் நமது நாட்டிலே நடந்துவந்தது. உடன்கட்டையேற விரும்பாத பெண்களைப் பலவந்தமாகத் தூக்கி அவளுடைய கணவன் எரியும் எரியிலே போடுவதும் உண்டு. ஆனால் இத்தகைய நிகழ்ச்சிகள் இரண்டொன்றுதான் நடக்கும். மிக அண்மைக் காலத்தில்தான் உடன்கட்டை ஏறும் வழக்கமானது தடைசெய்யப்பெற்றது.

பல்சான் றீரே பல்சான் றீரே
செல்கெனச் சொல்லா தொழிகென விலக்கும்
பொல்லாச் சூழ்ச்சிப் பல்சான் றீரே
அணில்வரிக் கொடுங்காய் வாள்போழ்ந் திட்ட
காழ்போல் நல்விளர் நறுநெய் தீண்டா(து)
அடையிடைக் கிடந்த கைபிழி பிண்டம்
வெள்ளெட் சாந்தொடு புளிப்பெய் தட்ட
வேளை வெந்தை வல்சி யாகப்
பரற்பெய் பள்ளிப் பாயின்று வதியும்
உயவற் பெண்டிரேம் அல்லேம் மாதோ
பெருங்காட்டுப் பண்ணிய கருங்கோட் டீமம்
நுமக்கரி தாகுக தில்ல வெமக்கெம்
பெருந்தோட் கணவன் மாய்ந்தென வரும்பற
வள்ளிதழ் அவிழ்ந்த தாமரை
நள்ளிரும் பொய்கையும் தீயுமோ ரற்றே.

(அ - ரை) பல் சான்றீரே - பல பெரியோர்களே! அணில் வரிக் கொடுங்காய் - வெள்ளரிக்காய், வாள்போழ்ந்திட்ட - அரி வாளால் அரிந்த, காழ் - விதை, விளர் - வெள்ளிய, அடை - இலை, வேளை - வேளைக்கீரை, வல்சி - உணவு, பரல் - பருக்கைக் கற்கள், உயவல் - வருத்தம், பெருங்காடு - சுடுகாடு, கருங்கோடு - கரிய மரக்கிளை, ஈமம் - பிணப்படுக்கை, அரும் பற - முகையில் லாமல், வள்ளிதழ் - வளப்பம் பொருந்திய இதழ், நள் - குளிர்ச்சி, ஓர் அற்று - ஒரே தன்மையுடையது.

---

## 24. நரைதிரை யின்மைக்கு நன்மருந்து.

கோப்பெருஞ் சோழன் என்பவன் ஓர் அரசன். பிசிராந்தையார் என்பவர் ஒரு புலவர். இருவரும் ஆருயிர் நண்பர்கள். அரிய நட்புடைய இருவருக்கு எடுத்துக்காட்டுக் காட்டவேண்டுமாயின், அவர்கள் இருவரையுந்தான் எடுத்துக் கூறுவது வழக்கம். அந்நண்பர்க ளிருவாிடத்திலும் ஒரு தனிச் சிறப் புண்டு. அஃதாவது, ஒருவரை யொருவர் பார்த்த தில்லை. இருவரும் ஒருவரை யொருவர் கேள்வியினல் அறிந்துள்ளதுமட்டுந்தான். ஒருவரை யொருவர் பார்த்துப் பேசாமல் எப்படி நட்பேற்பட்டது என்று வியப்படையாதீர்கள். திருவள்ளுவர் தமது திருக்குறளிலே, 'புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான் நட்பாங் கிழமை தரும்' என்று கூறி யிருக்கிறார் அல்லவா? அவ்வாறுதான் அவர்களு டைய நட்பு வளர்ந்து சிறப்படைந்தது.

கோப்பெருஞ் சோழன் வடக்கிருந்து உயிர் விட முடிவுசெய்து வடக்கிருந்தான். அச்செய்தி பிசிராந்தையாருக்குத் தெரிந்தது. இதுவரையில்

தான் ஒருவரை யொருவர் நேரிற்கண்டு மகிழாமல் போய்விட்டோம். 'இப்பொழுது நம் நண்பனாகிய அரசனுக்கு இறுதிக்காலம் கிட்டிவிட்டது. இனி மேற் பார்க்காதிருப்போமாயின் அடியோடு பார்க்கவே முடியாமற் போய்விடும்' என்று முடிவு செய்து, உடனே பயணப்பட்டுக் கோப்பெருஞ் சோழன் இருந்த இடத்திற்குப் போய்ச்சேர்ந்தார். தன்னுடைய நண்பராகிய பிசிராந்தையாரைக் கண்ட கோப்பெருஞ் சோழன் மிகுந்த மகிழ்ச்சியடைந்தான். இருவரும் வெகுகாலமாக ஒருவரைப் பற்றி ஒருவர் கேள்விப்பட்டுக்கொண் டிருந்தார்களாதலின், கோப்பெருஞ் சோழன் பிசிராந்தையார் நரைதிரை மூப் பென்பவைகளோடு கூடிய முது பெருங் கிழவராக இருப்பார் என்று எண்ணிக் கொண்டிருந்தான். ஆனால் நேரிற் கண்டபொழுதோ எண்ணிக்கொண்டிருந்ததற்கு மாருகப் பிசிராந்தையார் இளமைத் தன்மை இனிது சிறக்க விளங்கிக்கொண்டிருத்தலைக் கண்டான். அவனுக்கு மிகவும் வியப்புண்டாகிவிட்டது. அவன் பிசிராந்தையாரைப் பார்த்து, 'நான் உங்களைப் பற்றி நெடுங்காலமாகக் கேள்விப்பட்டுக்கொண்டிருக்கிறேனே; தாங்கள் இப்பொழுதுகூட இளமையுடன் இலங்குகின்றீர்களே; தங்களுக்கு இளமைத் தன்மையானது எவ்வா றுண்டாயிற்று' என்று கேட்டான்.

பிசிராந்தையார் கோப்பெருஞ் சோழனைப் பார்த்து, 'நண்ப, நீ கேட்பது நல்ல கேள்விதான். ஆண்டுகள் பல வாகியும் யான் நரைதிரை யின்றி

யிளமையுடன் விளங்குவதற்குக் காரணம் யாதென்று கேட்பாயாயின் கூறுகிறேன் கேள். பெருமை பொருந்திய என் மனைவியும் மக்களும் அறிவு நிரம்பியவர்களாக விளங்குகின்றார்கள். என்னுடைய ஏவலாளர்களும் யான் ஏவாமல் தாமே ஆகவேண்டியவைகளை நன்குணர்ந்து இனிது செய்வார்கள். 'ஏவா மக்கள் மூவா மருந்து' என்பதை நீயும் அறிவாய் அல்லவா? இவை மட்டுமல்ல. எம்மரசனும் முறையல்லாத காரியங்கள் எவற்றையும் புரியான். மேலும், என்னுடைய ஊரின்கண்ணே, நற்குண நற்செயல்களான் மேம்பட்ட கொள்கைகளையுடைய பல பெரியோர்கள் இருக்கிறார்கள். ஆகியவற்றால் யான் எவ்விதமான கவலையும் அற்றவனாக வுள்ளேன். கவலையற்றிருத்தலே நரைதிரை யின்மைக்கு நன்மருந்தாகும். நான் இளமையோடிருத்தலின் காரணம் இப்பொழுது விளங்கிற்றன்றோ' என்று விடையளித்தார். புலவர் கூறியவற்றைக் கேட்ட அரசன் உண்மையுணர்ந்து மகிழ்ந்தான்.

யாண்டுபல வாக நரையில வாகுதல்
யாங்கா கியரென வினவுதி ராயின்
மாண்டவென் மனைவியொடு மக்களும் நிரம்பினர்
யான்கண் டனையரென் னிளையரும் வேந்தனும்
ரு அல்லவை செய்யான் காக்கு மதன்தலை
ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழும் ஊரே.

(அ - ரை) யாண்டு - ஆண்டு. யாங்காகியர் - எப்படிப் பெற்றீர். மாண்ட - நற்குணங்களால் மாட்சிமைப்பட்ட, நிரம்பினர் - அறிவு முதலியன நிரம்பப்பெற்றனர். இளையர் - பணியாட்கள். அல்லவை - அறமல்லாதவை. அதன் தலை - பிறகு. ஆன்றவிந்து - நற்குணங்களால் அமைந்து.

## 25. எதிரொலி

ஒரு மலைச்சாரலில் சிற்றூர் ஒன்று இருந்தது. அவ்வூர்ச் சிறுவர்கள் கல்விகற்றற் பொருட்டுப் பள்ளிக்கூடம் ஒன்று மலையை அடுத்த ஓரிடத்திலே அமைந்திருந்தது. மலைகளின் எதிரிலும் பெரிய சுவர்களின் எதிரிலும் ஒருவர் நின்று பேசினால், மலையினிடத்தும் சுவரினிடத்தும் சென்று தாக்கும் பேச்சானது திரும்பவும் ஒலித்து வேறொருவர் பேசுவதைப்போலப் பேசினவர்கட்குக் கேட்கும்.

மலையருகிலிருந்த பள்ளிக்கூடத்துச் சிறுவர்கள் நெடுங்கணக்குப் படிக்கத் தொடங்கி, மிகுந்த பேரிரைச்சலுடன் படித்தனர். 'வா' என்னும் எழுத்தை அவர்கள் படித்தபொழுது அவ்வொலி மலையின்மீது சென்று தாக்கித் திரும்பியது. திரும்பிய அவ்வொலியானது, மலைப்பக்கத்திலிருந்து யாரோ அந்தப் பள்ளிப்பிள்ளைகளைக் கூப்பிட்டாற் போன்றிருந்தது. ஒவ்வொருவரும் மலைப் பக்கத்திலிருந்து யாரோ தங்களைக் கூப்பிடுவதாக எண்ணினர். சில சிறுவர்கள் சென்று யாரேனும் அங்கிருக்கின்றனரா என்று தேடிப்பார்த்தனர். ஒருவருங் காணப்பெற்றிலர். ஆகவே, அவர்கள் தம்மிருப்பிடத்திற்குத் திரும்பி மீண்டும் படிக்கலாயினர். 'போ' என்னும் எழுத்தை அவர்கள் படித்த போது 'போ' என்னும் எதிரொலியும் 'கூ' என்னும் எழுத்தைப் படித்தபோது 'கூ' என்னும் எதிரொலியும் உண்டாயின. அச்சிறுவர்கள் நம்மை யாரோ

எங்கேயோ போகுமாறும் கூப்பிடுமாறும் சொல்லு கிறார்கள் என்று எண்ணியவர்களாக மீளவுஞ் சென்று தேடலாயினர். மலைக்கு எதிரிலே தாங் கள் கூறுவதுதான் எதிரொலியாகத் திரும்பி வரு கின்றதென்று அவர்கட்குத் தெரியவில்லை. ஒரு நாள் அப்பிள்ளைகள், தாங்கள் படிக்கும்போது யாரோ மலையின் மறைவிடத்திலிருந்து தாங்கள் படிப்பதை அவர்களும் படித்து இகழ்ச்சி செய்வ தாக முடிவுசெய்து அச்செய்தியைத் தங்களுடைய கணக்காயரிடத்திலே கூறினர்.

அக்கணக்காயர், மலைகளுக்கு முன்னால் அவ் வாறு உண்டாவது வேறொருவருடைய பேச்சும் அன்று என்றும், அதுதான் எதிரொலி யென்றும் பிள்ளைகட்கு விளக்கிக் கூறினார். பிள்ளைகளும் தாங்கள் கொண்ட ஐயம் நீங்கப்பெற்றனர்.

ஓவரு நெடுங்கணக் கோதி டுஞ்சிறார்
வாவென வரையயல் வருவர் தேடுவர்
போவென யாரெமைப் போகென் றாரெனக்
கூவென வெங்ஙனே கூப்பி டென்பரால்.

(அ - ரை.) ஓவரு - ஒழிதலில்லாத. வரையயல் - மலைக்கு அடுத்தவிடம். எங்ஙன் - எவ்விடம்.

---

## 26. செல்வரின் செந்தமிழன்பு

சீர்த்திபெற்ற செந்தமிழ்ப் புலவர் ஒருவர் சிறந்த செல்வர் ஒருவரைக் காணச் சென்றார். அச்செல்வர் செந்தமிழின் இடத்தும் செந்தமிழைக்

கற்றுணர்ந்த புலவர்களிடத்தும் பேரன்பு மிக்கவர். புலவர் சென்றபொழுது அச்செல்வர் உணவருந்திக் கொண்டிருந்தார். புலவரின் வருகையை ஏவலாளன் ஒருவன் உடனே செல்வருக்குத் தெரியப் படுத்தினன். அப்புலவரிடத்தில் செல்வருக்கு மிகுந்த நன்மதிப்பு உண்டு. ஏவலாளனல் புலவரின் வருகையை உணர்ந்த செல்வர், அப்புலவரை ஒரிமைப் பொழுதுகூடக் காத்திருக்குமாறு செய்ய விரும்பாத செல்வர், உண்ணுதலை விட்டுவிட்டு விரைந்து எழுந்தார். மிகுவிரைவாகக் கையைக் கழுவினர். விரைந்து வெளியே வந்தார். செல்வர் நன்கு கையைக் கழுவாமையின் அக்கையிலே ஒரு சோறு ஒட்டிக்கொண்டிருந்தது. செல்வர் உண்ணும் பொழுது வலக் கையில் அணிந்திருந்த ஆழியை இடக் கையில் மாற்றி அணிந்திருந்தார். அது திரும்பவும் வலக் கைக்கு மாற்றப்படாமல் அப்படியே இடக் கையில்தானே இருந்தது. புலவர் செல்வரை நன்ருகப் பார்த்தார். கை நன்கு கழுவப்படாமையால் சோறு இருப்பதும், வலக்கை ஆழி இடக்கையில் இருப்பதும், அவருக்குத் தெரிந்தன. செல்வர் தம்மீது வைத்துள்ள ஆர்வத்தினல் தான் அவ்வாறு கையைக்கூட நன்கு கழுவாமலும் ஆழியை மாற்றி அணியாமலும் வந்திருக்கிருர் என்பதை உணர்ந்தார். அவருக்கு நகைப்பு உண்டாயிற்று; நகைப்பை அடக்க முயன்ருர்; முடியவில்லை; மீறிக்கொண்டு சிறிது நகை தோன்றிற்று. புலவர் நகைத்தலைக் கண்ட செல்வர், "ஏன் நகைக்கின்றீர்கள்; என்ன செய்தி?" என்று கேட்டார்.

அதற்குப் புலவர், "தாங்கள் என்மீது வைத்துள்ள பேரன்பு எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கின்றது. தாங்கள் வரும் பொழுதே ஒரு கையில் பொன்னையும் ஒரு கையில் அன்னத்தையும் கொண்டுவந்திருக்கின்றீர்கள். மேலும் வரும் பொழுதே பாராட்டுரைகள் பல கூறிக்கொண்டு வருகின்றீர்கள். தங்களைப் போன்று செந்தமிழன்பில் சிறந்த செல்வர்களை நான் கண்டதில்லை" என்று கூறினர்.

புலவர் கூறியதன் பொருள் செல்வருக்கு நன்கு விளங்கவில்லை. அவர் புலவரைப் பார்த்து "தாங்கள் கூறுவது எனக்கு விளங்கவில்லையே" என்றார். அதற்குப் புலவர், "தங்கள் கையைப் பாருங்கள் விளங்கும்" என்று கூறினர். அப்பொழுதுதான் செல்வர் தம்முடைய கைகளைப் பார்த்தார். கையில் சோறிருப்பதும் வலக்கை ஆழி இடக்கையில் அணியப் பெற்றிருப்பதும் தெரிந்தன. அவர் உள்ளே சென்று கையை நன்கு கழுவிக்கொண்டு ஆழியையும் மாற்றி அணிந்துகொண்டு வந்தார்.

"ஒருகையிலே அன்னம் ஒருகையிலே சொன்னம்
வருகையிலே சன்மான வார்த்தை—பெருகுபுகழ்ச்
சீமான் திருவாழ் சிவப்பிரகாசத் திருவக்
கோமானுக் குள்ள குணம்."

(அ - ரை.) அன்னம் - சோறு. சொன்னம் - பொன். கோமான் - சிறந்தவன்.

## 27. அரசன் மதித்தலே அருஞ்செல்வம்

முற்காலத்தில் பாண்டிய மன்னனுடைய அவைக்கண் பல புலவர்கள் இருந்தார்கள். ஒவ்வொருவரும் அரசனைப் பலவிதமாகப் புகழ்ந்து பாடுவது வழக்கம். அரசனும் அப்புலவர்களின் தகுதிக்கும் பாட்டின் பெருமைக்கும் ஏற்றவாறு பலவகையான பரிசுகள் அளித்து மகிழ்ச்சிப் படுத்தி வந்தான். அரசன் அளித்த பரிசுகளினால் ஒவ்வொருவரும் சிறந்த செல்வர்களாகி வந்தார்கள். அப்புலவர் கூட்டத்தில் ஒரு புலவர் மட்டும் அரசனுடைய பரிசை எதிர்பாராமலும் வாங்காமலும் சென்றுவிடுவது வழக்கம். அரசன் அப்புலவருடைய போக்கைக் கருத்தில் வைத்துப் பார்த்துக் கொண்டே வந்தான். அப்புலவர் பொருளினிடத்தில் பற்றுச் செய்யாமை அரசனுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது. அவன் அப்புலவரைக் காணுந்தோறும் மதிப்பாகவும் சிறப்பாகவும் நோக்குவது வழக்கம்.

ஒரு நாள் பிற புலவர்கள் அப்புலவரைப் பார்த்து, "நாங்கள் அனைவரும் அரசனிடம் மிகுந்த பொருளைப் பெற்றுச் செல்வர்களாக மாறி வருகின்றோமே. நீவிர் மட்டும் அரசனுடைய நன்கொடையைப் பெறாமல் பழைய நிலைமையிலேயே ஏன் இருக்கின்றீர். அரசன் கொடுப்பதை உடனே வாங்கிக்கொள்ள வேண்டாமா? காற்றுள்ள போதே தூற்றிக்கொள் என்பது பழமொழி யன்றோ" என்று பலவாறு கேட்டார்கள். அதற்கு

அப்புலவர் மற்றவர்களைப் பார்த்து, "நானும் உங்களைப் போன்றுதான் பெருஞ் செல்வனாக மாறி வருகின்றேன். எவ்வாறு என்பீர்களாயின், கூறுகிறேன் கேளுங்கள். ஓர் அரசனானவன் தன்னை அடுத்தவர்களுக்கு வானம் சிறிதாம்படி பொருட் குவியலை மிகுதியாக அளிப்பதைப் பார்க்கிலும் நல்ல உள்ளத்தினோடும் நல்ல மதிப்பினோடும் பார்க்கின்ற பார்வை ஒன்றே போதும். அந் நன்மதிப்புப் பார்வையானது இருக்குமாயின் என்றும் நிலைத்திருக்கும்படியாகச் செய்துகொள்வதுதான் நமது கடமை. நான் விரும்பினால் அரசனிடம் இன்றே பெரும் பொருளைப் பெற்றுச் சிறந்த செல்வனாக மாறுதலும் கூடும். தினந்தோறும் அரசனிடம் பொருளைப் பெறுவதால் அவனுக்கு நம்மிடத்திலே வெறுப்புத்தான் ஏற்படும். உங்கள் அனைவரையும் அரசன் பொருளினிடத்திலே பேரவாக் கொண்டவர்கள் என்று எண்ணியிருக்கின்றான். இதனை நீங்கள் நன்கு உணர்ந்துகொள்ளுங்கள்" என்று கூறினார்.

அப்புலவர் அரசனிடம் தினந்தோறும் பொருளைப் பெற்றுக்கொள்ளாமல் ஒதுங்கிச் சென்று விடுவதன் சூழ்ச்சி அவர்களுக்கு அப்பொழுதுதான் தெரிந்தது. அவர்கள் அப்புலவரைப் பார்த்து "தாங்கள் கூறியது உண்மைதான்; நாங்களும் இனி அரசனுடைய பொருளைப் பெறுவதற்கு முயற்சித்தலைவிட அருளைப் பெறுவதற்கு முயற்சிக்கின்றோம்" என்று கூறியகன்றனர்.

"மாகஞ் சிறுகக் குவித்து நிதிக்குவை
ஈகையின் ஏக்கழுத்த மிக்குடைய—மாகொல்
பகைமுகத்த வெவ்வேலான் பார்வையிற் றீட்டும்
நகைமுகத்த நன்கு மதிப்பு."

(அ - ரை.) மாகம் - வான். நிதிக்குவை - பொருட்குவியல், ஏக்கழுத்தம் - மகிழ்ச்சியினால் உண்டாகும் பெருமிதம். பார்வையில் தீட்டும் - பார்வையினால் உண்டாக்குகின்ற.

---

## 28. புலவரின் விடுகதை

முத்துச்சாமிப் பிள்ளை என்பவர் பெருஞ் செல்வர். அவரிடத்தில் அழகிய சொக்கநாதபிள்ளை என்னும் புலவர் தொடர்புடையவராக விருந்தார். அப்புலவர் வேடிக்கையான விடுகதைகளைக் கட்டுவதில் மிகவும் வல்லவர். அப்புலவர் ஒருநாள் முத்துச்சாமிப் பிள்ளையைப் பார்த்து வேடிக்கையாகப் பேசிக்கொண்டிருந்தார். அந்த முத்துச்சாமிப் பிள்ளை வெறுஞ் செல்வர் மட்டுமல்லர். நல்ல அறிவாளி; அவரும் செய்யுள் பாடுந் திறம்படைத்தவர். செல்வர்கட்குக் கல்வியறிவும் சேர்ந்து நிறைந்திருந்தால் அவர்களுடைய சிறப்பைப்பற்றிக் கூறவும் வேண்டுமோ?

பேசிக்கொண்டிருந்த புலவர், 'ஒரு சொல். அது மூன்றெழுத்துக்களால் ஆகியது. அந்தச் சொல்லுக்கு முதல் எழுத்து இல்லாவிட்டால் விளக்கிற் சேருகிற ஒரு பொருளைக் காட்டும். நடு எழுத்தானது இல்லாவிட்டால் மனைவியைக் குறிப்பிடும்

பேர்களில் ஒன்ருகும். கடைசியில் உள்ள எழுத் தானது இல்லாவிட்டால் அரையைக் குறிப்பிடுகிற பேராகும். மேலும், அது கிறித்துமதக் குருவி னுடைய பெயராவதுடன் ஒரு மரத்தையுங் குறிப் பிடும் பெயராகும். அந்த மூன்றெழுத்துச் சொல் யாதென்று கூறுங்கள் பார்க்கலாம்' என்ருர். செல்வர் சிறிது நேரம் எண்ணமிட்டார். விளங்க வில்லை. புலவர் செல்வரைப் பார்த்துக் 'கிறித்து மதத்துக் குருவாக இருப்பவர்களின் பெயர் தங்கட் குத் தெரியாதா?' என்ருர். செல்வர், 'தெரியும்; அவர்களுடைய பெயர் பாதிரி' என்ருர். புலவர், 'அதுதான் அதுதான்' என்ருர். புலவரின் அறிவு வன்மை செல்வருக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித் தது. தக்க பரிசளித்துப் போற்றினுர்.

"முருகனேர் முத்துசாமீ முதலெழுத் தில்லாவிட்டால்
இரவிடு விளக்கிற்சேரும் இடையெழுத் தில்லாவிட்டால்
கருணைசேர் மனைவிபேராங் கடையெழுத் தில்லாவிட்டால்
அரையின்பேர் அதுகிறித்து மதக்குரு மரத்தொன்ருமே"

(அ - ரை.) பாதிரி. திரி; பாரி - மனைவி. பாதி - அரை. பாதிரி - கிறித்துமத ஆசிரியர்கள். பாதிரி - ஒரு மரம்.

---

## 29. "பயனீ சொல்லே"

முற்கூறிய புலவரும் செல்வரும் மற்ரெரு நாள் உரையாடிக்கொண்டிருந்தனர். அப்போது புல வர் முத்துச்சாமிப்பிள்ளையைப் பார்த்து,'இப்போது நான் ஒரு விடுகதை கூறுகிறேன்; அஃது இன்ன

தென்று கூறுங்கள்' என்று சொல்லிவிட்டு, "ஓர் உயிர், அது வெள்ளையன்னத்தின்மீது ஏறும்; அன்னத்தின்மீது ஏறும் என்றவுடன் நான்முகன் என்று எண்ணிவிடாதீர்கள்; நான்முக னன்று. அதனுடைய உடல் கறுப்பு நிறமாக விருக்கும். உடல் கறுப்பு நிறம் என்றவுடன் திருமால் என்று முடிவுசெய்து விடாதீர்கள்; திருமால் அன்று. அஃது அறுகால் பூசிக்குமாயின் அதனை நாடும்; ஆனால் சிவபிரானும் அன்று. அதனுடைய தலையில் நஞ்சைக் கொண்டிருக்கும்; ஆனாலும் அஃது இறவாது. எந்த நாளும் அது சிறையுடையதாக விருக்கும். அப்படிச் சிறையிருப்பதாயினும் விடுதலையுடையதாகவே இந்த வுலகம் முழுவதும் உலாவிக்கொண்டு வரும். அஃது இன்னதென்று கூறுங்கள் பார்க்கலாம் என்று கூறிவிட்டு அதன் பெயரையும் ஒருவாறு சொல்லிவிட்டார்.

. .

செல்வரின் மூளை விரைந்து வேலை செய்தது. நீண்ட நேரமாகியும் ஒன்றும் பிடிபடவில்லை. அவர் புலவரைப் பார்த்து, "சிறையிருக்கும் என்றும் விடுதலையாக உலகத்திலே சுற்றிக்கொண்டிருக்கும் என்றுஞ் சொல்கிறீர்களே. முரணாகத் தெரிகிறதே" என்றார். அச்சமயத்தில் ஈ யொன்று மேலே வந்து உட்கார்ந்தது. புலவர் அவ்வீயைச் செல்வருக்குக் காட்டி, 'இப்பெரியார்தான் இப்பொழுது பேசப் பெறுபவர்' என்றார். அவ்வளவில் முத்துச்சாமிப் பிள்ளைக்கு மிகுந்த களிப்புண்டாகியது. அவர் புலவரின் திறமையைப் பெரிதும் பாராட்டினர்.

"வெள்ளனத்து மீதேறும் பிரம னல்ல
மேனிகறுப் பாயிருக்கும் மாலு மல்ல,
தள்ளரிய வறுகாற்பூ சிக்க நாடும்
சங்கரனு மல்லவிடந் தலையில் கொண்டும்
தெள்ளுமதன் உயிர்போகா தெந்த நாளும்
சிறையிருக்கும் விடுதலையாய்ச் செகத்துலாவும்
பள்ளிகொள்ளு முகுந்தனிகர் முத்துசாமிப்
பாண்டியனே இக்கதையின் பயனீ சொல்லே."

(அ - ரை.) அனத்து - அன்னத்து ; அதாவது சோற்றின்மீது. அறுகால் - ஆறுகால்களையுடையது. பூ சிக்க - பூ அகப்பட. சிறை - சிறகு. பயனீ சொல்லே - பயன் ஈ என்று சொல்.

---

## 30. கைப்பொருளின் மேன்மை

'கல்லானேயானாலுங் கைப்பொருளொன் றுண்டாயின், எல்லாருஞ் சென்றங் கெதிர்கொள் வர்—இல்லானை, இல்லாளும் வேண்டாள்மற் றீன் றெடுத்த தாய்வேண்டாள், செல்லாதவன் வாயிற் சொல்' என்று பாடிய ஔவையார் எங்குச் சென்றா லும் தம்முடைய கையிலே எப்பொழுதும் ஒரு சிறு மூட்டையை வைத்துக்கொண்டிருப்பார். அம்மூட் டையிலே அவருடைய பழம்புடவையொன்றும் கம்பு, கேழ்வரகு, அரிசி முதலியவைகளில் ஏதே னும் ஒன்று ஒருபடி அல்லது அரைப்படி இருக்கும். அஃது ஒன்றும் உணவு அகப்படாத இடத்தில் உண்பதற்குப் பயன்படுவதோடு கைப்பொருளாக மதிப்புக்கும் பயன்படும்.

ஔவையார் அம்மூட்டையோடு எங்கு ஏகி னலும் வரவேற்புப் பலமாக விருக்கும். அரசர்கள் கூட ஔவையாரின் மூட்டையைக் கண்டு, 'அதில் உள்ளது யாது?' என்று கேட்பது வழக்கம்.

ஒருகால் ஔவையார்க்கு அம் மூட்டையைக் கையில் கொண்டுசெல்வது மிகுந்த தொல்லையாக விருந்தது. அம் மூட்டையை ஓரூரில் வைத்துவிட்டு மற்றோர் ஊருக்குச் சென்ருர். தடியை ஊன்றிக் கொண்டு தள்ளாடித் தள்ளாடிச் சென்ற அவ ருடைய தோற்றம் முடவன் கோலூன்றிக்கொண்டு செல்வதுபோல் இருந்தது. சென்ற சென்ற விடங் களில் எவரும் ஔவையாரைத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. எவரும் ஏனென்று கூடக் கேட் காததனைக் கண்ட ஔவையார், எல்லாரும் ஏன் இவ்வாறு பாராமுகமாக இருக்கிருர்களென்று முதலில் வியப்படைந்து எண்ணமிட்டார். சிறிது நேரத்திற்கெல்லாம் அவருக்கு உண்மை விளங்கி விட்டது.கையில் மூட்டை யில்லாமையினுல்தான் எல்லோரும் இவ்வாறு இருக்கிருர்களென்று ஐயமற அறிந்தார்.

கைப்பொருளுடையவர்களாகச் சென்ருல் தான் ஊரெங்கும் உறவு ஏற்படும். முடவர்களைப் போலக் கோலூன்றிக்கொண்டு சென்ருல் சுற்ற மாக உள்ளவர்களும் மனம் வேறுபட்டுவிடு வார்கள். நாம் இதனை யுணராமல் மூட்டையை அங்கே வைத்துவிட்டு வந்துவிட்டோமே என்று வருத்தப்பட்டார்.

"உடையராய்ச் சென்றக்கால் ஊரெல்லாம் சுற்றம்
முடவராய்க் கோலூன்றிச் சென்றக்கால் சுற்றம்
உடையானும் வேறு படும்."

(அ-ரை.) உடையராய்—பொருளுடையராய்.

---

## 31. அருங்கனி வழங்கிய அரசன்

அதிகமான் என்னும் அரசனும் ஔவையாரும் மிகுந்த நட்பினர். அதிகமான் ஔவையாரைத் தன்னுயிரினும் மேலாக மதித்திருந்தான். ஔவையார் நீண்ட காலத்திற்கு இவ்வுலகிலே வாழ்ந்து அறம் பொருளின்பங்களை மக்களுக்குப் போதிக்க வேண்டுமென்பது அதிகமானுடைய எண்ணம்.

ஒருநாள் அரசன் மலைக்காட்டிற்குச் சென்றான். மலைப் பிளப்பினிடத்திலே ஓர் அரிய நெல்லி மரம் இருந்தது. அது மிகுந்த பெருமையை உடையது. அதனுடைய கனியைத் தின்பவர்கள் இம் மாநிலத்திலே பன்னெடுங்காலம் இனிது வாழ்ந்திருப்பார்கள். ஒரு முனிவருடைய பெருமையினால் அம்மரம் அத்தகைய கீர்த்தியைப் பெற்றிருந்தது. அரசன் மலைக் காட்டிற்குச் சென்றபொழுது, அம் மரத்திற்கு அப்பெருமையை உண்டாக்கிய முனிவர் அதிகமானுக்கு ஒரு கனியை அளித்ததுடன் அக் கனியை உண்டார் உலகில் பலகாலம் உயிர் வாழ்ந்திருப்பர் என்னும் உண்மையையுங் கூறியருளினார்.

அரசன் அக்கனியைப் பெற்றுக்கொண்டு நகருக்குத் திரும்பினான். உலகிற்கு மிகுதியாகப் பயன் படுகிற எவருக்கேனும் அக்கனியை அளிக்கவேண்டு மென்று எண்ணமிட்டுக்கொண்டிருந்தான் அரசன்.

அன்று ஔவையார் அதிகமானிடம் வந்துசேர்ந்தார். அதிகமான் மிகவுங் களிப்படைந்து அக்கனியை ஔவையாருக்கே வழங்கினன். அதன் பெருமையை உணர்ந்த ஔவையார் அரசனுடைய கொடைத்திறத்தை மிகவும் வியந்து போற்றினர். அவருக்கு அரசன்மீது அளவுகடந்த அருளும் அன்பும் தோன்றியன.

"வெற்றி பொருந்திய தப்பாத வாட்படையை ஏந்திப் பகைவர்கள் போர்க்களத்தின்கண் இறந்தொழியும்படியாக வெற்றிகொண்டவனும் கழல விடப்பட்ட வீரவளை பொருந்திய கையினையுடையவனும் ஆரவாரம் மிகுந்த மதுவினையுடையவனுமாகிய அதிகமானே! பகைவர்களைப் போரிலே கொல்லும் வீரச் செல்வத்தினையும் பொன்னாற் செய்யப்பெற்ற மாலையினையு முடையோய்! நீ பால் போன்ற பிறையானது நெற்றிபோல விளங்கிய திருமுடியினையும், நீலமணிபோன்ற கரிய கண்டத்தினையுமுடைய சிவபெருமானைப்போல நிலைபெறுவாயாக! பழைய நிலைமையினையுடைய பெரிய மலையினது பிளப்பின்கண் அரிய முடியிலே கொள்ளப்பட்ட சிறிய இலையினையுடைய நெல்லியின் இனிய பழத்தைப் பெறுதற்கு அரியது என்று எண்ணாமலும், அதன் பயனை எனக்குக் கூறாமலும் நின்னுள்ளத்தில்தானே வைத்துக்கொண்டு எனக்குக் கொடுத்தாயாகலான்" என்று நல்ல வாழ்த்துரை கூறியருளினர். அரசன் நெல்லிக்கனியால் நீண்ட வாணாள் பெறாவிடினும் ஔவையார் வாழ்த்துரையால் நீண்ட வாணாள் பெற்றான்.

வலம்படு வாய்வா ளேந்தி யொன்னூர்
களம்படக் கடந்த கழல்தொடித் தடக்கை
ஆர்கலி நறவின் அதியர் கோமான்
போரடு திருவிற் பொலந்தா ரஞ்சி
பால்புரை பிறைநுதற் பொலிந்த சென்னி
நீல மணிமிடற்(று) ஒருவன் போல
மன்னுக பெரும நீயே தொன்னிலைப்
பெருமலை விடரகத் தருமிசைக் கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி குறியா(து)
ஆதல் நின்னகத் தடக்கிச்
சாதல் நீங்க எமக்கீத் தனையே.

(அ - ரை.) வலம் - வெற்றி. ஒன்னூர் - பகைவர். தொடி - வளையல். தடக்கை - பெரியகை. ஆர்கலி - மிகுந்த ஒலி. நறவு - தேன். பொலந்தார் - பொன்னரிமாலை. புரை - ஒத்த. மிடறு - கண்டம். ஒருவன் - சிவன். மன்னுக - நிலைபெறுக. தொன்னிலை - பழைமையான நிலைமை. விடர் அகம் - பிளப்பிடம்.

---

## 32. முல்லையைச் சினக்கும் மொய்குழலார்

ஒருமாது தன் இல்லத்தின் வாயிலிலே முல்லைக் கொடி ஒன்றை நட்டு அருமையாகப் போற்றிப் பாதுகாத்துவந்தாள். அந்த முல்லை நாளடைவில் வளர்ந்து மலருங் காலத்தையடைந்து நாடோறும் மாலையில் மலர்ந்துவந்தது. முல்லையை நட்ட மாது நட்டகாலையில் பெதும்பைப் பருவத்தினளாய் இருந்தாள். அவளும் நாளடைவில் வளர்ந்து மங்கைப் பருவத்தையடைந்து சிறந்து திகழ்ந்தாள். காமனுடைய மலர்க்கணைகள் அவளை வாட்டி வருத்தின. ஒருநாள் மாலையில் அம்மங்கை மிகுதியாக

வருந்திக்கொண்டிருந்தாள். அப்போது அந்த முல்லை மலர்ந்து விளங்கிக்கொண்டிருந்தது. அதனுடைய தோற்றம் காமன்கணையால் கலங்கிக் கொண்டிருக்கும் காரிகையைப் பார்த்து இகழ்ந்து நகைப்பதைப் போன்றிருந்தது. அம் மங்கையினுடைய தோழிப் பெண்கள்; "ஆ! ஆ!! இந்த முல்லைக்கொடி என்ன மிகவும் இழிநிலையுடையதாக இலங்குகின்றது? தன்னை வளர்த்த மாதரசியானவள் வாடி வருந்துதலைப் பார்த்துந் தான்மட்டுஞ் சிறிதும் வருந்தாமல் அவள் அதிகமாக வருந்தும்படி முறுவல் செய்கின்றதே; கொடியார்க்கு நல்ல குணம் ஒருபோதும் உண்டாகாதென்று அறிவுடையோர்கள் கூறியது உண்மையாகவன்றோ இருக்கின்றது" என்று கூறி முல்லைக்கொடியைச் சினந்து இகழ்ந்தனர்.

எற்றே கொடிமுல்லை தன்னை வளர்த்தெடுத்த
முற்றிழையாள் வாட முறுவலிக்கும்—முற்றும்
முடியாப் பரவை முழங்குலகத் தென்றும்
கொடியார்க்கு முண்டோ குணம்.

(அ - ரை.) பரவை - கடல். கொடியார் - தீயோர்; முல்லைக்கொடி.

## 33. செருக்கடங்கிய சிற்றரசன்.

ஔவையார், தொண்டைமான் என்னும் சிற்றரசனிடத்திற்கு ஒரு போது சென்றார். அத் தொண்டைமான் மிகுந்த பெருமிதமுடையவன். அவன் கணக்கற்ற படைக்கலங்களைத் தொகுத்திருந்தான். அவைகள் எண்ணெய் தடவப் பெற்றுப் படைக்கலச்சாலையிலே அழகாக வைக்கப் பெற்றிருந்தன. தன் படைக்கலப் பெருமையை ஔவையாருக் குணர்த்தினால் அவர் சென்று தன் பகையரசனாகிய அதிகமானிடத்திலே சொல்வார். அதனால் அவன் அஞ்சி ஒடுங்கியிருப்பான் என்று எண்ணினான். ஔவையாரைப் படைக்கலச் சாலைக்கு அழைத்துக் கொண்டு சென்றான். வரிசை வரிசையாக வைக்கப்பட்டுள்ள படைக்கலங்களை யெல்லாம் சுட்டிச்சுட்டிக் காட்டினான். அவைகளின் பெருமையையும் ஔவையாருக்கு விரித்துரைத்தான்.

ஔவையார் தொண்டைமான் சொன்னவைகளை யெல்லாம் கேட்டார். அவனுடைய செருக்கமைந்த உள்ளப்போக்கு ஔவையாருக்கு நன்கு விளங்கியது. அவர் தொண்டைமானைப் பார்த்து, "இவைகள் மயிற்பீலி யணியப்பெற்றும் மாலை சூட்டப்பெற்றும், உடலிடந்திரண்ட தூம்பை அழகு பெறச் செய்யப்பெற்றும் எண்ணெய் பூசப்பெற்றும் காவலையுடைய கோவிலின்கண்ணே இருக்கின்றன. செல்வமுண்டாயின் அதனைப் பலருக்குங் கொடுத்தும், இல்லையாயின் இருப்பதனைப் பலரோடும் பகுத்துண்டும் வறியோர்க்குச் சுற்றமாக விருக்

கின்ற எம் அரசனுகிய அதிகமானுடைய படைக் கலன்களோ பகைவரைக் குத்துதலினுல் நுனி முறிந்து கொல்லனது உலைக்களத்தின் கண்ணே கிடக்கின்றன; இதனை நீ நன்குணர்ந்துகொள்வாயாக" என்று கூறினர். ஔவையார் உரைகளைக் கேட்ட தொண்டைமான் தன்னுடைய செருக்கடங்கியதோடு மிகுந்த நாணத்தை யடைந்தான்.

இவ்வே, பீலி யணிந்து மாலை சூட்டிக்
கண்டிரள் நோன்காழ் திருத்திநெய் யணிந்து
கடியுடை வியனக ரவ்வே யவ்வே
பகைவர்க் குத்திக் கொடுநுதி சிதைந்து
(ரு) கொற்றுறைக் குற்றில மாதோ என்றும்
உண்டாயிற் பதங்கொடுத்(து)
இல்லாயின் உட னுண்ணும்
இல்லோ ரொக்கல் தலைவன்
அண்ணலெங் கோமான் வைந்நுதி வேலே.

(அ — ரை.) இவ்வே - இவைகள். பீலி - மயிற்பீலி. நோன் காழ் - வலியகாம்பு. கடி - காவல். வியன் - அகன்ற. கொடுநுதி - கங்குநுனி. ஒக்கல் — சுற்றம்.

---

## 34. திருவருட் பெரியாருந் தீயோரும்

முற்காலத்தில் திருவாரூர் என்னுந் திருப்பதியிலே தத்துவப் பிரகாசர் என்னும் பெயருடைய ஒரு பெரியார் இருந்தார். அவர் திருவருள் நலமுங் கைவரப்பெற்ற சிறப்புடையார். அவர் வாக்கினிலே எது கூறினும் அஃது அவ்வாறே நிகழும். அவர் பெரிய அறிஞர். அப்பெரியார் ஒருபொழுது,

மருவுபுகழ் க்ருட்ண மகராச ராணை
அரிய வடமலையா ராணை—திருவாரூர்ப்
பாகற் கொடியறுப்பார் பாதத் திருவாணை
த்யாகக் கொடியிறக்கா தே.

என்னுஞ் செய்யுளைப் பாடித் திருவாரூர்க் கொடியிறங்காமல் தடுத்துவிட்டார். அப்பெரியார் தம்முடைய அறிவாற்றலினலே மற்றும் பல வியத்தகு காரியங்களையும் ஆற்றியுள்ளார்.

அத்திருவாரூரிலே சில தீயோர்களிருந்தார்கள். அவர்கள் பிறருக்குத் தீமை செய்வதில் கைதேர்ந்தவர்கள். பொல்லாதவர்களுக்கு மட்டுமன்றி நல்லவர்களுக்கும் அல்லல் செய்வதே அவர்களுடைய தொழில். சுருங்கக் கூறுமிடத்து அவர்கட்கு வால் இல்லாதது ஒன்றுதான் குறைவாக விருந்தது. நாளடைவில் அத் தீயோர்களுடைய தொல்லை பெரியதாகிவிட்டது. சில நல்லோர் தத்துவப் பிரகாசரைக் கண்டு, அத் தீயோர்களை நல்லவர்களாகச் செய்து மற்றவர்களுடைய அல்லலைப் போக்க வேண்டுமென்று வேண்டிக்கொண்டனர்.

அதற்குத் தத்துவப் பிரகாசர், 'நாம் பாம்பு கடித்தால் அதன் நஞ்சினை இறக்குவோம். பசாசு அடித்தால் திரு நீறிட்டு அதனையும் போக்குவோம். வேம்பின் கசப்பும் அறும்படியாகக் கறியாக்குவோம். யானையினுடைய மதத்தையுந் தணிப்போம். இறக்கும்பொழுது திடமாகப் பேசும் வன்மையையும் அளிப்போம். நாம் இவ்வுலகத்தில் கற்றுத் தெளியாதது ஒன்றுமில்லை. ஆனல் தீய

வர்களை நல்லவர்களாகச் செய்து நற்குணமுண்டாக்கும் செய்கை ஒன்று மட்டும் அறிந்துகொள்ளவில்லை. ஆகையால் அத்தீயோர்களை நல்லவர்களாகச் செய்யமுடியாது' என்று கூறிவிட்டார்.

தத்துவப் பிரகாசரின் மொழிகளைக் கேட்டோர் அந்தோ, தீயோர்கள், பாம்பு பசாசு மதங்கொண்ட யானை முதலியவைகளைப் பார்க்கினும் கொடியவர்களாக இருக்கின்றார்களே என்று வருந்திச்சென்றனர்.

பாம்புகடித் தாலதுவு மீட்க வல்லோம்
பசாசறைந்தால் நீறிட்டுப் பார்க்கவல்லோம்
வேம்புகசப் பறக்கறியும் ஆக்க வல்லோம்
விறல்வேழத் ததிமதந்தணிக்க வல்லோம்
சாம்பொழுது திடமாகப் பேச வல்லோம்
தரணியின்மேற் கல்லாத தொன்று மில்லை
தீம்பரைநல் லவராக்கிக் குணமுண்டாக்கும்
. திறமறியா தேநின்று திகைக்கின் றோமே

(அ - ரை.) விறல் வேழம் - வெற்றியையுடைய யானை. தரணியின்மேல் - உலகத்தில். தீம்பர் - தீயோர்.

## 35. காவலர்க்குக் கபிலரின் அறவுரை

அருணகிரிநாத அடிகளால், 'பாரியானை கொடைக் கொண்டலே' என்று சிறப்பித்துப் பாடப் பெற்றவன் வேள்பாரி என்னும் வேந்தர் பெருமான். அவன் கொடைச் சிறப்பு அந்நாளில் தமிழுலகமெங்கும் இனிது பரவிநின்றது. வேள் பாரியின் மாபுகழைக் கண்ட மூவேந்தரும் பொரு

மைத் தீயால் நன்கு சுடப்பெற்று நொந்தனர். அந்தோ, பாரியின் கொடைப்பெருமையால் நம் கொடைப் பெருமை ஞாயிற்றுக்கு முன் உடுவின் ஒளி மழுங்கினாற்போல மழுங்கிவிட்டதே என்று மனம் புழுங்கினர். எவ்வாறேனும் பாரியைத் தொலைத்துவிட வேண்டுமென்று ஒருங்கு கூடி முடிவு செய்தனர். தம்படைகளைத் திரட்டிக் கொண்டு சென்று பாரியின் பறம்பு மலையை முற்றுகை யிட்டனர். நாட்கள் பல சென்றன. அறவலி மிக்க பாரியை மறவலி மிக்க மன்னர்களால் யாதுஞ் செய்ய முடியவில்லை. பாரியின் அவைக் களப் புலவராகிய கபிலர் என்னும் புலவர்பெருமான் அக்காலை மூவேந்தரையுஞ் சென்று கண்டார். அவ்வரசர்களைப் பார்த்து, 'மிக்க வலிமையோடு கூடிப் போர் செய்கிற படைப்பெருக்கினையுடைய நீங்கள் மூவரும் ஒன்றுசேர்ந்து போர் செய்தாலும் பறம்பு கொள்ளுவதற்கு மிக வருமையானதாகும். குளிர்ச்சி பொருந்திய பறம்பு நாடு முந்நூறு ஊர்களை யுடையதாகும். அம்முந்நூறு ஊர்களையும் பரிசில் விரும்பிவந்தோர் அடைந்து விட்டனர். இப்பொழுது யாமும் பாரியுந்தான் மிகுதிப்பட்டுள்ளோம். அஃதோடு பறம்பு மலையும் உள்ளது. நீர் பாடிக்கொண்டு வருவீராயின் போரின்றியே அடையலாகும்' என்று அறிவுரை கூறி யகன்றார். மூவேந்தர்களோ புலவர் அறிவுரையைக் கொள்ளாது போர் செய்து பாரியைக் கொன்று உலகம் உள்ள அளவும் நிலைத்துநிற்கும் பெரும்பழியைத் தேடிக்கொண்டனர்.

கடந்தடு தானை மூவிருங் கூடி
உடன்றனி ராயினும் பறம்புகொளற் கரிதே
முந்நூ றூர்த்தே தண்பறம்பு நாடு
முந்நூ றூரும் பரிசிலர் பெற்றனர்
(ரு) யாமும் பாரியு முளமே
குன்று முண்டுநீர் பாடினிர் செலினே.

(அ - ரை.) கடந்து அடு தானை - வஞ்சனையின்றிப் பகைவர் மீது சென்று தாக்கும்படை. உடன்றனிராயினும் - போர் செய்தீர்களாயினும்.

---

## 36. புளியங்கிளை ஒடித்த புலவர்.

முன்னாளில் பாண்டிய நாட்டின்கண்ணே வீர பாண்டியப்புலவர் என்னும் பெயருடைய ஒரு புலவர் பெரும்புகழுடன் விளங்கியிருந்தார். அவர் முருகக் கடவுளுடைய திருவருளை நிரம்பப் பெற்றவர். அவர் தம்முடைய வாக்கினாலே யாதுகூறினும் அஃது அவ்வாறே பலிக்கும். ஆயினும், அப்புலவர் வசை பாடி யாருக்குந் தீமை செய்ததில்லை. தம் ஆற்றலை ஒவ்வொருவருக்கும் நன்குபுலப்படுத்தி அவர்களால் நல்லபயனை யடைந்துவந்தார்.

அந்நாளில் ஒரு முகமதிய அமைச்சன் ஆற்றூர் என்னும் ஊரில்வந்து தங்கியிருந்தான். வீர பாண்டியப்புலவர் அம்முகமதிய அமைச்சனைச் சென்றுகண்டார். புலவரின்பெருமையை நன் குணராத முகமதிய அமைச்சன் புலவரைத் தக்காங்கு போற்றாமல், 'நீர் யார்? எங்கே வந்தீர்?' என்று கேட்டான். வீரபாண்டியப்புலவர், தாம்

ஒரு புலவரெனவும் தெய்வத்திருவருளால் வியத்தக்கு காரியங்களைப் புரியக்கூடு'மென்றுந் தெரியப்படுத்தினர்.

புலவர் கூறியதைக் கேட்ட அமைச்சன் அவருடைய ஆற்றலிலே ஐயங்கொண்டான். அப்பொழுது அவனிருந்த இடத்திலே ஒரு புளியமரம் இருந்தது. அவன் புலவரைப் பார்த்து, இந்தப் புளியமரத்தின் கிளையொன்றை உம்முடைய அருளாற்றலாலே முறிந்துவிழும்படியாகச் செய்யும் பார்க்கலாம். அவ்வாறு செய்யாதொழிவீராயின் நான் உம்மைக் கடுமையாகத் தண்டிப்பேன்' என்று கூறினன். புலவர் அமைச்சன் கூறியதற்கு இணங்கினர். 'நான் விரும்பியஇடத்தில் முறிந்து விழச்செய்தால் நான் முன்னரே வாளால் அறுத்து வைத்திருந்து முறிந்துவிழச்செய்ததாக நீர் நினைக்கவுங்கூடும். அத்தகைய ஐயத்திற்கு இடமில்லாமல் நீவிர் விரும்புகிற கிளையிலே விரும்புகிற இடத்திலே சுண்ணும்பினலே ஓர் அறிகுறியைச் செய்யும்; அந்தவிடத்திலே முறிந்து விழுமாறு செய்கிறேன்' என்றார் புலவர்.

அமைச்சன் சுண்ணும்பைக்கொண்டு ஒரு கிளையின் ஓரிடத்திலே அறிகுறி செய்யுமாறு செய்தான். பிறகு புலவரைப் பார்த்து, 'அறிகுறி செய்யப்பட்டுள்ள விடத்திலே அப்புளியங்கிளை முறிந்து விழுமாறு செய்யும் பார்க்கலாம்' என்றான்.

புலவர், முருகக் கடவுளை நோக்கி, 'செந்தூர்க்கு இறைவனே! எவ்வாருயினும் இப்புளியங் கிளையானது முறிந்து விழுதல் வேண்டும்' என்று முரு

கனை நோக்கி வேண்டினர். அவ்வளவில் அப்புளி யங்கிளை, 'சட சட'வென்னும் ஒலியுடன் முறிந்து நிலத்திற் சாய்ந்தது. முகமதிய அமைச்சன் திடுக் கிட்டான். புலவரின் பெருமை அமைச்சனுடைய உள்ளத்திலே அச்சத்தை யுண்டாக்கியது. இவரை நாம் போற்ருவிடின் இவரால் நமக்கு ஏதம் ஏதும் நிகழ்தலுங் கூடுமென்று முடிவுசெய்தான். அவ ரைப் பலவாறு புகழ்ந்து போற்றினன். தான் அணிந்திருந்த விலையுயர்ந்த அணிகலன்களை யெல் லாம் புலவருக்கு வழங்கினன். புலவரும் அவைகளை யெல்லாம் மகிழ்ச்சியுடன் பெற்றுக்கொண்டு திரும் பினர்.

எப்படியுஞ் செந்தூர்க் கிறையவா இப்புளியம்
கொப்பொடிய வேண்டுங் குருபரா—செப்பனைய
கொங்கைக் குறத்தி கொழுநாநந் தெய்வானை
மங்கைக் கிசைந்தகண வா

(அ - ரை.) புளியம் கொப்பு - புளியங் கிளை.

## 37. மக்கட் பேற்றின் மாண்பு

பாண்டியன் அறிவுடை நம்பியின் அவைக் களத்திற்கு ஒரு பெரியார் வந்தார். அவருக்குப் பதினன்கு பிள்ளைகள். ஒன்பது பெண்பிள்ளைகள்; ஐந்து ஆண்பிள்ளைகள். அப்பிள்ளைகளால் அவர் பலவகைத் தொல்லைகளையும் அடைந்தார். அவ ருடைய செல்வத்தின் பெரும்பகுதி பெண்களைத் திருமணஞ் செய்து கொடுப்பதிலேயே தொலைந்து போயிற்று. 'ஐந்து பெண் பிறந்தால் அரசனும் ஆண்டியாவான்' என்பது பழமொழியல்லவா?

அப்பெரியார் மக்கட்பேற்றின் தொல்லைகளைப் பற்றி அறிவுடை நம்பியிடம் மிகுதியாகத் தெரிவித்தார். 'பெண் குழந்தைகளால் திருமணச் செலவு ஏற்பட்டுச் செல்வம் அழிகிறது. ஆண் குழந்தைகளோ தாய் தந்தையரை அடித்து வைது துன்புறுத்துகின்றன. மேலும், அவைகளுக்குப் பொருள் சேர்த்து வைப்பதே தந்தைக்குப் பெரும் வேலையாக முடிகின்றது. இந்த அல்லல்களை யெல்லாம் பார்க்குமிடத்து மக்கட்பேறற்றிருத்தல்தான் மிக்க நலம் என்று எனக்குத் தெரிகிறது' என்று மக்களால் உண்டாகும் தொல்லைகளைப்பற்றிப் பல வகையாகக் கூறினார். ஆனால் பாண்டியன் அறிவுடைநம்பியின் உள்ளக்கிடக்கை பிள்ளைப்பேற்றைப்பற்றியவரையில் வேறுவிதமாக விருந்தது. அவன் பெரியாரைப் பார்த்துப், 'பெரியீர்! தாங்கள் கூறியன எனக்கு உடன்பாடன்று. மக்கட்பேற்றை யான் மிகு சிறப்புடையதாகவே கருதுகின்றேன். பெறத்தக்க செல்வம் பலவற்றையும் பெற்றுப் பலரோடும் உடனுண்ணும் உடைமை மிகுந்த செல்வத்தை யுடையவராயினும் இடையே தள்ளாடித் தள்ளாடி நடந்துவந்து சிறுகையை நீட்டி, உண்ணும் உணவினை இட்டும் தொட்டும் கவ்வியும் கையாற் கிண்டியும் நெய் பொருந்திய உணவினை உடம்பின்கண் படச் சிதறியும், அறிவை இன்பத்தால் மயக்குகின்ற மக்களைப் பெற்றிராதவர்களுக்கு அவர்கள் வாழும் நாட்களின்கண் பயனாகிய முடிக்கப்படும் பொருள் இல்லை. ஆதலினால், யான் தாங்கள் கூறியதற்கு நேர்மாறான எண்ணத்தை யுடையவனாக

விருக்கின்றேன்' என்று கூறினான். அறிவுடை நம்பியின் மொழிகளைக் கேட்ட பெரியார் அவரவர் நிலைமைக்குத் தகுந்தவாறு உலகத்துப் பொருள்கள் பலவகையான போக்குடையனவாக விருக்கின்றன என்று பேசாதிருந்தார்.

படைப்புப்பல படைத்துப் பலரோ டுண்ணும்
உடைப்பெருஞ் செல்வராயினும் இடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்து
நெய்யுடை யடிசில் மெய்பட விதிர்த்து
மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை யில்லைத்தாம் வாழு நாளே.

(அ - ரை.) படைப்பு - படைக்கப்படுஞ் செல்வம். குறுகுறு நடந்து - தள்ளாடி நடந்து. துழந்து - கிண்டி. அடிசில் - சோறு. மெய் - உடல். விதிர்த்து - சிதறி.

## 38. குற்றால மலைவளம்

ஒரு குறத்தி ஊர் ஊராகக் குறி சொல்லிக் கொண்டு சென்றாள். ஓர் ஊரிலே ஒரு மங்கை குறத்தியைக் கண்டு, 'நீ எங்கிருந்து வருகிறாய்? எப்பொழுதும் நீ நிலைத்து வாழும் இடம் எது? அந்த இடத்தின் சிறப்பைப்பற்றி எனக்குச் சிறிது சொல்வாயாக!' என்று கேட்டாள்.

மங்கையின் மொழிகளைக் கேட்ட குறமங்கை, 'நான் நிலையாக வதிந்திருப்பது குற்றாலத் திரிகூட மலையாகும். அம்மலை எத்தகைய வளமுடைய தென்பையாகில் ஒரு சிறிது கூறுகிறேன் கேட்பாயாக.

குரங்குகளானவை மரக்கிளைகளிலுள்ள கனிகளைப் பறித்துக்கொடுத்து மந்திகளொடு கொஞ்சிக் கொண்டிருக்கும் ஒருபால். ஒருபால் மந்திகள் சிந்துகிற கனிகளின் பொருட்டுத் தேவர்கள் அவைகளைக் கெஞ்சிக் கொண்டிருப்பார்கள். மலையில் வாழும் குறவர்கள் தேவர்களை நோக்கி ஒரு பக்கத்திலே அழைத்துக்கொண்டிருப்பார்கள். வான்வழியாகச் செல்லும் சித்தர்கள் ஒரு பக்கத்திலே வந்து, மலையிலுள்ள மருந்துகளைக்கொண்டு உடல் வளஞ் சிறந்தோங்கும்படி காயசித்தி செய்துகொண்டிருப்பார்கள். மலை விண்ணளாவி விளங்குவதாகையால் பல வகைத் தேன்களும் ஒன்று திரண்டு அருவியாகச் சென்றுகொண்டிருக்கும். அந்தத் தேனருவியின் அலையெழுந்து வானின் வழியாக எப்பொழுதும் ஒழுகிக்கொண்டிருக்கும். அவ்வாறு ஒழுகின வான் வழி சேறாக விருப்பதால் செங்கதிரோன் தேரில் பூட்டியுள்ள பரியின் கால்களும் தேரின் உருளைகளும் வழுக்கிக்கொண்டு செல்லும். இம்மட்டு மன்று; இன்னும் அம்மலையின் வளங்கள் பலவாகு' மென்று மலைக்குறமாதானவள் நாட்டு மங்கைக்கு நலமுற நவின்றாள்.

வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்
கானவர்கள் விழியெறிந்து வானவரை யழைப்பார்
கவனசித்தர் வந்து வந்து காயசித்தி விளைப்பார்
தேனருவித் திரையெழும்பி வானின்வழி யொழுகும்
செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழுகும்
கூனலிளம் பிறைமுடித்த வேணியலங் காரர்
குற்றாலத் திரிகூட மலையெங்கள் மலையே.

(அ - வை.) வான்கவிகள் - தேவர்கள். விழியெறிந்து - கண் பார்வையைச் செலுத்தி. கவனசித்தர் - விண்வழியாக நடக்கும் சித்தர். பரிக்கால் - குதிரைக்கால். வேணி - சடை.

---

## 39. நரிவெரூஉத்தலையாரின் நல்லுரை

முன் நாளிலே ஒரு பெரியவர் இருந்தார். அவர் மிகுந்த அறிவாளி. அவருடைய தலை மிகவும் பெரிதாகவும் எதற்கும் அஞ்சாத நரிகூடக் கண்டு அஞ்சும்படியாகவும் இருந்தது. அதனால் அவருடைய பெயர் 'நரிவெரூஉத்தலையார்' என்று பலராலும் காரணப்பெயராக வழங்கப்பெற்று விளங்கியது. அவர் ஒரு சமயம் ஓர் ஊருக்குச் சென்றார். அவ்வூரினர் பலர் அகவை முதிர்ந்து மிகப் பெரிய தொண்டு கிழவர்களாக விளங்கினர். அகவை தான் முதிர்ந்திருந்ததேயொழிய அறிவு சிறிதும் முதிரவில்லை. அறிவற்ற கீழ்மக்களாகவே விளங்கினர். அவர்கள் பிறருக்குத் தீமை செய்வதற்குச் சிறிதும் நாணவில்லை. இளைஞர்களைப்போலத் தீய காரியங்களை மிகுதியாகப் புரிந்துகொண்டு திரிந்தனர்.

அகவை முதிர்ந்து, மீசை, தாடி, தலை மயிர் எல்லாம் கயல்முள்ளைப் போல வெளுத்து, நரைத்திருந்த பயனில்லாத மூப்பினையுடைய அவர்கள் புரிந்த காரியங்கள், நரிவெரூஉத்தலையாருக்கு மிகுந்த இரக்கத்தை யுண்டாக்கின. 'அந்தோ, இவர்கள் இவ்வாறு அகவை முதிர்ந்தும் அறிவுமுதிராமல் காரியம் புரிகின்றார்களே' என்று வருந்தினார். அவர்களுக்கு நல்லுரைகள் பல நவிலலானார்.

"பலவாக அமைந்த குணங்களை யுடையீர்! கயலினது முள்ளினைப் போன்ற நரையினையும் திரையினையும் உடையீர்! பயனில்லாமல் மூத்திருக்கின்ற பெரியீர்! மழுவாகிய கூரிய படைக்கலத்தினையும் மிகுந்த வலியினையு முடைய கூற்றுவன் தன் கைப் பாசக் கயிற்றினால் கட்டி யிழுத்துக்கொண்டு செல்லும்போது மிகவும் வருந்துவீர். நீங்கள் பிறருக்கு நன்மையைச் செய்யமாட்டீர்களாயினும், தீமையை யாவது செய்யாமலிருப்பீர்களாக. அதுதான் எல்லோருக்கும் மகிழ்ச்சியை உண்டாக்குவதுடன் நல்வழியிலுஞ் செலுத்துவதாகும்" என்றிவ்வாறு அவர் கூறிய உரையைக் கேட்டு, அகவையிற் பெரிய அச்சிறியார்கள் ஒருவாறு திருந்தினர்.

பல்சான் றீரே பல்சான் றீரே
கயன்முள் ளன்ன நரைமுதிர் திரைகவுட்
பயனின் மூப்பிற் பல்சான் றீரே
கணிச்சிக் கூர்ம்படைக் கடுந்திற லொருவன்
(5) பிணிக்குங் காலை யிரங்குவிர் மாதோ
நல்லது செய்த லாற்றீ ராயினும்
அல்லது செய்தல் ஓம்புமி னதுதான்
நல்லாற்றுப் படூஉ நெறியுமா ரதுவே.

(அ — ரை.) பல்சான்றீர் - பலவாக அமைந்த குணங்களை யுடையீர்! பயன் இல் மூப்பு - பயனில்லாத மூப்பு, கணிச்சி - மழு. நல் ஆற்றுப்படூஉம் - நல்வழியின்கண்ணே செலுத்தும்.

## 40. "கச்சியப்பனை யுதைத்த கால்"

வல்லைக் கச்சியப்பர் என்பவர் பெருஞ் செல்வர். அவரை ஒரு சிற்றரசர் என்றே சொல்லலாம். புலவர்களைப் போற்றிப் புரப்பதில் அவர் தமக்கு யாரும் நிகரில்லாதவர். எப்பொழுது நோக்கினும் அவருடைய வீடு புலவர் கூட்டத்தால் நிறைந்து விளங்கும்.

ஒருநாள் இரவு கச்சியப்பர் தம்முடைய வீட்டிலே மகிழ்ச்சியோடு மனைவி மககளுடன் அளவளாவி இன்புற்றிருந்தார். அப்பொழுது கச்சியப்பருடைய இளங்குழந்தை யொன்று கச்சியப்பருடைய தோள்மேலே ஏறி விளையாடிக்கொண்டிருந்தது. பிறகு அது கச்சியப்பரைப் பலவிதமாக உதைத்தது.

மறுநாள் புலவர் இல்லத்திலே பல புலவர்கள் பரிசிலின் பொருட்டுக் கச்சியப்பர்மீது அருமையான செய்யுட்கள் பல பாடிக்கொண்டு வந்திருந்தனர். அப்புலவர்களுக்குள்ளே மிகவும் சிறந்தவர் யார் என்பதைக் கண்டுபிடிக்க விரும்பினர் கச்சியப்பர். அவர் அதற்கு ஒரு சூழ்ச்சியும் செய்தார். புலவர்களைப் பார்த்து, 'நெருநல் இரவு ஒரு பையல் என்னை அந்தப்புரத்திலே உதைத்துவிட்டான்' என்று கூறினர்.

கச்சியப்பர் கூறியதைக் கேட்ட அளவில், ஒரு புலவரைத் தவிர மற்றைப் புலவர்களெல்லாரும் உள்ளம் பதைத்தனர். 'ஆ ஆ, தங்களை யுதைத்த

அக்கொடியோனைச் சும்மாவா விட்டுவிட்டீர்கள்?' என்றார் ஒரு புலவர். மற்றொரு புலவர், 'அப் பைய லுடைய கால்களை ஒடித்துவிட வேண்டும்' என்றார். வேறொரு புலவர், 'வள்ளலாகிய தங்களுடைய பெருமை அற்பர்களுக்குத் தெரியுமா?' என்றார். இவ்வாறு ஒவ்வொருவரும் தத்தமக்குத் தோன்றிய வாறு பேசினர். அதுவரையில் யாதும் பேசா திருந்த அப்புலவர், 'தங்களை யுதைத்தவனுடைய காலிலே மண்படக்கூடாது; வெயில் படக்கூடாது. அற்பர்களுடைய பார்வையும் படக்கூடாது. அந்தக் கால்களுக்குப் பொன்னிலே தண்டையுங் கொலுசுஞ் செய்துபோட்டு முத்தமிடுதல் வேண்டும்' என்றார். கச்சியப்பர் அங்குவந்துள்ள புலவர்களுக் கெல்லாம் அவரே சிறந்தவரென்று தெரிந்து அவரை மிகவும் போற்றினர். மற்றைப் புலவர்கள் மிகுந்த நாணமடைந்தனர்.

> மண்படுமோ வெய்யிலிலே வாடுமோ புல்லரிரு
> கண்படுமோ வன்பாகக் கற்றவர்க்கு—மண்புகழ
> மெச்சியுப்பா லும்புகழும் வீறுவல்லை யாளவந்த
> கச்சியப்ப னையுதைத்த கால்.

(அ - ரை.) வீறு வல்லை - மிக்க புகழினால் சிறந்து விளங்கும் வல்லை என்னும் ஊர்.

## 41. குலத்தொழில் தானே வரும்

முன்பு ஒரு காலத்தில் சோழவள நாட்டைக் கரிகாற்சோழன் என்னும் பெயரினையுடைய அரசிளங்குமரன் அரசாட்சி செய்துகொண் டிருந்தான். அவன் மிகவும் இளைஞன். அவன் அரசாட்சி புரியத்தக்க அகவை யெய்துவதற்குமுன்னரே தெய்வத் திருவருளால் அரியணையமர்ந்து செங்கோல் செலுத்திக்கொண் டிருந்தான்.

அக்காலத்தில் இரு முதியோர் ஒரு காரியத்தில் தமமுள் மாறுபட்டு அதனைத் தீர்த்துக்கொள்ளுதற் பொருட்டு அரசனிடம் வந்தனர். அரசன் மிகவும் இளைஞனை விருத்தலைக் கண்ட அவர்கள் நம்முடைய வழக்கைத் தீர்த்தற்கு இவனால் முடியுமா என்று எண்ணமிட்டனர். குலத்தொழில் ஒவ்வொருவருக்கும் இயற்கையாகவே அமைந்திருக்கு மென்பதை அம்முதியோர் உணர்ந்துகொள்ளவில்லை.

முதியோர்களுடைய எண்ணம் அரசிளங்குமரனாகிய கரிகாற்சோழனுக்கு நன்கு தெரிந்தது. அவன் உடனே அரசிருக்கை மண்டபத்தைவிட்டு எழுந்து உள்ளே சென்றான். சிறிது நேரத்திற் கெல்லாம் நரைதிரைமூப்புடன் கூடிய ஒரு பெரியார் அரியணையில் வந்து அமர்ந்தார். அவர் முதியோரின் வழக்கைக் கேட்டார். நன்கு ஆராய்ந்தார். இருவருக்கும் மன நிறைவு உண்டாகும் வகையில் முடிவு கூறினார். அம்முடிவு இருவருக்கும் மகிழ்ச்சியை யுண்டாக்கிற்று. அவ்வளவில் அரியணையில் அமர்ந்

திருந்த பெரியாரின் கோலம் அகன்றது. இளைஞனாகிய கரிகாலனே அரியணையில் அமர்ந்திருக்கக் காணப்பட்டான். முதியோர் இருவரும் தம் பொருட்டே அரசிளங்குமரன் முதுமைக்கோலம் பூண்டிருந்ததை யுணர்ந்து வியப்படைந்தனர்.

உரைமுடிவு காணான் இளமையோன் என்ற
நரைமுது மக்கள் உவப்ப—நரைமுடித்துச்
சொல்லான் முறைசெய்தான் சோழன் குலவிச்சை
கல்லாமற் பாகம் படும்.

(அ - ரை.) உரைமுடிவு - அறவுரை முடிபு. நரைமுது மக்கள் - பெரியோர். உவப்ப - மகிழ. நரைமுடித்து - முதுமைக் கோலம் பூண்டு. குலவிச்சை - குலத்தொழில். பாகம்படும் - செம்மைப்படும்.

---

## 42. "நண்டு வந்தால் தெரியும்"

முன் நாளில் சேது நாட்டில் வெண்பாப்புலிக் கவிராயர் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் அடிக்கடி புலால் உண்டலின் இழிவைக்குறித்துச் சொற்பொழிவுகள் செய்வது வழக்கம். வெண்பாப்புலிக் கவிராயரின் ஊரான செவ்வூருலே 'கருத்தான்' என்று பெயருடைய ஒரு புலையன் இருந்தான். அவன் நண்டைக் கண்டால் மண்டிப்பிடித்துக் கறியாக்கி உண்டுவிடுவான்.

புலவரின் சொற்பொழிவுகளை அடிக்கடி கேட்டுக்கொண்டிருந்த கருத்தான் ஒருநாள் புலவரையடைந்து, தான் இனிமேல் புலாலுணவுகளையும்,

நண்டு வேட்டையையும் ஒழித்துவிட்டுத் திருந்திய சைவனாகிவிடப் போவதாகப் புகன்றான். கருத்தான் கழறிய சொற்களிலே புலவருக்கு நம்பிக்கை பிறக்கவில்லை. அவர் கருத்தானைப் பார்த்து,

"மலரினுடைய நறுமணம் வண்டு வந்து கிண்டினால் வெளிப்படும். குதிரையினுடைய விரைவு நடத்திக்கொண்டுவந்து பார்த்தால் தெரியும். பிறருடைய குணமும், விருப்பமும் பழகிக்கொண்டு வந்தால் தெரியும். கறிக்கு உதவுகின்ற நண்டானது வந்தால் கருத்தான் சொல்லுகிற சொல்லுறுதியின் நயமும் விளங்கும்' என்று கூறினார்.

"வண்டுவந் தால்தெரி யும்மலர் வாசம் வழிநடத்திக்
கொண்டுவந் தால்தெரி யும்பரி வேகம் குணத்துடனே
கண்டுவந் தால்தெரி யும்பிறர் வாஞ்சை கறிக்குதவும்
நண்டுவந் தால்தெரி யுங்கருத் தானுடை நாணயமே.

(அ - ரை.) பரிவேகம்-குதிரை விரைவு. வாஞ்சை-விருப்பம். நாணயம்-சொல்லின் உறுதி.

**எட்டாம் பகுதி**

**முற்றும்.**